Sangathamil

# சங்கத்தமிழ்

குரல் – 11 | சர்வதேச மின் செய்தித்தாள் | 15 அக்டோபர் 2021




## கனடாவில் திரிபு படுத்தப்படும்

# “மாவீரர் நாள்”




தாயக மண்ணிலிருந்து புலம் பெயர்ந்து கனடாவில் 4,00,000 ற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் தாயக நினைவுகளை சுமந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு தங்களையும் மிஞ்சி, எவ்வளவே குடும்பசுமைகளுக்கு அப்பாலும் (2004ற்கு முன்) தமிழனுக்கு நாடு வேண்டும், தமிழீழ விடுதலைப் போராட்டம் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் காலத்தில் வெற்றியடைய வேண்டும் என்பதற்காகவும் தங்களையும் மீறி தங்களுடைய சக்திக்கு மேலாகவும் உதவிகள் புரிந்தார்கள். ஆனால் அவற்றில் முழுமையாக சென்றடையாவிட்டாலும் 75 வீதம் சென்றடைந்ததாகவே தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் 2005ம் ஆண்டுக்குப்பின் கனடாவில் மக்களிடம் சேகரிக்கப்பட்ட பணத்தில் 20 வீதம் ஆன பணம் கூட நாட்டுக்கு சென்றடையவில்லை என்பதே உண்மை.

**தற்போதைய விடயத்திற்குவரு வோம்.**

2009ம் ஆண்டுவரை ஒவ்வொரு நவம்பர் மாத்திலும் தமிழீழ விடுதலைக்காக தங்கள் இளமைக் காலங்களை துறந்த, தாய் தந்தையர் உறவுகளை விட்டு, சகல ஆசாபாசங்களையும் விட்டு விட்டு, உயிர் தமிழிற்காகவும் - உடல் மண்ணிற்காகவும் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரனின் வழிகாட்டிலில் களமாடி வீரச்சாவை தழுவியவர்கள் எங்கள் மாவீரர்கள். அந்த வகையில் 1989ம் ஆண்டு நவம்பர் மாதம் 27ம் நாள் முதலாவது மாவீரர் நாள் முன்னெடுக்கப்பட்டது. 1989ம் ஆண்டு இந்திய அமைதிப்படையின் ஆக்கிரமிப்பில் முழுத் தமிழீழ மண்ணும் இருந்த போதும் கூட மணலாற்றுக் காட்டில் வைத்து தலைவர் அவர்களால் தமிழீழ தேசியக் கொடி ஏற்றிவைக்கப்பட்டே தமிழீழ மண்ணிற்காக வீரச்சாவை தழுவியவர்களுக்கான “மாவீரர் நாள்” வீர வரலாற்றுமுறை நடைமுறைக்கு வந்தது.

அந்தவகையில் உலகம் பூராகவும் தலைவர் காட்டிய வழியில் “மாவீரர் நாள்” என்ற சொற்பதத்துடனேயே ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 27ம் நாளில் மண்ணிற்காக வீரச்சாவடைந்த மாவீரர்களின் நிளைவுகளை தாங்கி மாவீரர் நாள் நடைபெறுகிறது... ஆனால் 4,00,000 ஈழத்தமிழர்கள் வாழும் கனடாவில், நான்கு அல்லது ஐந்து பேர்களால் மட்டும் முடிவெடுக்கப்பட்டு “நினைவெழுச்சி நாள்” என்று 2009க்கு பிற்பட்ட காலத்தில் இச் சொற்பதம் இறுக்கமாக பாவிக்கப்பட்டு வருகிறது.

இந்த நாட்டில் “மாவீரர் நாள்” என்ற சொற்பதம் பாவிப்பதற்கோ அல்லது எமது பாரம்பரிய, தமிழருக்கே உரித்தான, தமிழரின் தேசியக் கொடியான புலிக் கொடியை ஏற்றி மாவீரர் நாள் மட்டுமல்ல எந்த செயற்பாட்டை செயவதாற்கும் இந்த கனடா நாட்டில் எந்த தடையும் இல்லை என்பதை ஆணித்தரமாக சொல்லிக் கொள்ள விரும்புகிறோம். ஆகவே கனடா வாழ் தமிழ் மக்களை ஏமாற்றி, இவர்களுக்கு அச்ச உணர்வை ஏற்படுத்தி தாங்கள் நினைத்தபடி மாவீா் நாளையும் கொச்சைப்படுத்தி நினைவெழுச்சி நாள் என்ற போர்வையில் மக்களையும், மாவீரர்களையும் ஏமாற்றாதீர்கள்.

நினைவெழுச்சி அகவம் கனடா என்று ஒரு குழுவை நியமித்து, அவர்கள் எடுப்பத தான் முடிவு என்றும் அதன்படி தான் செயற்படுவோம் என்று கூறுவதும் தமிழீழ மண்ணிற்காக வீரச்சாவடைந்த மாவீரர்களை சொச்சைப்படுத்துவதாகவே கருதப்படுகிறது.

இப்படியான பெயர் மாற்றங்களும் - தான் தோன்றித்தனமான ஒரு சிலர் முடிவுகளும், தலைவரின் சிந்தனைகளுக்கும், தமிழீழத்திற்கும், மாவீரர்களின் கனவுகளுக்கும் செய்யப்படும் துரோகங்களாகவே கருத வேண்டியுள்ளது.

அகவம் என்ற போர்வையில் எடுக்கப்படுகின்ற முடிவுகள் நாட்டின் நலன் சார்ந்தவைகளாகவும், மாவீரர்களின் கனவுகளுக்கும், தலைவரின் சிந்தனைகளுக்கும் செயல் வடிவம் கொடுப்பவையாக இருக்க வேண்டுமே தவிர அவற்றை சிதைப்பவையாக இருக்கக்கூடாது என்பதே எமது வேண்டுகோள்.

இவ்வளவு காலமும் நாட்டிற்காக மக்களிடம் இருந்து பெறப்பட்ட பணம் எவ்வாறு நாட்டிற்கு போய் சேரவில்லையே அதேபோல், தலைவரின் பிறந்தநாள் விழா என்ற போர்வையில் சேகரிக்கப்படும் பணமாக இருந்தாலும் சரி, மாவீரர் நாளை நினைவெழுச்சி நாள் என்ற போர்வையில் கொண்டாடுபவர்களாக இருந்தாலும் சரி மக்களை ஏமாற்றாதீர்கள். மாவீரர் நாளில் சேரும் பணம் கொஞ்சமல்ல என்பதை கனடா வாழ் தமிழ் மக்களும் சரி, வியாபாரா நிலையங்களும் சரி புரிந்து கொள்ளுங்கள்.

ஆகவே, நினைவெழுச்சி அகவம் என்ற போர்வைக்குள் இருப்பவர்களே, மக்கள் மத்தியில் உங்கள் சுய இலாபத்திற்காக, சுய நலத்திற்காக மக்கள் மத்தியில் பய உணர்வை துாண்டாதீர்கள். கனடாவை பொறுத்தவரை எமது மாவீரர்களை கௌரவிப்பதையோ, தேசியக் கொடியை ஏற்றி நிகழ்வுகளை செய்வதற்கோ எந்தத் தடையும் இல்லை என்பதை ஆணித்தரமாக கூறிக்கொள்கிறோம். ஆகவே 2021க்கான மாவீரர் நாளை “மாவீரர் நாள் 2021” என்ற பெயருடனே மாவீரர்களின் கனவை சுமந்தும், தமிழீழ மண்ணின் விடுதலைக்காக மடிந்த மாவீரர்களையும் கௌரவிப்போம். தமிழீழத் தேசியக் கொடி தமிழீழ மண்ணின் அடையாளம். தேசியக் கொடி ஏற்றத்துடன் நிகழ்வுகளை தொடங்கும்படியும் கேட்டுக் கொள்கிறோம். இவ் இரண்டையும் செய்ய முடியாதவர்கள் என்றால் எதுவுமோ செய்யாதிருங்கள். இவை இரண்டும் தமிழனுடைய அடையாளங்கள். தமிழனுடைய முகவரியை தொலைக்காதீர்கள். சிங்கள அரசின் சிந்தனைகளுக்கு செயல் வடிவம் கொடுக்கும் குழுவாக செயற்படதீர்கள் என்பதே எமது வேண்டுகோள்.

-குமரன்-

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

MORTGAGE ALLIANCE
Access Inc.
Independently Owned & Operated | FSCO: 11404
For All Your Mortgage Needs
• Purchase • Refinance
• First | Second Mortgage • Equity Line of Credit
Siva Sethunathan, B.A.
Mortgage Agent
416 725 1732
8130 Sheppard Ave E Suite 209
Toronot, ON M1B 3W3

NISHANTHAN LAW OFFICE
SERVICES
• Purchasing a Residential Property
• Selling a Residential Property
• Residential Mortgage Refinancing
• Wills and Powers of Attorney
NOTARY SERVICES
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
1200 Markham Rd., Lower Level Unit 5 & 7
Scarborough, On. (Markham / Ellesmere)

RANI TAILORS & FASHIONS
25 வருடம் அனுபவம் மிக்க மற்றும்
Sri Lanka, India, Germany போன்ற
நாடுகளில் தையல் கலையில் பிரபலமான
புஸ்பராணி மணியம் அவர்கள் இப்போது
Canadaவில் சேவையாற்றுகிறார்
25 Years of Service
தொடர்புகளுக்கு:
647.836.0654 Cell
647.945.8351 Home

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

A TAMILAN CARPET CLEANING
PROFESSIONAL STEAM
CAR & VAN
உங்கள் வீடு தேடி வந்து செய்து கொடுக்கப்படும்
வீடுகள், கொண்டோக்கள், வாடகை வசிப்பிடங்கள், விட்டின் படிகள், தரை விரிப்புகள், சோபாகள், மெத்தைகள் வாகன உட்புறம்...
இந்த விளம்பரத்தாலோ எந்த வேளைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

Annai's PRAGATI SIDDHA HERBAL CLINIC
A total wellness according to Natures Way!
Treatment based on Ancient Siddha Philosophy of Healing.
MASTER HEALER
PREMILA.S
Hereditary Genetic Siddha Practitioner (Royal Physician Treatment),
Spagyric Alchemist (CAN)
Alchemist (IND),
Natural Medicine Practitioner© (CAN)
Canada, Europe & India
TEL: 1647-278-3100
Email: pragatishc@gmail.com | Web: www.pragatisiddha.com

B.J டெய்லரிங் & ஜுவலரி
TAILORING & JEWELLARY CLASSES
We provide training in Jewellery Making & Tailoring Classes Available
ONLINE CLASSES AVAILABLE
உங்கள் தொடர்புகளுக்கு:
416.720.4472
jegathees2007@gmail.com

SARA TAILORS & FASHION
தையற் கலையில் 38 வருட அனுபவம் மிக்கவரின்
மேற்பார்வையில் தையல் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன
பாடத்திட்டம்: 3 மாதம், 6 மாதம், 2 வருடம்
65 வயதானவர்களுக்கு படிப்பதற்கு
$100 மட்டும்
சாரா தையல் பயிற்சி நிலைய ஆசிரியர் திருமதி சரஸ்வதி பாலராசா
Saree Blouse, Wedding, Birthday Garments, Flower Girl's Dresses
Ladies Garments, Maternity Gowns, Churithar, Children's Garments
Coat, Pants Hem, Alterations, Ironing
Sewing Classes (Full time & Part Time) Sewing Machine Repairs Etc.
2699 Eglinton Ave. East, Scarborough, ON. (Brimley & Eglinton)
Tel: 416-265-0025 / 647-270-1949 | Cell: 416-910-5351

K.S PAINTING & HARDWOOD
PROVINTING THE BEST SERVICE
NIRANJAN SELVARAJAH 647.406.7706
www.kspaintingandhardwood.com

Ideal Auto Tech Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

SCARBOROUGH HOME Renovation INC
...your Home Improvement Specialists
24 HOUR EMERGENCY SERVICE
Theepan
Cell: 647 218 7157
VALUE PACK HOME MAKEOVER:
• All General Home Repairs
• Basement Renovation
• Carpet Installation
• Drywall Installation
• Hardwood Flooring Installation
• Washroom Remodeling
• Kitchen Cabinets
• Kitchen Cabinets Installation
• Painting
• Plumbing
• Tiling
www:shr1.ca e-mail: y2k21@hotmail.com
At Scarborough Home Renovation, We' ve definitely get the Experience and the know-how to make your Dream Renovaiton...a practical Reality!

SELVAM GENERAL PEST CONTROL
Cockroaches, Silverfish, Carpet Beetles, Moths, Fleas
Rodents, Spiders, Wasps/Bees/Hornets & Ants...
எலி, பூச்சி தொல்லையிலிருந்து விடுபட
உடங்களுக்கு உதவிட 24 மணி நேரமும்
7 நாட்களும் இலவச மதிப்பீட்டுடன் 100 வீத
உத்தரவாதத்துடன் சேவையாற்றிட அழையுங்கள்
இந்த விளம்பரத்தாலோ எந்த வேளைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
Realty Inc. Brokerage
RAISING YOUR VALUE
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

Samraj Insurance Group Inc.
வாகனக் காப்புறுதி, ஆயுட் காப்புறுதி,
வீட்டுக் காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கு அழையுங்கள்
Siva Ananthamoorthy (Licensed Insurance Agent)
வீடு வாங்க - விற்க சிறப்பான சேவை
Dr. Ananthamoorthy
416.823.3686 / 647.857.0086

அழகிய மனை நிறைவான வாழ்வின் தொடக்கம்! வீடு வாங்க விற்க அல்லது அது தொடர்பான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Higher Standard Agents... Higher Results!
HomeLife Landmark Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Parithi Sinnathamby
Sales Representative
416-904-7444
pari.sinnathamby@gmail.com
7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4 Tel: 905-305-1600 Fax: 905-305-1609

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
* AUDIT * CORPORATE TAXES
* REVIEW ENGAGEMENT * PERSONAL TAXES
* NOTICE TO READER * FINANCIAL PLANNING
* BUSINESS ADVISORY * CRA AUDITS
* CONTROLLERSHIP SERVICES * PAYROLL
* BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 304 - 5200 Finch Ave East, Scarborough, ON M1S 4Z5
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Preparation of Income Taxes
T1 and T2 with E/File
Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6
Tel: 905.554.5606
Fax: 905-554-3236
Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

Residential, Commercial, Refinance
ALL YOUR MORTGAGE NEEDS
Ari Paramalingam
Mortgage Agent
T: 905.781.1356
F: 1.888.653.5161
E: arikaran@hotmail.com
MORTGAGE ALLIANCE
402-2 Country Court Blvd
Brampton, ON L6W 3W8


# முக்கிய அறிவித்தல்

**உங்கள் வணிக விளம்பரங்கள், அறிவித்தல்கள், சிறு விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் சர்வதேச மின் செய்தித்தாள்**
**ஊடக மக்களிடம் சென்று அடைய**
**இன்றே அழையுங்கள்: 437.345.4203,**
sangathamilcanada@gmail.com

## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**கடல் கடந்த சிறீலங்கா அரச பயங்கரவாதமானது, எமது போராட்டத்திற்கு ஆதரவு நல்கும் உலகத் தமிழ் சமூகத்திற்கு விடுக்கப் பட்ட ஒரு சவால். எதிரியின் இச்சவாலை துணிவுடன் எதிர்கொண்டு தாயக விடுதலைக்கு தொடர்ந்தும் உறுதியுடன் பணியாற்று மாறு உலகத் தமிழர்களை நான் வேண்டுகிறேன்.**






# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

தொலைபேசி (TP)
437 345 4203
மின்னஞ்சல் (Email)
sangathamilcanada@gmail.com
முகநூல் (Facebook)
Sangathamil Canada

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# அவர்கள் அவர்களுக்காக அல்ல.

மாரி காலக் கடல்

03.09.1987


கடல்புறா படகில் போராளிகள்...

ரகுவும் பழனியும் அலைகளை ஊடுருவி - இருளைத் துளைத்து — எப்போதும் பழக்கப் பட்ட தமது கண்களால் பார்த்தார்கள்... சிறீலங்கா கடற்படைப் படகு அவர்களை நோக்கி மின் பாய்ச்சலில் வந்து கொண் டிருந்தது...

"கடற்புறாவை" வரைவாக செலுத்த முயன்றார்கள்.

இயலவில்லை.

புலிகளின் விரைவுப் படகுகளில் ஒன்றல்ல "கடற்புறா" என்பது அவர்களுக்குத் தெரியும்.

பருத்தித்துறைக் கடலில் மலைகளாய் எழுந்து அலைகள் வெறிக்கூத்தாடின.

பதினேழு விடுதலைப் புலிகள் "கடற்புறாவில்" இருந்தார்கள். லெப். கேணல் குமரப்பா, புலேந் திரன் உட்பட...

நிலைமையைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

சிறீலங்கா அரசின் கொடுமைகள் சிறிதும் குறையவில்லை, வல்லாளுமையாளரின் வெறித்தனங்கள்...

இந்தியாவும், சிறீலங்காவும் சேர்ந்து விரித்த வலை இறுக்கமாக இருந்தது.




பதினெழு விடுதலைப் புலிகளும் நடுக்கடலில் கைதாகி அன்றிரவு சிறீலங்கா கடற்படைக் கப்பலில் ஏற்றப்பட்டார்கள்.

பழநி எதிரியின் கப்பலில் இருந்து கொண்டே கடலைப் பார்த்தான். பின்பு நீண்டகால நண் பன் ரகுவைப் பார்த்துச் சொன்னான்:




"ஆசையோடு நாம் விளையாடித் திரிந்த கடல்"

முன்பொருநாள் -

சிங்கள சிறிலங்காப் படைகளை எதிர்த்து தமிழீழம் வீறு கொண்டு போராடிய காலம்.

27.10.1986 மாலை நான்கு மணி.

தமிழ்நாட்டுக் கடற்கரையில் இருந்து பயிற்சி முடித்த விடுதலைப் புலிகளின் முதற் பெண்கள் படைப்பிரிவு, தமிழீழம் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தது.

கழுத்துகளில் "சயனைட்" மாலைகள் - சிரித்த கலகலப்பான பேச்சு — களம் பார்க்கும் தாகம் - பத்துப் பெண் விடுதலைப் புலிகள் படகில் உட்கார்ந்திருந்தார்கள்.

தமிழீழக் கரையில் அவர்களைக் சேர்க்கும் பொறுப்பு ரகுவப்பாவிடமும், பழநியிடமும் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

படகைக் கடலில் தள்ளிவிட்டு எல்லோரையும் பார்த்தப் பழநி, சொன்னான்:-

சிரிக்கிறீங்க... ஒண்டு சொல்லுறன்... வழி யிலை சிலவேளை நேவிக் கப்பல் வர லாம்..."ஹெலி துரத்தலாம்... அசையா தீங்கோ... பதட்டத்திலை குப்பியைக் கடிச்சுப் போடாதேங்கோ..."

உறுமிக் கொண்டு மின்விசைப்படகு கடலில் பாய்ந்தது.

பெண்களில் ஒருத்தி சொன்னாள்:

"பயப்படாதேங்கோ எண்டு சொல்லி எங்களை அவமானப்படுத்திறீங்கள் பழநி அண்ணா!"

பழநி தனக்குள்ளாகச் சிரித்துக்கொண்டான். ரகுவப்பாவும் பழநியும் வல்வெட்டித்துறையில் பேர் போன படகு ஓட்டிகள்... உறுதி வாய்ந்த விடுதலைப் புலிகள்.

கடற்படைப் படகுகள் துரத்த — பலமுறை அவர்கள் எதிரியின் கண்ணில் மண்ணைத் தூவி — கடலைக் கிழித்துப் பறந்திருக்கின் றார்கள்.

பலதடவை கடற்போரில் அவர்கள் ஈடுபட வேண் டியிருந்தது. கடற்படையோடு எத்தனையோ முறை மோதியிருக்கின்றார்கள். நாகர்கோவில் கடற்கரையில் சிறீலங்கா "ஹெலிக்கொப்டர்" ஒன்றை அவர்கள் தாக்கி வீழ்த்திய போர் உணர்ச்சி மயமானது.

தமிழீழக் கடலலைகள் கொந்தளித்த வண் ணமே இருந்தன.

கப்பலில் இருந்து அடிக்கடி மத்தாப்புக்கள் வானத்தில் வெடிக்கப்படும். கடலில் பெரிய வெளிச்சம் அடிக்கும். படகுகள் பளிச்சென்று அடையாளம் காணப்படும். படகை நோக்கிக் குண்டுகள் பறக்கும்...

இந்தக் கடலில் தான் ரகுவப்பாவும், பழநியும் விடுதலைப் புலிகளை ஏற்றி இறக்கினார்கள். அவர்களுடைய படகோட்டம் விடுதலைப் புலி களின் வீரம் நிறைந்த ஒரு பகுதியே...




காரிருள் வானத்தை மூடத்தொடங்கிறது. கடலும் வானமும் இருளாகிக் கொண்டு வந்தது. அவர்கள் இப்போது நடுக்கடலில் இருந்தார்கள்.

இரவு ஆறரை மணி.

திடீரென்று... படகை யாரோ வலியகைகளால் பற்றி இழுத்தது போன்ற அதிர்ச்சி.




அலைகள் "ஓ" என்று மோதிக் தெறித்தன.

கண்களின் முன்னால் படகு உள்ளே குப்புறக் கவிழ்ந்தது. மீனுக்கு விரித்த வலைகளில் ஒன்றில் படகின் வெளி இயங்திரங்கள் சிக்கி...

"பொலித்தீன் பொதிகளைப் பிடித்துக்கொள் ளுங்கோ..." என்று உரக்கக் கத்தினான்.

"பொலித்தீன்" பொதிகளோடு பெண்புலிகள் உட்பட அனைவரும் கோர அலைகளில் மிதந்தார்கள். ஒரு பொதியோடு லெப். துர்க்கா...( இவள் பின்னர் உடையார்கட்டுக் காட்டுக்குள் இந்திய ஆக்கிரமிப்புப் படையோடு நடைபெற்ற மோதலில் வீரச்சாவடைந்தாள்.)

வசந்தி கவிழ்ந்த படகை பற்றிக் கொண்டு மிதந் தவள் "ஐயோ...! பழநி அண்ணை இவள் ஒருத்தி குப்பியைக் கடிக்கிறாள்..." என்று கூச்சலிட்டாள்.

அந்தப் பெண்புலி அப்போது வசந்திக்கு அருகில் மிதந்து கொண்டிருந்தாள். கடல் அலைகள் பொங்கி விழுந்து புரண்டன...

ரகுவப்பா மீண்டும் கத்தினான்...

"யாரும் சயனைட் குப்பியைக் கடிக்காதேங் கோ... நாங்கள் இருக்கிறம் கரைக்கு போயிடலாம்... யோசிக்காதேங்கோ."

அலைகளின் மோதலுக்கிடையில் அரைகுறை யாகக் கடிபட்ட அவளின் குப்பியைக் கடல் அடித்துக் கொண்ட போயிற்று.

ஆழ்கடலில் - கரை தெரியாத வெறும் நீர் வெளியில் பத்துப் பெண் புலிகள்...

பழநி மூன்று பெண்களின் "பொலித்தீன்" பைகளைப் பிடித்து இழுத்தபடி மெல்ல மெல்ல மன்னாரை நோக்கி நீந்தத் தொடங்கினான்... போகும் போது அவன் கத்திக்கொண்டே போனான்:

"கெதியாய் வந்திடுவன்... போட் (படகு) கொண்டு வருவன் பயமில்லாமல் இருங் கோ..."

பழநியோடும் ரகுவப்பாவோடும் இன்னும் இரண்டு இளைஞர்கள் இருந்தார்கள். அவர்களும் படகு கொண்டு வரும் நோக்கில் கரை இருந்த திசையை நோக்கி விரைவாக நீந்தத் கொடங்கினார்கள்...




வசந்தி அவள் பாட்டில் தனியாக அவர்கள் பின் னால் நீந்திக்கொண்டே போனாள்... முன்பே அவளுக்கு நீச்சல் தெரியும்.

அலைகளின் ஆவேசமான இரைச்சல்... காற்று வேகமாக உறுமியது. "சளாக்!" என்று அடிக்கடி பெரிய மீன்கள் பாயும் ஓசை.

எட்டு மணிநேரம் கடலோடு கொடுமையான போராட்டம்.

கவிழ்ந்த படகில் உட்கார்ந்திருந்த ரகுவப்பா வானத்தைப் பார்த்தான். கொடிய இருளின் பின்னணியில் வெளிச்சம் காட்டும் விண் மீன்கள்.

அப்போதுதான்...

அவர்கள் ஆவலோடு எதிர்பார்த்த படகை பழநி நடுக்கடலுக்கு கொண்டு வந்தான்.

நீந்திக் கொண்டே இழுத்துச் சென்ற மூன்று பெண் புலிகளையும் கரையில் சேர்த்துவிட்டுப் பதட்டத்தோடும் - படகோடும் வந்திருந்தான்.

நல்லவேளை யாருக்கும் எதுவும் நடந்து விட வில்லை.

"பொலித்தீன்" பொதிகளோடு மிதந்தவர்கள் படகில் ஏற்றப்பட்டார்கள். அவர்களுக்கு நம்பிக் கையும் தெம்பும் ஊட்டிக்கொண்டிருந்த ரகுவப் பாவும் படகில் ஏறினான்.

எட்டு மணிநேரம் கடலலைகளோடு போராடிய தால் அனைவரும் களைத்து விட்டனர். குப்பி கடித்த பெண் போராளி வாந்தி வாந்தியாக எடுத்தாள்...

ஆனால்...

அவள் உடல் நிலை ஆபத்தான நிலையி லில்லை.

காலை மூன்று மணி.

மன்னார்க் கரையில் வெள்ளை மணற்பரப்பில் ரகுவப்பா பழநியுட்பட பெண்புலிகள் அனை வரும் கரையை மிதித்தார்கள்.

தாய் மண்ணின் இனிய கடற்கரைக் காற்று சுகமாக வீசிற்று.

பழநி சயனைட் கடித்தவளைப் பார்த்துச் சொன் னான்:

"நான் சொல்லியும் நீ, கேட்கவில்லை பார்... சயனைட் முழுதாக உள்ளே போயிருந்தா உன்ரை நிலை என்ன ஆகியிருக்கும்...? எல்லோரும் சிரித்தார்கள்.

பதட்டத்தில் "சயனைட்" கடிக்க முனைந்ததை நினைத்து அவள் வெட்கப்பட்டாள்.

05.10.1987 காலை

பருத்தித்துறையில் கைதான பதினெழு விடுதலைப்புலிகளும் பலாலி இந்தியப் படை முகாமில் காவலில் வைக்கப்பட்டிருந்தார்கள்.

கொழும்புக்கு அவர்களைக் கொண்டு செல்வ தென்பதில் ஜெயவர்த்தனாவில் முடிவு இறுக் கமாக இருந்தது.

மாவீரன் புலேந்திரன், சிங்கள இனவெறியர் களின் கண்ணில் மண்ணாய்த் தைத்தான். தமிழ் மண்ணான திருகோணமலையைப் பறிக்க முனைந்த சிங்களக் காடையர்களை ஓட ஓட விரட்டியவன் புலேந்திரன். எப்படியும் கொழும்புக்குக் கொண்டு போய் ஆசைதீர அவனைச் சித்திரவதை செய்து சாகடிக்க வேண்டும் என்று அவர்கள் துடித்தார்கள்.

விடுதலைப் புலிகள் பொதுமன்னிப்பளிக் கப்பட்டவர்கள் என்பதும், அவர்களைக் கைது செய்து கொழும்புக்குக் கொண்டு செல்வது உடன்படிக்கைக்கு முரணானது என்பதும் புலிகளின் நிலைப்பாடு.

பலாலியில் அடைபட்டிருந்த லெப். கேணல் குமரப்பாவும், புலேந்திரனும், மேஜர் அப்துல் லாவும் ஏனைய பதின்நான்கு புலிகளும் கொண்டிருந்த உறுதி வைரமானது.

"கொழும்பு கொண்டு சென்றால் நாங்கள்







தற்கொலை செய்து கொள்வோம்" என்று அவர்கள் சிறீலங்கா அரசையும் - இந்திய அரசையும் எச்சரித்திருந்தார்கள்.

பலாலி முகாமில் ரகுவப்பாவும், பழநியும் நெஞ்சில் பழைய நினைவுகள் அலைபாய...

வசந்தி கண்முன் வருகிறாள்...

அன்று...

கடலில் தனியாக நீந்திக் கரை சேர்ந்த விடுதலைப்புலி வசந்தி, பின்பு ஒரு நாள் தன் துப்பாக்கி தவறாக வெடித்ததில் கழுத்தில் குண்டுபட்டு — உடலை அசைக்க முடியாதவளாக - இன்று படுத்த படுக்கையாக...

கொழுத்த கடலலைகளை உதைத்துத் தள்ளி வசந்தி அன்று நீந்தியதை ரகுவப்பா நினைவுக் குக் கொண்டுவந்தான்...

காலக்காற்று எப்படியெல்லாம் மாறி மாறிச் சுழல்கின்றது.

எத்தனையோ புலிகளைக் கரையேற்றிய ரகுவப்பாவும், பழநியும் கடலிலே கைதாகி இன்று பலாலி முகாமில் அடைபட்டுக்கிடக்கின் றார்கள்.

பதினேழு பேரில்...

திருமணமான புலிகள் மூவர் - குமரப்பா — புலேந்திரன் - கரன்.

குமரப்பாவுக்குப் போன திங்கள் தான் திரு மணம் நடந்தது... மூன்று திங்களுக்கு முன்பு புலேந்திரனின் திருமணம்...

கரன் திருமண மாகி குழந்தைகளும் குடும்பமுமாய்...

பகல் 11:00 மணி ஆயிற்று.

பழநியின் மனதில் புலிகளை வழக்கமாகப் படகில் ஏற்றிக் கொண்டு புறப்படும்போது — அவர்களைப் பார்த்துக் கூறும் அந்தப் பழகிப் போன சொற்கள் நினைவுக்கு வந்தன:

"நாங்கள் இருக்கிறம் - பயப்படாதேங்கோ — ஆசையாதேங்கோ — என்ன நடந்தாலும் குப்பியைக் கடிச்சுப் போடாதேங்கோ..."

பழநி நினைவிலிருந்து முழுமையாக மீள வில்லை...

அவர்கள் தங்கியிருந்த அறையின் கண்ணாடி யன்னல்கள் உடைந்து நொருங்கி விழும் கொடிய ஓசை காதைப் பிழந்தது. சிறீலங்காப் படைவெறியர்கள் "திமு திமு" என்று உள்ளே துப்பாக்கிகளோடு பாய்ந்தார்கள்.

எதிர்பார்த்ததுதான்...

வெறுங்கைகளோடிருந்த புலிப்படை முரட்டுத் தனமான ஆயுத பாணிகளைப் புயலின் வீச்சில் மோதிற்று. எதிரிகள் கடுமையாக தாக்கப்பட் டார்கள்.

சாவெதென்று முடிவு செய்து விட்ட வீரனின் வெறுங்கை சம்பளத்துக்கு படைவீரனாக இருப்பவனின் துப்பாக்கியை விட வலிமை யானதே.

"குப்பியைக் கடியுங்கோடா...?" என்று கத்தி னான் புலேந்தி.

நொடியில் - விடுதலைப் புலிகளின் பதினேழு உடல்கள் சிங்களப் படை வண்டியில் தூக்கி வீசப்பட்டன.

பன்னிரண்டு பிணங்களாக... ரகுவப்பாவும், பழநியும் கூடத்தான்.







வீரவணக்கம்
நிலையுடன் பெயர்: லெப். தவக்குமார்
நிலையான பெயர்: சோமசுந்தரம் பாக்கியராசா
வீரப்பிறப்பு: 07.04.1965
நிலையான முகவரி: முள்ளியான், வெற்றிலைகேணி
நிகழ்வு: 05.10.1987 பலாலியில் இந்திய சிறிலங்கா அரசின் கூட்டுச்சதியால் சிறிலங்காப்படை கொழும்பு கொண்டு செல்லமுயன்றபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவு


வீரவணக்கம்
நிலையுடன் பெயர்: லெப். அன்பழகன்
நிலையான பெயர்: சோமயானந்தன் உத்தமசிகாமணி
வீரப்பிறப்பு: 13.05.1964
நிலையான முகவரி: வல்வெட்டித்துறை
நிகழ்வு: 05.10.1987 பலாலியில் இந்திய சிறிலங்கா அரசின் கூட்டுச்சதியால் சிறிலங்காப்படை கொழும்பு கொண்டு செல்லமுயன்றபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவு


வீரவணக்கம்
நிலையுடன் பெயர்: 2ம் லெப். ஆனந்தகுமார்
நிலையான பெயர்: ஞானப்பிரகாசம் பிரான்சிஸ் ஆலோசியஸ்
வீரப்பிறப்பு: 11.01.1964
நிலையான முகவரி: மணல்காடு
நிகழ்வு: 05.10.1987 பலாலியில் இந்திய சிறிலங்கா அரசின் கூட்டுச்சதியால் சிறிலங்காப்படை கொழும்பு கொண்டு செல்லமுயன்றபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவு







# தமிழீழ செய்திகள்




## துணியில் சுற்றிக் கொண்டு வந்த சிறுவர் ஒருவர் கூட காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்

### மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி

அக்டோபர் 01, 2021

மரணச்சான்றுதல் மற்றும் நஷ்ட ஈட்டை பெற்றுக்கொள்ளவா ? நாங்கள் இத்தனை காலம் வீதியில் போராடினோம்.? என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி மனுவல் உதயச் சந்திரா கேள்வி.



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னாரில் இன்று (வெள்ளிக்கிழமை) காலை மணியளவில் மன்னாரில் ஊடக சந்திப்பு இடம் பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், "எங்களுக்கு பின் உள்ள புகைப்படங்களில் காணப்படுகின்ற சிறுவர்கள் அனைவரும் தாய் தந்தையுடன் வருகை தந்து இராணுவத்திடம் சரணடைந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச சிறுவர் தினத்தை இன்றைய தினம் எத்தனையோ இடங்களில் மகிழ்வாக அனுஷ்டிக்கின்றனர். ஆனால் தமிழர்களாகிய நாங்கள் சிறுவர் தினத்தை இன்றைய தினம் துக்க தினமாக அனுஸ்ரிக்கின்றோம்.

எமது சிறுவர்கள் பலர் காணாமல் போயுள்ளனர். எமது பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ள நிலையில் நாங்கள் எவ்வாறு சிறுவர் தினத்தை கொண்டாட முடியும்? குறித்த சிறுவர்கள் தாய் தந்தையுடன் ஓமந்தையை தாண்டி வந்தவர்கள். அவர்கள் காணாமல் போயுள்ளனர்.

துணியில் சுற்றிக் கொண்டு வந்த சிறுவர் ஒருவர் கூட காணாமல் ஆக்கப்பட்டுள்ளார். அந்த குழந்தைக்கு என்ன தெரியும்?

கூட்டிக்கொண்டு போன குழந்தை மற்றும் பெற்றோர் இன்று உயிருடன் உள்ளார்களா? இல்லையா? என்பது கூட தெரியாது. இந்த நிலையில் சிறுவர் தினத்தை துக்க தினமாக அனுஸ்ரிக்கின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகள், உறவுகளும் கிடைக்கும் வரை எந்த தினமாக இருந்தாலும் துக்க தினமாகவே அனுஸ்ரிப்போம்.

மேலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்குவதாக ஜனாதிபதி கூறியுள்ளார். காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்கும் உறவுகளுக்கும் மரணச்சான்றுதல் வழங்க அவர் யார்?

மரணச்சான்றுதல் மற்றும் நஷ்ட ஈட்டை பெற்றுக்கொள்ளவா ? நாங்கள் இத்தனை காலம் வீதியில் போராடினோம்.?

அதனை எடுக்க வேண்டிய முறைகள் எமக்கு தெரியும். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய எமது போராட்டம் சர்வதேச நாடுகளுக்கே தெரியும்.

எமது பிள்ளைகளை மீட்க நாம் முன்னெடுக்கும் சகல நடவடிக்கைகளும் சர்வதேச நாடுகளுக்கு தெரியும். இந்த நிலையில் புலம்பெயர்ந்த தமிழர்களுடன் ஜனாதிபதி கதைக்க உள்ளதாக தெரிவித்துள்ளார்.

முதலில் பிள்ளைகளையும், உறவுகளையும் காணாது தேடி அலையும் உறவுகளாகிய எங்களுடன் கதையுங்கள். நாங்கள் பிச்சை கேட்கவில்லை. உயிரோடு தந்த எமது பிள்ளைகளையே திருப்பி கேட்கின்றோம்.

உயிரிழந்த பிள்ளைகளுக்காக நாங்கள் போராடவில்லை. உயிருடன் உங்களிடம் ஒப்படைத்த பிள்ளைகளை கேட்டு போராடுகின்றோம்.

எங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். பிள்ளைகள் உயிருடன் இருக்கிறதா? இல்லையா என்பது ஜனாதிபதிக்கு தெரியும். பிள்ளைகள் இறந்திருந்தால் எங்கே இறந்தது? எப்படி இறந்தது என்பதை தெரிவியுங்கள். அதன் பின்னர் மரணச் சான்றிதழ் பெற்றுக் கொள்வதா, இல்லையா ? என்று தீர்மாணிப்போம்.

உலக நாடுகளை ஏமாற்றுவது போல் எங்களையும் ஏமாற்ற வேண்டாம். என அவர் மேலும் தெரிவித்துள்ளார். குறித்த ஊடக சந்திப்பில் மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தமை " குறிப்பிடத்தக்கது.

## சிறுவர் தினத்தை ஒட்டி வவுனியாவிலும் ஆர்ப்பாட்டம்

அக்டோபர் 02, 2021

சர்வதேச சிறுவர் தினத்தை ஒட்டி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று வவுனியாவிலும் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

"ஓமந்தைப் பகுதியில் இராணுவத்தின் உறுதி மொழியை நம்பி கையளிக்கப்பட்ட எமது குழந்தைகள் காணாமல் ஆக்கப்பட்டு பல வருடங்கள் கடந்தும் எமக்கான நீதி நிலைநாட்டப் படவில்லை. ஆயினும் எமக்கான நீதியை ழுங்காமல் மரணச்சான்றிதழையும் இழப்பீட்டையும் வழங்குவதாக ஜனாதிபதி சொல்கிறார். அவரின் கருத்தை நாங்கள் கண்டிக்கின்றோம். தானே கொலையை செய்து விட்டேன், எனவே, மரணச் சான்றிதழை வழங்குகின்றேன் என்றவாறாகவே அவரது கருத்து அமைந்துள்ளது.



எமது தமிழ்க் குழந்தைகள் ஆயுதம் ஏந்தியவர்களா? அல்லது பயங்கரவாதிகளா? சிறுவர்களின் பாதுகாப்புக்காக எத்தனையோ அமைப்புகள் இருந்தும் எமது குழந்தைகளைப் பாதுகாக்க அனைவரும் தவறி விட்டனர்.

எனவே சர்வதேச சிறுவர் தினம் எமக்கு துக்க தினம்" என்றனர்.

## நல்லூர் மாப்பாண முதலியார் மிகச்சிறந்த பண்பாளன்– எளிமையின் வடிவம் யாழ் மாநகர முதல்வர்

அட்டோபர் 09. 2021



நல்லூர் மாப்பாண முதலியார் மிகச்சிறந்த பண்பாளன் எல்லா வற்றுக்கும் மேலாக ஆடம்பரமோ பந்தாவோ அற்ற எளிமையின் வடிவமான மிகச்சிறந்த மனிதன் மிகச்சிறந்த நிர்வாகி என நல்லூர் மாப்பாண முதலியார் மறைவு குறித்து வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் யாழ்மாநகரசபை முதல்வர் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் பத்தாவது நிர்வாக அதிகாரி இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் சிவபதமடைந்தார்.

1929.01.15 ஆம் திகதி பிறந்த அவர் தனது 92ஆவது அகவையில் இன்று சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அவரது இறுதி காலத்தில் அவரோடு பழகும் வாய்ப்பும் அவரிடம் ஆசீர்வாதம் பெறும் பாக்கியமும் எனக்கு கிடைத்தது.

மிகச்சிறந்த பண்பாளன் எல்லாவற்றுக்கும் மேலாக ஆடம்பரமோ பந்தாவோ அற்ற எளிமையின் வடிவமான மிகச்சிறந்த மனிதன் மிகச்சிறந்த நிர்வாகி அவர்.

அவர் எம்மை விட்டு பிரிந்த போதும் அவருக்கு நிகரான அல்லது ஒருபடி மேலான தனது புதல்வனை எமக்கு தந்திருக்கின்றார்.

இன்று யாழ் மாநகர சபை தற்காலிகமாக இயங்குகின்ற இடம் நல்லூர் கந்த சுவாமி ஆலயத்திற்கு உரித்தான இடம். யுத்தத்தினாலே நகரில் இருந்த மாநகர சபை கட்டடம் இடிந்து அழிந்த போது அதனை தற்காலிகமாக இயக்க ஓர் இடம் தேவைப்பட்டது. அவ் இடத்தினை இலவசமாக மாநகர சபைக்கு தந்துதவியவர் இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியாரே ஆவார்.

யாழ் நகரில் தற்போது மிகக் கம்பீரமாக கட்டி எழுப்பப்பட்டுவரும் மாநகர சபைக்கான நகர மண்டப கட்டட தொகுதி இலங்கையின் மிகச்சிறந்த கட்டட கலை வல்லுனர்களில் ஒருவரான இவரது புதல்வனின் வடிவமைப்பிலேயே அமைக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

இந்திய அரசினால் கட்டி முடிக்கப்பட்டு மாநகர சபையிடம் கையளிக்கப்படவுள்ள யாழ்ப்பாணம் பண்பாட்டு மையத்தின் வடிவம் தொடர்பில் கட்டட கலை நிபுணர்களிடையே ஓர் போட்டி நடாத்தப்பட்டது. அப்போட்டியாளர்களுக்கு மத்தியில் வெற்றியாளரை தீர்மானிக்கும் நடுவர்களுள் ஒருவராகவும் இவரது புதல்வன் செயற்பட்டார்.

மாநகர சபைக்கும் நல்லூர் உற்சவ காலத்திற்குமான தொடர்பு விபரிக்க வேண்டிய ஒன்றல்ல.

அந்த வகையில் மாநகர சபைக்கும் நல்லூர் கந்த சுவாமி ஆலயத்திற்கும் அதன் நிர்வாகிகளுக்குமான பந்தம் நீண்டது ஆழமானது.

அந்த வகையில் அவரது இழப்பு எமக்கு பாரிய இழப்பு. அவரது பிரிவால் துயர் உற்றிருக்கும் அவரது குடும்பத்தினர் உற்றார் உறவினர் நண்பர்கள் பக்தர்கள் அனைவருக்கும் எனதும் மாநகர சபையினதும் சார்பில் ஆழ்ந்த இரங்கல்களையும் அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அன்னாரது ஆத்மா சாந்தி அடைய நல்லூர் கந்தனை வேண்டுகின்றேன்

# வெறுமனே சான்றிதழும் பணமும் எங்கள் உறவுகளுக்கு நிகராகிவிடுமா? எமது காணமால் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பிலான நீதி விசாரணைக்கு யார் பொறுப்பு?

அட்டோபர் 02, 2021 - வாழைச்சேனை




வெறுமனே சான்றிதழும், பணமும் எங்கள் உறவுகளுக்கு நிகராகிவிடுமா? எமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பிலான நீதி விசாரணைக்கு யார் பொறுப்பு? தங்கள் பொறுப்புகளில் இருந்து விலகுவதற்காக காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளை காணாமல் போனவர்கள் என்று சொல்வதும், அவர்களுக்கு மரணச் சான்றிதழ், நட்டஈடு வழங்குதல் என்று சொல்வதும் ரணமான எம்மை மீண்டும் மீண்டும் ரணத்திற்குள்ளாக்கும் செயாலாகும் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் தலைவி அ.அமலநாயகி தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பிலான ஜனாதிபதியின் கருத்து தொடர்பில் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், காணாமல் போனவர்களுக்கு மரணச்சான்றிதழ் வழங்குவதாகவும், நட்டஈடு வழங்குவதாகவும் அண்மையில் ஜனாதிபதியால் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளிடம் தெரிவிக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பில் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

முதலில் எங்கள் உறவுகள் காணாமல் போனவர்கள் அல்ல. காணாமல் ஆக்கப்பட்டவர்கள். இறுதி யுத்தத்தின் போது எங்களால் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டு தற்போது எங்குள்ளார்கள் என்று தெரியாமல் இருப்பவர்கள். வீடுகள் தேடி வந்து அழைத்துச் செல்லப்பட்டவர்கள் இவ்வாறு பல வடிவங்களில் அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களே ஒழிய காணாமல் போனவர்கள் அல்ல.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் யுத்தம் நிறைவுற்றதன் பின்னரும் பலர் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். பலர் வீடுகளுக்கு வந்து அழைத்துச் செல்லப்பட்டவர்கள், மேலும் பலர் தொழில் நிமித்தம் செல்லுகையில் கடத்தப்பட்டவர்கள் என பல வடிவங்களில் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள்.

இவ்வறான ரீதியில் காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளைத் தான் நாங்கள் தேடிக் கொண்டிருக்கின்றோம். அவர்களுக்கான நீதியைக் கோரிக்கொண்டிருக்கின்றோம். காணாமல் போனவர்களை நாங்கள் தேடவில்லை என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

ஜனாதிபதி கூறியது போல் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு மரணச் சான்றிதழ், நட்டஈடு வழங்குவதாக இருந்தால் அவர்களுக்கு என்ன நடந்தது? எவ்வாறு நடந்தது? யார் என்ன செய்தார்கள்? அவ்வாறு எமது உறவுகளுக்கு ஏதேனும் செய்தவர்களுக்கு உரிய தண்டனை என்ன? இவற்றுக்கான பொறுப்பு யாருக்கு உண்டு? போன்ற எங்கள் கேள்விகளுக்குரிய பதில் என்ன?

வெறுமனே சான்றிதழும், பணமும் எங்கள் உறவுகளுக்கு நிகராகி விடுமா? எமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பிலான நீதி விசாரணைக்கு யார் பொறுப்பு? தங்கள் பொறுப்புகளில் இருந்து விலகுவதற்காக காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளை காணாமல் போனவர்கள் என்று சொல்வதும், அவர்களுக்கு மரணச் சான்றிதழ், நட்டஈடு வழங்குதல் என்று சொல்வதும் ரண மான எம்மை மீண்டும் மீண்டும் ரணத்திற்குள்ளாக்கும் செயாலாகும்.

1990களில் இருந்து யுத்தம் முடிவுற்று அதன் பிறகும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களோ, அவர்களுக்கு என்ன ஆனது என்கின்ற விடயமோ இல்லை. அவர்கள் தொடர்பில் விசாரணைகள் கூட இதுவரை இல்லை. இவ்வாறான நிலைமையிலேயே எமது உறவுகளை நாங்கள் தேடிக் கொண்டிருக்கின்றோம். உறவுகளைத் தேடிய உறவுகளில் பலரை இன்று இழந்து தவிக்கின்றோம். தேடலிலேயே அவர்களின் உயிரையும் விட்டிருக்கின்றார்கள்.

தங்கள் இறுதி மூச்சுக்குள் தங்கள் உறவுகளை எப்படியாவது பார்த்து விடலாம், அவர்களுக்கு என்ன நடந்தது என்பதையாவது அறிந்துவிடலாம் என்று எத்தனையோ தாய்மார், மனைவிமார், உறவுகள் இன்னுமும் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அவ்வாறு இருக்கு எம்மவர்களின் வலி வேதனைகள் பலருக்கு மிக எளிதாகப் போய் விட்டது.

இத்தனை வருட கால தேடலுக்கும், வலிக்கும் வெறுமனே பணம் ஈடாகிவிடாது. எம்மவர்களுக்கான உரிய நீதி வேண்டும். அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஜனாதிபதி முன்வர வேண்டும். யார் தவறு செய்துள்ளார் என்பது கண்டறியப்பட்டு உரியவருக்கு நீதி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கு சர்வதேசம் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

ஒரு நாட்டின் தலைவர் சொல்கின்றார் என்பதற்காக சர்வதேசம் அதனை அப்படியே எடுத்துக் கொள்ளக் கூடாது. பாதிக்கப்பட்ட தரப்பினரின் நியாயங்களும் பார்க்கப்பட வேண்டும். இப்போதும் சர்வதேசத்தினால் தான் எமக்கு ஒரு தீர்வு கிடைக்கும் என்பதில் நாம் மிக உறுதியாக இருக்கின்றோம். அனைத்து விடயங்களுக்குமான சாட்சியங்கள் இருக்கும் போது ஐக்கிய நாடுகள் சபையும், சர்வதேச நாடுகளும் எமது பிரச்சனைகளின் பாராதூரத் தன்மையை விளங்கிக் கொள்ளாமல் இருப்பது வேதனை தருவதாக அமைகின்றது.

உறவுகளைத் தேடும் உறவுகளின் மூச்சு அடங்கும் முன்னர் இதற்கான நீதியைச் சர்வதேசமும், ஐநா மனித உரிமைகள் பேரவையும் பெற்றுத் தரவேண்டும். இல்லாவிடில் எமது சமூகம் சார்ந்த விடயத்தில் ஒருபக்கச் சார்பினை சர்வதேசம் காட்டியது என்ற அவப்பெயரையே சுமக்க நேரிடும் என்று தெரிவித்தார்.

# அபகரிக்கப்பட்டமட்டக்களப்பு வடமுனை ஊத்துச்சேனை வெள்ளிமலை பிள்ளையார் ஆலய வயல்காணியை பெற்றுத்தரவும் ஆலயபரிபாலனசபை கோரிக்கை



அட்டோபர் 03, 2021 **(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு பொலன்னறுவை எல்லைக்கிராமமான வடமுனை ஊத்துச்சேனை வெள்ளிமலை பிள்ளையார் ஆலயத்துக்கு சொந்தமான வயல்காணியை முஸ்லீம் இனத்தைச் சோந்தவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். எனவே இந்த ஆலயத்துக்கு சொந்தமான 21 ஏக்கர் வயல் காணியை மீட்டுத்தருமாறு ஆலய பரிபாலனசபையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆலயத்தில் இன்று (03) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பரிபாலனசபை தலைவர் சுதாகரன் செயலாளர் சிவம் பிரதி தலைவர் நிசங்க ஆலையகுரு உதயன்குருக்கள் உட்பட பரிபாலன சபையினர் கலந்துகொண்டு இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர்.

குறித்த ஆலய புனர்நிர்மான மற்றும் ஆலயத்துக்கான வீதி அபிவிருத்தி மின்சாரம் தொடர்பான பரிபாலன சபையினர் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த நிலையில் ஆலயத்தின் காணி அபகரிப்பு தொடர்பாக ஆர்ப்பாட்டம் இடம் பெறப்போவதாக ஆலயத்துக்கு செல்லும் வீதிகளில் பொலிசார் பாதுகாப்புகடமையில் ஈடுபட்டு ஆலயத்துக்கு செல்ல வந்த தேரர் உட்பட ஆலயநிர்வாகத்தினரை செல்ல அனுமதிக்கவில்லை .
இந்த ஆலயம் நூற்றாண்டுகளுக்கு மேற்பட்டதுடன் பொலன்னறுவை மாவட்டத்தில் முதல் முதல் பதிவு செய்யப்பட்ட ஆலயமாகும். இருந்தபோதும் இந்த ஆலையத்தில் ஊத்துச்சேனை சிறிஓடை கள்ளிச்சி ஓடை குமாரபுர வடமுனை ஆகிய 5 கிராமங்களில் தமிழ் சிங்கள மக்கள் வாழ்ந்துவந்தனர். இந்த நிலையில் 1990 ம் ஆண்டு ஏற்பட்ட யுத்தத்தினால் தமிழ்மக்கள் தமது காணிகள் வீடுகளை விட்டு வெளியேறி வாழைச்சேனைக்கும் சிங்களமக்கள் வெலிகந்தைக்கும் இடம் பெயர்ந்தனர்.

இதனால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஆலயயம் மக்கள் சென்று பராமரிக்கமுடியாத நிலையினையடுத்து ஆலைய கூரைகள் உடைந்து பாரிய சேதமடைந்தது இதன் பின்னர் யுத்தம் முடிவடைந்த பின்னர் 2010 ம் ஆண்டு மக்கள் மீண்டும் குடியேறிய நிலையில் ஆலயயத்துக்கும் செல்லும் வீதி மக்கள் பிரயாணிக்க முடியாதளவு சேதமடைந்துள்ளதுடன் காடுகள் வளர்ந்துள்ளது.

ஆலயயத்துக்கு முன்னாள் உள்ள ஆற்றிற்கு மறுபக்கம் 1926 ம் ஆண்டு வழங்கப்பட்ட காணி உறுதியுடனான 21 ஏக்கர் வயல்காணியாகும் இந்த காணியை 2010 ம் ஆண்டு முஸ்லீம் இனத்தச் சேர்ந்த ஒருவர் தனது காணி என காணிபத்திரத்தை கொண்டு அபகரித்து வேளாண்மை செய்துவருகின்றார்.

இந்த ஆலயத்துக்கு சொந்தமான காணியை பெற்றுத்தருமாறு கிரான் பிரதேச செயலாளர் மற்றும் அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்தோம் அதற்கான தீர்வு இதுவரை கிடைக்கவில்லை அதேவேளை கடந்த மாதம் அந்த வயல்காணியை ஆலயநிர்வாகம் வேளாண்மை செய்வதற்காக உழுது நெல்லை பயிரிட்டு 21 நாட்களின் பின்னர் குறித்த நபர் உழவு இயந்திரம் கொண்டு அந்த வேளாண்மை பயிரை உழுது அழித்துள்ளனர்.

எனவே ஆலயத்துக்கு சொந்தமான இந்த வயல் காணியை உரிய அதிகாரிகள் பெற்றுத்தரவேண்டும் என பரிபாலன சபையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# 06.10.1990 அன்று அனலைதீவிலிருந்து தமிழ்நாடு நோக்கி சென்ற அகதிகள் படகு விபத்துக்குள்ளாகி உயிர் நீத்த மக்களின் 31 ஆம் ஆண்டு நினைவு கூறப்பட்டது

அக்டோபர் 06, 2021

அனலையிலிருந்து தமிழ்நாடு நோக்கி அகதிகளாக சென்ற படகு விபத்துக்குள்ளாகி உயிர்நீத்த உறவுகளினது நினைவாக அனலைதீவு கலாச்சார ஒன்றியம் கனடா அமைப்பின் உதவியோடு அனலையில் இன்று இரவு



சுடர்ஏற்றி மலர் வணக்கமும் மாங்கன்றுகள் வழங்கலும் நடைபெற்றது.



**06.10.1990 அன்றைய நாள் கடலில் உயிர்நீத்த உறவுகளின் விபரம்:-**

1. திருமதி. குகதாசன் பரமேஸ்வரி 45, வட்டாரம் 2 , அனலைதீவு
2. செல்வி. குகதாசன் பிரியதர்ச்னி(பூரணி) 22, வட்டாரம் 2, அனலைதீவு
3. செல்வி.குகதாசன் பிரியனந்தினி 20, வட்டாரம் 2, அனலைதீவு
4. செல்வி. குகதாசன் நிவேதிகா 18, வட்டாரம் 2, அனலைதீவு
5. செல்வி. குகதாசன் சிவப்பிருந்தா 16, வட்டாரம் 2, அனலைதீவு
6. செல்வி. குகதாசன் இராதிகா 14, வட்டாரம் 2, அனலைதீவு

07. திரு. கணேசையர் கோபாலகிருஷ்ணன் குருக்கள் 48, வட்டாரம் 3, அனலைதீவு
08. திருமதி. கோபாலகிருஷ்ணன் குருக்கள் வாலாம்பிகாதேவி 40, வட்டாரம் 3, அனலைதீவு
09. செல்வன். கோபாலகிருஷ்ணன் குருக்கள் ரமேஷ் சர்மா 20, வட்டாரம் 3, அனலைதீவு
10. செல்வன். கோபாலகிருஷ்ணன் குருக்கள் ராஜேஷ் சர்மா 18, வட்டாரம் 3, அனலைதீவு
11. செல்வி. கோபாலகிருஷ்ணன் குருக்கள் சித்திரா 17, வட்டாரம் 3, அனலைதீவு
12. செல்வன். கோபாலகிருஷ்ணன் குருக்கள் ஜெகதீஷ் சர்மா 15, வட்டாரம் 3, அனலைதீவு
13. திருமதி. சண்முகம் சின்னாச்சி 55, வட்டாரம் 3, அனலைதீவு
14. செல்வி. திருநாவுக்கரசு சசிகலா 18, வட்டாரம் 3, அனலைதீவு
15. செல்வன். திருநாவுக்கரசு சசிகரன் 16, வட்டாரம் 3, அனலைதீவு
16. திரு. நாகமுத்து கணபதிப்பிள்ளை 70, வட்டாரம் 3, அனலைதீவு
17. திருமதி. கணபதிப்பிள்ளை சிவக்கொழுந்து 60, வட்டாரம் 3, அனலைதீவு
18. செல்வி. கணபதிப்பிள்ளை உருத்திராதேவி 27, வட்டாரம் 3, அனலைதீவு
19. செல்வி. கணபதிப்பிள்ளை கௌரி 20, வட்டாரம் 3, அனலைதீவு
20. செல்வி. சண்முகநாதன் சந்தலோயினி 21, வட்டாரம் 3, அனலைதீவு
21. செல்வி. சண்முகநாதன் வசந்தலோயினி 19, வட்டாரம் 3, அனலைதீவு
22. செல்வி. தம்பையா சத்தியானந்தி 22, வட்டாரம் 3, அனலைதீவு
23. பொன்னம்பலம் இந்திரநாதன் 34, வட்டாரம் 3, அனலைதீவு
24. செல்வன். இந்திரநாதன் சுஜாகரன் 08, வட்டாரம் 3, அனலைதீவு
25. திருமதி. குமாரசாமி ஈஸ்வரி(சின்னம்மா) 59, வட்டாரம் 4, அனலைதீவு
26. திரு. சிவராசா உருத்திரநாதன் 36, வட்டாரம் 4, அனலைதீவு



27. திருமதி. உருத்திரநாதன் சற்குணம் 30, வட்டாரம் 4, அனலைதீவு
28. செல்வன். உருத்திரநாதன் மோகனதாஸ் 1.5 , வட்டாரம் 4, அனலைதீவு
29. திருமதி. கிருஷ்ணமூர்த்தி குருக்கள் சாவித்திரி 27, வட்டாரம் 4, அனலைதீவு
30. செல்வி. கிருஷ்ணமூர்த்தி குருக்கள் அரிகரப்பிரியா(பிரியா) 12, வட்டாரம் 4, அனலைதீவு
31. செல்வி. கிருஷ்ணமூர்த்தி குருக்கள் சிவப்பிரியா 09, வட்டாரம் 4, அனலைதீவு
32. செல்வி. கிருஷ்ணமூர்த்தி குருக்கள் ஜனனி 08, வட்டாரம் 4, அனலைதீவு
33. திருமதி. குமாரசாமி கனகலெட்சுமி(மணி) 45, வட்டாரம் 5, அனலைதீவு
34. திருமதி. விக்னேஸ்வரன் சூரியவதனி 20, வட்டாரம் 5, அனலைதீவு
35. செல்வி. விக்னேஸ்வரன் ஜீவிதா 10 மாதம், வட்டாரம் 5, அனலைதீவு
36. செல்வி. குமாரசாமி மலர்வதனி 16 , வட்டாரம் 5, அனலைதீவு
37. செல்வன். குமாரசாமி அரிகரகுமாரன் 12 , வட்டாரம் 5, அனலைதீவு
38. திருமதி. செல்லத்துரை கமலாம்பிகை(சின்னம்மா) 52, வட்டாரம் 5, அனலைதீவு
39. செல்வி. சதாசிவம் யோகேஸ்வரி(சுரபி) 15, வட்டாரம் 5, அனலைதீவு
40. திருமதி. பத்மநாதன் பவனேஸ்வரி(கீதா) 20, வட்டாரம் 5, அனலைதீவு
41. செல்வி. பத்மநாதன் மகிழினி 03, வட்டாரம் 5, அனலைதீவு
42. திருமதி. சபாபதி அன்னலட்சுமி (அன்னம்) 51, வட்டாரம் 5, அனலைதீவு
43. திருமதி. கனகசபை செல்லம்மா 50, வட்டாரம் 5, அனலைதீவு
44. செல்வன். க. கந்தசாமி விக்னேஸ்வரன்(அப்பன்) 15, வட்டாரம் 5, அனலைதீவு
45. செல்வன். கு. கந்தசாமி அரிகரன்(கரன்) 14, வட்டாரம் 5, அனலைதீவு
46. திரு. சந்தியான் அந்தோனி 26, வட்டாரம் 5, அனலைதீவு
47. திரு. வயிரவநாதன் தில்லையம்பலம் 56, வட்டாரம் 6, அனலைதீவு
48. திருமதி. தில்லையம்பலம் திருப்பதி 53, வட்டாரம் 6, அனலைதீவு
49. செல்வி. தில்லையம்பலம் சிவசோதி(ராணி) 21, வட்டாரம் 6, அனலைதீவு
50. செல்வன். தில்லையம்பலம் சிவகுமார்(குமார்) 14, வட்டாரம் 6, அனலைதீவு
51. செல்வி. தில்லையம்பலம் வசந்தா 11, வட்டாரம் 6, அனலைதீவு
52. திரு. இந்திரநாதன் சுஜீதா 22, வட்டாரம் 6, அனலைதீவு
53. திரு. இந்திரநாதன் சுஜீகரன் 32, வட்டாரம், அனலைதீவு
54. திரு. பொன்னம்பலம் பொன்னுச்சாமி 64, புளியங்கூடல்
55. திருமதி. பொன்னுச்சாமி அன்னலெட்சுமி 60, புளியங்கூடல்
56. பொன்னுச்சாமி சிவநாதன் 35, புளியங்கூடல்
57. பொன்னுச்சாமி கணநாதன் 29, புளியங்கூடல்
58. திரு. நாகராசா குகதாசன் 17, புளியங்கூடல்
59. திருமதி. கிருஷ்ணபிள்ளை சிவபாக்கியம் 60, வட்டாரம் 2, எழுவைதீவு
60. செல்வி. கிருஷ்ணபிள்ளை சுந்தரேஸ்வரி 14, வட்டாரம் 2, எழுவைதீவு
61. திருமதி. நடராசா இராசாம்பாள் 24, வட்டாரம் 2, எழுவைதீவு
62. செல்வி. நடராசா வாணி 1.5, வட்டாரம் 2, எழுவைதீவு
63. வே. அன்னலிங்கம் 70, மண்டைதீவு
64. திருமதி. அன்னலிங்கம் 55, மண்டைதீவு
65. செல்வி. அன்னலிங்கம் வசந்தா 30 ,மண்டைதீவு
66. தேவன் 24 , கரம்பொன்




# அரசியல்வாதிகளிற்கு பருத்தித்துறை முனை மீனவர்கள் விடுத்துள்ள கடுமையான வேண்டுகோள்

அக்டோபர் 11, 2021

இந்திய இழுவை படகுகளையும் தடைசெய்யப்பட்ட அனைத்து தொழில்களையும் உடனடியாக நிறுத்தும் வரை எந்த வொரு அரசியல் கட்சிகளும் தமது எல்லைக்குள் உட்பிரவேசிக்க வேண்டாம் என பருத்தித்துறை முனை கடற்தொழிலாளர்கள் அறிவித்துள்ளனர். இன்றையதினம் முனை கடற்தொழிலாளர்கள் முன்னெடுத்த எதிர்ப்பு போராட்டத்தின் போதே இவ்வாறான அறிவித்தல்களை விடுத்திருந்தனர். அத்தோடு அரசியல் கட்சிகள் மீறி தமது இடத்திற்கு வரும் பட்சத்தில் மக்களால் அடித்து விரட்டப்படுவார்கள் என்பதனையும் தாம் உறுதியாக மனவருத்தத்துடன் அறியத்தருவதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.



# இராணுவத்திடம் சரணடைந்து காணாமலாக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பிலும் சர்வதேச விசாரணை தேவை

அக்டோபர் 06, 2021



இறுதி யுத்த காலத்தில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட சிறுவர்கள் காணாமலாக்கப்பட்டனர் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பெறுமதி சேர் வரி திருத்த சட்டமூலத்தில் உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், இராணுவத்திடம் கையளிக்கப்பட்டு காணாமலாக் கப்பட்ட, படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி இராணுவத்தினரின் பேச்சை நம்பி அவர்களிடம் சரணடையச் சென்ற பல பிள்ளைகள் காணாமலாக் கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டும். தற்போதைய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ பாதுகாப்பு செயலாளராக இருந்தபோதே இவர்கள் காணாமலாக்கப்பட்டனர்.

இதேவேளை அண்மையில் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி அங்கு தனது பேரப்பிள்ளையைத் தூக்கி கொஞ்சி மகிழ்ந்ததை சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருந்தார். காணாமலாக்கப்பட்ட இந்தப் பிள்ளைகளின் தந்தைகள் தற்போதும் கண்ணீரோடு வாழ்ந்து வருவதோடு தமது பிள்ளைகளைத் தேடி வருகிறார்கள்.

அமெரிக்காவுக்குச் சென்று அங்கு தனது பேரப்பிள்ளையைக் கொஞ்சி தூக்கி மகிழ்ந்த ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ பாதுகாப்பு செயலாளராக இருக்கும்போதே

இராணுவத்திடம் சரணடைந்த காணாமலாக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பிலும் சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார். அத்துடன் காணாமலாக்கப்பட்ட பல சிறுவர்களின் பெயர் விபரங்களையும் கஜேந்திரன் எம்.பி. சபையில் வெளிப்படுத்தினார்.

# ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டு தமிழ்தேசியத்தை புறக்கணித்து தமிழர்களின் அபிலாசைகளை கைவிடுகின்ற கூட்டமைப்பின் போக்கு மீண்டும் உறுதிப்படுத்தபட்டுள்ளது– கஜேந்திரகுமார்.




அக்டோபர் 07, 2021

இலங்கைக்கு 11 வருடங்களிற்கு முன்னர் அப்போதைய இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாரயணண் வந்தபோது வலியுறுத்தப்பட்ட அதேவிடயங்களை தான் இப்போது மீண்டும் வலியுறுத்தியிருப்பதன் மூலம் ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டு தமிழ்தேசியத்தை புறக்கணித்து தமிழர்களின் அபிலாசைகளை கைவிடுகின்ற கூட்டமைப்பின் போக்குமீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் பிரச்சினைக்கு 13வது திருத்தத்தின் ஊடாக தீர்வை வழுங்கவேண்டும் என்பதே இந்தியாவின் நீண்டகால நிலைப்பாடாக உள்ளது இந்திய வெளியுறவுச்செயலாளர் அதனை தொடர்ந்தும் எதிர்வரும் காலங்களிலும் வலியுறுத்துவோம் என குறிப்பிட்டுள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார்

அதேவேளை இந்தியாவிற்கும் கூட்டமைப்பிற்கும் இடையில் இடையிலான சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஊடகங்கள் மூலமாக நாங்கள் அறிந்து கொண்டோம் என அவர் தெரிவித்துள்ளார்.

அவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களின்படி நாம் கூட்டமைப்பிலிருந்து விலகுவதற்கு 11 வருடங்களிற்கு முன்னர் அப்போதைய இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்கே நாரயணண் இலங்கை வந்தபோது வலியுறுத்தப்பட்ட அதேவிடயங்கள்தான் இப்போது மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளன.என அவர் குறிப்பிட்டுள்ளார்

# வரலாற்றுச் சிறப்பு மிக்க செல்வச்சந்நிதி முருகன், வல்லிபுர ஆழ்வார் கோவில்களுக்குள் யாழ்.மாவட் டத்தின் பொலிஸ் உயர் அதிகாரிகள் சிலர் சப்பாத்துக்களுடன் உள் நுழைவு

அக்டோபர் 13, 2021

வரலாற்றுச் சிறப்பு மிக்க செல்வச்சந்நிதி முருகன், வல்லிபுர ஆழ்வார் கோவில்களுக்குள் யாழ்.மாவட்டத்தின் பொலிஸ் உயர் அதிகாரிகள் சிலர் சப்பாத்துக்களுடன் சென்றமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்து மக்களின் பண்பாட்டை மீறும் வகையில் அவர்கள் செயற்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினரால் விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் தனிப்பட்ட பயணமாக யாழ்ப்பாணம் சென்ற நிலையில் செல்வச்சந்நிதி, வல்லிபுர ஆழ்வார் கோவில்களுக்கு இன்று பயணம் மேற்கொண்டிருந்தார்.

பொலிஸ் மா அதிபர் தனது சப்பாத்துக்களை அகற்றி இரண்டு ஆலயங்களிலும் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தார். இருந்தபோதிலும் அவருடன் கூடவே சென்ற பொலிஸ் அதிகாரிகள் சிலர் சப்பாத்துக்களுடன் ஆலயங்களுக்குள் சென்றிருக்கின்றனர்.

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் நிர்வாகத்தினர் மாத்திரம் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அவர்களை வெளியேறுமாறு வலியுறுத்தியிருந்ததாகத் தெரியவந்துள்ளது.



# முல்லைக் கடற்பரப்பில் இந்தியாவின் இழுவைப்படகுகளின் வருகையால் வட தமிழீழ மீனவர்கள் பாதிப்பு

அக்டோபர் 12, 2021



முல்லைத்தீவுக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்து மீறிய அடாவடிச் செயற்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில் அவற்றைக் கட்டுப்படுத்தவேண்டிய கடற்றொழில் அமைச்சர், கடற்படையினர் மற்றும், கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் ஆகிய தரப்புக்கள் தூக்கத்தில் இருக்கின்றார்களா என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அண்மைய நாட்களாக முல்லைத்தீவு கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைகின்ற இந்திய இழுவைப் படகுகள் சட்ட விரோத கடற்றொழில் செயற்பாட்டில் ஈடுபடுவதுடன், முல்லைத்தீவு மீனவர்கள் பலரதும் பல இலட்சக்கணக்கான மீன்பிடி வலைகளையும் சேதப்படுத்திவருகின்றன.

இந் நிலையில் 12.10.2021 இன்றையநாள், இந்திய இழுவைப் படகுகளால், பல இலட்சம் பெறுமதியான மீன்பிடி வலைகளை இழந்துள்ள முல்லைத்தீவு மீனவர்களை முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரில் சென்று சந்தித்ததுடன், நிலைமைகளையும் கேட்டறிந்தார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், முல்லைத்தீவு மீனவர்களுடைய வாழ்வாதாரத்தில் பல தரப்புக்களும் கைவைக்கின்ற நிலையைத் தற்போது பார்க்க முடிகின்றது.

குறிப்பாக தென்னிலங்கை மீனவர்களால் முல்லைத்தீவுக் கடற்பரப்பிலே தடைசெய்யப்பட்ட சுருக்குவலை, வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல், வெடிவைத்து மீன்பிடித்தல் உள்ளிட்ட சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந் நிலையில் தற்போது இந்திய இழுவைப்படகுகளாலும் முல்லைத்தீவு மீனவர்களின் வழ்வாதாரம் பாதிக்கப் படுகின்றது.

குறிப்பாக இம்மாதம் 10,11,12 ஆகிய தினங்களில் முல்லைத் தீவு மீனவர்களுடைய வலைகளை இந்திய இழுவைப் படகுகள் சேதமாக்கியுள்ளன.

எமது முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் பல படகுகள், வலைகள் சேதமாக்கப்பட்ட நிலையில் கரையே வந்துள்ளன. இப்படியான நிலையிலே மறுநாள் தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு என்ன செய்வதென்று தெரியாமல் எமது மீனவர்கள் பலரும் அல்லலுறுகின்றனர்.

இவ்வாறாக அத்துமீறி முல்லைத்தீவு கடற்பரப்பிற்குள் வருகைதரும் இந்திய இழுவைப் படகுகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டியது யார்?

இந்த விடயத்திலே கடற்றொழில் அமைச்சர், கடற்படை, முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் ஆகியோர் என்ன பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள்? எனக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

இது தொடர்பிலே உரிய தரப்பினர் இதுவரையில் எடுத்த நடவடிக்கை என்ன? எவ்வித நடவடிக்கைகளையும் உரியவர்கள் மேற்கொள்ளவில்லை.

இப்படியான சூழலில் எமது மீனவர்கள் என்ன செய்வது? இது தொடர்பிலே யாரிடம் முறையிடுவது எனத் தெரியாமல் தவிக்கின்றார்கள்.

இலங்கை நாட்டின் பிரஜைகளான முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தில் நலிவினை ஏற்படுத்தும் செயற்பாட்டை கடற்றொழில் அமைச்சர், இலங்கை கடற் படை, கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் ஆகிய தரப்புக்கள் மேற்கொள்கின்றன.

இந்தியன் இழுவைப்படகுகளால் எமது மீனவர்களின் பல இலட்சக்கணக்கான மீன்பிடி உபகரணங்கள் சேதமாக்கப் பட்டுள்ளன. பலத்த கடன் நிலைமைகளுக்கு மத்தியில் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடும் எமது மீனவர்கள், அந்த மீன்பிடி உபகரணங்களை மீண்டும் வாங்குவதற்கு அவர்கள் எங்கே செல்வார்கள்?

ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இந்தியன் இழுவைப்படகுகளின் அத்துமீறிய வருகையினைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலே ஒரு சட்டமூலத்தினைப் பாராளுமன்றிலே நிறைவேற்றியிருக்கின்றார்.

அந்தச் சட்டமூலத்தினை அமுல்ப்படுத்தவேண்டியது யார்? தற்போது கடற்றொழிலுக்குப் பொறுப்பாக இருக்கின்ற அமைச்சர் குறித்த சட்டமூலத்தினை அமுல்படுத்துவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்காதது ஏன்?

எமது மீனவ மக்களின் வாழ்வாதாரத்தினை உறுதிப்படுத்த வேண்டும். எனவே இந்திய இழுவைப் படகுகள் இலங்கை கடல் எல்லைக்குள் வருவதனை தடுக்கவேண்டும்.

உரியதரப்பினர் இப்பிரச்சினைக்கு உரிய தீர்வினைப் பெற்றுக்கொடுக்க முன்வரவேண்டும் – என்றார்

# கடற்தொழில் அமைச்சர் பதவி விலக வேண்டும்

## தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ல்ஸ் நிர்மலநாதன்

அக்டோபர் 11, 2021



கடற்தொழில் அமைச்சு மௌனமாக இருப்பதை விட கடற்தொழில் அமைச்சர் தனது பதவியை ராஜினாமா செய்து ஒரு சிங்கள இனத்தைச் சேர்ந்த ஒருவர்? கடல் தொழில் அமைச்சராக நியமிக்கப்பட வேண்டும். வட மாகாணத்தைச் சேர்ந்த ஒருவர் கடல் தொழில் அமைச்சராக இருந்தும் கூட வடமாகாண மீனவர்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கும் நிலையில் அவர் மௌனமாக இருப்பதை விட சிங்களவர் ஒருவர் கடற்றொழில் அமைச்சராக இருந்தால் எமது அழுத்தத்தின் காரணமாக ஓர் அளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ல்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

இலங்கை இந்திய மீனவர்களுக்கிடையில் தொடர்ச்சியாக பிரச்சினைகள் இடம் பெற்று வருகின்றது. யுத்தத்திற்கு பிற்பாடு இந்திய இழுவைப்படகுகள் ஆதிக்கம் அதிகரித்துள்ளது.

குறிப்பாக இலங்கையின் வட கடல் பகுதிக்குள் அவர்களின் மீன்பிடி ஆதிக்கம் காணப்படுகின்றது.-இந்தியாவின் இலுவைப்படகுகளினால் இலங்கையில் உள்ள தமிழ் பகுதிகளில் உள்ள மீனவர்கள் பாதிக்கப்படுகின்ற காரணத்தினால் இலங்கை அரசாங்கம் காத்திரமான ஒரு செயல்பாட்டை முன்னெடுப்பது இல்லை.

கடந்த அரசாங்கத்தில் இருந்த போது எங்களுடைய தொடர்ச்சியான அழுத்தங்களால் பல இந்திய படகுகள் பிடிக்கப்பட்டுள்ளதோடு கட்டுப்பாட்டு நிலைக்கு கொண்டு வரப்பட்டது.

ஆனால் தற்போது மன்னார், முல்லைத்தீவு மீனவர்கள் பாதிக்கும் அளவிற் இந்திய இழுவைப்படகுகள் வந்து செல்கிறது.

கடற்தொழில் அமைச்சரும், அரசாங்கமும் இவ்விடயத்தில் மௌனம் காத்து வருகின்றனர்.

இதற்கு பிரதானமான காரணம் இந்தியாவிற்கு பயந்து அவர்கள் முடிவுகளை எடுக்க தயங்குகிறார்கள். இவ் விடயம் தொடர்பில் கடற்தொழில் அமைச்சரிடமும் நான் நேரடியாக தெரிவித்துள்ளேன்.

அரசாங்கத்திடமும் பல முறை பாராளுமன்றத்தில் கதைத்துள்ளேன். ஆனால் இவ் விடயத்தில் கடற்தொழில் அமைச்சும் அரசாங்கமும் எவ்வித ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. அண்மைக் காலமாக மிக மோசமாக இந்திய இழுவைப்படகுகள் வந்து வட கடலில் இருக்கின்ற எமது மீனவர்களின் வலைகளையும், படகுகளையும், மீன்பிடி உபகரணங்களையும் சேதப் படுத்தி சென்றுள்ளனர்.

இதனால் எமது மீனவர்களுக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இவ்விடயத்தில் கடல் தொழில் அமைச்சு மௌனமாக இருப்பதை விட கடல் தொழில் அமைச்சர் தனது பதவியை ராஜினாமா செய்து ஒரு சிங்கள இனத்தைச் சேர்ந்த ஒருவர்? கடல் தொழில் அமைச்சராக நியமிக்கப்பட வேண்டும்.

வட மாகாணத்தைச் சேர்ந்த ஒருவர் கடல் தொழில் அமைச்சராக இருந்தும் கூட வடமாகாண மீனவர்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கும் நிலையில் அவர் மௌனமாக இருப்பதை விட சிங்களவர் ஒருவர்? கடற்றொழில் அமைச்சராக இருந்தால் எமது அழுத்தத்தின் காரணமாக ஓர் அளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும். கடற்றொழில் அமைச்சின் தற் துணிவு இல்லாத நிலையே வட பகுதி மீனவர்கள் இந்திய இழுவைப் படகு மூலம் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். என அவர் தெரிவித்தார். மேலும் மாகாணசபை தேர்தல் மற்றும் பொருட்களின் விலை ஏற்றங்கள் குறித்தும் கருத்து தெரிவித்தார்.

# அப்பளம் சாப்பிட்டதற்காக சிறுமியின் வாயில் சூடு வைத்த தாயார் கைது

அக்டோபர் 09. 2021



கிளிநொச்சி, அக்கராயன் விநாயகர் குடியிருப்புப் பகுதியில் 5 வயது மகளுக்கு நெருப்பால் சுட்ட தாய் கைது செய்யப்பட்டுள் ளார்.

தாயார் பொரித்து வைத்த உணவின் அப்பளத்தை குறித்த சிறுமி தாயாருக்குத் தெரியாமல் எடுத்துச் சாப்பிட்டுள்ளார். இதனால் தாயார் பெற்ற மகளுக்கு வாய்ப் பகுதியில் நெருப்பால் சுட்டுள்ளார். சம்பவத்தை அவதானித்த சிறுமியின் பேரன் அக்கராயன் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமி கிளிநொச்சி வைத்தியசாலை யில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

சிறுமியின் தந்தை தொழிலுக் குச் சென்ற வேளை இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.




# ஸ்காபரோ மருத்துவமனைகளுக்கு 26 மில்லியன் டொலர்கள் வழங்கல்

30.09.2021

ஒன்ராறியோ மாநிலத்திலுள்ள நோயாளர்களுக்கு உயர்தர பராமரிப்பினை வழங்குவதற்கென ஸ்காபரோ சுகாதார கட்டமைப்புக்கு 26.83 மில்லியனுக்கும் அதிகமான நிதி வழங்கப்பட்டுள்ளது.




கோவிட்-19 நோய்த்தொற்றால் உருவான நிதி நெருக்கடியிலிருந்து மருத்துவமனைகளை விடுவிப்பதற்கு உதவு முகமாக முன்னரே அறிவிக்கப்பட்ட 1.2 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான நிதி ஒதுக்கீட்டின் ஒரு பகுதியான இந்நிதியானது, மருத்துவமனைகளின் மீதான நிதியியல் அழுத்தத்தினைக் குறைப்பதுடன் ஒன்ராறியோ வாழ் மக்களின் மருத்துவ தேவைகளுக்கும் அவர்களுக்கான உயர்தர சேவையை தொடர்ந்து வழங்குவதற்கும் பயன்படும். இந்நிதியானது, கோவிட்-19 நோய்த்தொற்றினால் உருவாகும் எத்தகைய மாறுபட்ட நெருக்கடி நிலையையும் மருத்துவமனைகள் சமாளிக்க உதவியாக அமையும்.

ஒன்ராறியோவிலுள்ள பல மருத்துவமனைகள் அதிகரித்த நோய்த்தொற்றால் ஏற்பட்ட நிலைமையின் நிமித்தம் தமது வருடாந்த நிதி ஒதுக்கீட்டுக்கான பற்றாக்குறையால் நெருக்கடிக்கு முகங்கொடுத்து வருகின்றன. முக்கியமான இத்தருணத்தில் ஒன்ராறியோவிலுள்ள மருத்துவ மனைகள் தமது நிதிநிலையில் ஸ்திரத்தன்மையுடன் விளங்குவது இன்றியமையாதது. எனவேதான், ஒன்ராறியோ அரசானது வரலாற்றுத் தேவையான மருத்துவமனைகளின் நிதிப்பற்றாக்குறையைப் போக்கும் விதத்தில் இந்நிதியினை வழங்குகிறது.

இந்த 26.8 மில்லியன் நிதி ஒதுக்கீடானது ஸ்காபரோ மருத்துவமனைகளின் நிதிநிலையை வலுவாக வைத்திருக்க உதவுவதுடன், ஸ்காபரோ வாழ் மக்களுக்குத் தேவையான உயர்தர மருத்துவ பராமரிப்பையும்




வழங்கும்.

# முதல் முறையாக கனடாவில் நடாத்திய அக்கினிப் பறவைகளின் வருடாந்த வேலைத்திட்டமாகிய Hunger-strike For Thileepan (HFT)

செப்ரெம்பர் 26, 2021

முதல் முறையாக கனடாவில் நடாத்திய அக்கினிப் பறவைகளின் வருடாந்த வேலைத்திட்டமாகிய **Hunger-strike For Thileepan**.

ஞாயிறு 26.09.2021 காலை 10 மணி முதல் மாலை 2 மணி வரை இத்திறந்தவெளி நினைவு நிகழ்வு Milliken District Park, Toronto, Ontario வில் நடைபெற்று மக்களின் வரவேற்பையும் பேராதரவையும் பெற்றிருந்தது. ஈழத்தமிழர்களாகிய நாம், எமது சமூகத்திடையேயும், வேற்று போராடும் சமூகங்களுடனும் இணைந்து செயற்படுவதற்கான அடித்தளமாக



இவ்வேலைத்திட்டம் அமைந்துள்ளதாக நாம் பார்க்கின்றோம்.

அக்கினிப் பறவைகளினால் உலகளாவிய ரீதியாக 2017ம் ஆண்டு முதல் வருடாந்தம் லெப். கேணல் திலீபனின் நினைவாக நடாத்தப்பட்டு வரும் 30-மணி நேர அடையாள உண்ணாநிலைப்போராட்டத்தை மையமாகக்கொண்டதே HFT எனும் வேலைத்திட்டம். இதில் நாம் முதல் முறையாக ஒரு நிகழ்நிலை நிகழ்வினூடாக இணைந்திருந்தோம். இவ்வுண்ணாநிலைப்போராட்டத்தினூடாக, லெப். கேணல் திலீபனின் கோரிக்கைகளுடன், சர்வதேசச் சமூகத்தை நோக்கிய கோரிக்கைகளும், இவ்வேலைத்திட்டம் நடாத்தப் பட்டு வரும் புலம்பெயர் நாடுகளை நோக்கிய கோரிக்கைகளும் வருடாந்தம் முன்வைக்கப்பட்டுவருகின்றன. அந்தவகையில், இவ்வாண்டு எம்மால் ஆகமொத்தம் முன்வைக்கப்பட்ட 36 கோரிக்கைகளில், 12 கோரிக்கைகள் கனடிய அரசை நோக்கியவையாக அமைகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இக்கோரிக்கைகள், தமிழர்களாகிய எமது போராட்டத்தின் தொடர்ச்சி சம்மந்தப்பட்டதாகவும், தமிழினவழிப்புத் தொடர்பானதாகவும், எம்மைப்போன்ற இனவழிப்பிற்கு ஆளாக்கப்பட்டுவரும் கனடாவின் பூரவக்குடியினருடனும் இணைந்து நிற்கும் வகையில் வரையறுக்கப்பட்டுள்ளன. இக்கோரிக்கைகள் அனைத்தும் அரசாங்க பீடங்களுக்கு கடிதங்களாக சர்வதேச ரீதியில் அனுப்பப்பட்டுள்ளன என்பதை நாம் இங்கு பதிவுசெய்து கொள்ள விரும்புகின்றோம்.

**மேலும் 26.09.2021 அன்று நடாத்தப்பட்ட நிகழ்வில் பின்வரும் அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன:**



- நல்லூரில் அமைக்கப்பட்டு இனவழிப்பினால் அழிக்கப்பட்ட நினைவுத்தூபியின் அமைப்பில் மீண்டும் கட்டப்பட்ட 4 மீட்டர் உயரமான லெப். கேணல் திலீபனின் நினைவுத் தூபி.
- Tamil Canadian Centre Civic Action (TCCCA) நடாத்தும் உணவு நன்கொடைக்கான நன்கொடைத் தளம் - இதனூடாக 1,172 pounds உலர் உணவுகள் சேகரிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக்கொடி ஏற்றிவைக்கப்பட்டமையும், கனடிய தேசியக்கொடி ஏற்றிவைக்கப்படாதமையும் கவனத்திற்குரிய அம்சங்களாக அமைகின்றன. இன்றுவரை கட்டமைக்கப்பட்ட இனவழிப்பை தமிழர்களாகிய நாம் அனுபவித்து வருகின்றோம். அதே போன்று, கனடியக் கட்டமைப்புக்களால் பல ஆண்டுகளாக இந்நாட்டுப் பூர்வக்குடி மக்கள் இனவழிப்புக்கு ஆளாகிவருகின்றன. இவ்வினவழிப்பின் சின்னமாக விழங்கும் கனடாவின் தேசியக்கொடியினை நாம் ஏற்றவுமில்லை எதிர்வரும் காலங்களில் கனடாவில் நடாத்தப்படவிருக்கும் அக்கினிப் பறவைகளின் நிகழ்வுகளிலும் இக்கொடி



ஏற்றிவைக்கப்படாது என்பதையும் நாம் ஆணித்தரமாக இத்தருணத்தில் தெரிவிக்க விரும்புகிறோம்.



இளைஞர்களாகிய நாம், எமது இவ்வாறான தூய அரசியற் தளங்களினூடாக தமிழிறைமையினைப் பாதுகாப்பதோடு, அடுத்த சந்ததிகளுக்கும் கடத்தும் பணியில் உள்ளோம். அந்தவகையில் எமது போராட்டத்தின் முன்நிலையிலிருந்து தமிழிறைமையினை என்றும், எதிலும், எப்படியும் விட்டுக் கொடுக்கமாட்டோம் என்று உறுதி எடுத்துக்கொள்கிறோம்.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

வெல்வது உறுதி
இங்ஙனம்,

அக்கினிப் பறவைகள் அமைப்பின் கனடாப் பிரிவினர்

# தமிழக செய்திகள்



# கூடங்குளத்தில் அணுக்கழிவு மையம்

## சபாநாயகர் அப்பாவு தரும் எதிர்ப்பு

செப்ரெம்பர் 30, 2021

3ஆவது, 4ஆவது உலைகளிலிருந்து வெளியாகும் அணுக் கழிவுகளை கூடங்குளத்திலேயே சேமிக்கும் திட்டத்தை ஒன்றிய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என சபாநாயகர் அப்பாவு தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி :
கூடங்குளம் அணுமின் நிலைய வளாகத்தில் ஏற்கனவே 100-க்கும் மேற்பட்ட முறை உற்பத்தி நிறுத்தப்பட்டு மோசமான முறையில் 1000 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட இரண்டு அணுவுலைகள் இயங்கிவருகின்றன.

இந்த அணு உலையால் கூடங்குளம், இராதாபுரம், சுற்று வட்டாரப் பகுதி மக்களுக்குப் பல்வேறு உடல்நல பாதிப்பு ஏற்படும் என்பதால் அப்பகுதி மக்கள் பெரும் போராட்டத்தில் ஈடுபட்ட பிறகும் இந்த அணுமின் நிலையம் செயல்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

கூடங்குளத்தில் அணுக்கழிவு மையம்தற்போது, அதே வளாகத்திற்குள் மேலும் 1000 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட நான்கு அணுவுலைகள் அமைக்கும் பணியை தேசிய அணுமின் சக்திக் கழகம் மேற்கொண்டுவருகிறது.

இந்நிலையில் கடந்த ஆகஸ்ட் 23ஆம் தேதி இந்திய அணுசக்தி ஒழுங்காற்று வாரியம் கூடங்குளத்தில் அமைக்கப்பட்டு வரும் 3, 4 அணுவுலைகள் செயல்படத் தொடங்கியதும் அவற்றி



லிருந்து உண்டாகும் அணுக் கழிவுகளையும் கூடங்குளம் வளாகத்திற்குள்ளாகவே சேமித்துவைப்பதற்கான இடத்தேர்வு அனுமதியை வழங்கியுள்ளது.

ஒன்றிய அரசின் இந்த முடிவுக்கு ராதாபுரம் சட்டப்பேரவை திமுக உறுப்பினரும் தமிழ்நாடு சட்டப்பேரவை சபாநாயகருமான அப்பாவு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து இன்று இராதாபுரத்தில் செய்தியாளரைச் சந்தித்துப் பேசிய அவர், "கூடங்குளம் அணு உலை கழிவை இங்கு வைக்கக் கூடாது என்று 2021 ஜூலை 20ஆம் தேதி அன்றே கூடங்குளம் அணுசக்திக் கழக அலுவலரிடம் மனு அளித்துள்ளேன்.

நூற்றுக்கும் மேற்பட்டோர் பாதிப்புமக்கள் அதிகம் வாழும் பகுதி என்பதால் கூடங்குளத்தில் அணுக்கழிவு மையம் அமைக்கக் கூடாது என்பதை ஒன்றிய அரசுக்கு கோரிக்கையாகத் தெரிவித்துள்ளேன். ஒன்றிய அரசு இதனை மறுபரிசீலனை செய்ய வேண்டும். கடந்த இரு நாள்களுக்கு முன்பாக அருகில் இருக்கும் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மருத்துவ மனைக்குச் சென்றபோது அங்கு இராதாபுரம், சுற்றுவட்டாரப் பகுதியைச் சேர்ந்த மக்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் புற்று நோயால் பாதிக்கப்பட்டது தெரியவந்தது.எனவே இங்கு மேலும் அணு உலைகளை அதிகரித்தால் புற்றுநோய் பாதிக்கும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். ஒன்றிய அரசு இதனைப் பரிசீலிக்க வேண்டும். இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது மக்கள் வசிக்காத பகுதியான பாலைவனம் போன்ற பகுதிகளில்தான் பொக்ரான் வெடிகுண்டு சோதனையை நடத்தினார்.

இந்த மாதிரியான மக்கள் வாழத் தகுதியற்ற இடங்களில் அணுக்கழிவு மையம் அமைக்கப்பட வேண்டும். இதனை ஒன்றிய அரசு உறுதிசெய்ய வேண்டும். மக்கள் அதிகம் வாழும் கூடங்குளத்தில் அணு உலை கழிவு மையம் அமைக்கப் பட்டால் மதுரை வரையிலும் அதன் பாதிப்பு இருக்கும். அருகிலிருக்கும் மாநிலமான கேரளாவில் இதன் பாதிப்பு இருக்கும் என்ற அச்சம் மக்களிடையே இருக்கிறது. எனவே தமிழ்நாடு அரசின் முதன்மைச் செயலர் வரை இது குறித்து

# விடுதலை கிடைக்குமா இல்லையா என்ற கேள்வியோடு ஒவ்வொரு நாளையும் மிகுந்த சிதமத்தோடு கழித்துவருகின்றோம் திருச்சி சிறப்பு முகாமில் உள்ள ஈழத்தமிழர்கள்

அக்டோபர் 01, 2021

விடுதலை கிடைக்குமா இல்லையா என்ற கேள்வியோடு ஒவ்வொரு நாளையும் மிகுந்த சிரமத்தோடு கழித்துவருகின்றோம்-திருச்சி சிறப்பு முகாமில் உள்ள இலங்கை தமிழர்கள் வடக்கு கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கு கடிதம்



நாடு திரும்ப விரும்பு
சிறைவாசிகள்
சிறப்பு முகாம்
திருச்சி
2021.09.30

மதிப்பிற்குரிய,
பாராளுமன்ற உறுப்பினர்கள்
வடக்கு கிழக்கு மாகாணம். மற்றும்
தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள்

ஐயா,

தடுப்புக் காவலில் இருந்து விடுதலை பெற்றுத்தரக் கோரிக்கை

திருச்சி சிறப்பு முகாமில் தற்போது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நாங்கள் ஒன்பது பேரும், இலங்கையில் இருந்து கடவுச்சீட்டு மூலம் சுற்றுலா நுழைவுச்சீட்டு பெற்று சட்டரீதியாக இந்தியாவிற்கு வந்தவர்கள்.

நாங்கள் நுழைவுச்சீட்டு கால எல்லை முடிந்த மற்றும் வாழ்வாதாரம் காரணமாக இந்தியக்கடவுச்சீட்டுப் பெற முயற்சி செய்த குற்றத்திற்காக , கைது செய்யப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாகத் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ளோம்.

இங்கு எங்களது குற்றங்களுக்குரிய தண்டனைக்காலம் ஆறு மாதங்கள் தொடக்கம் ஒரு வருடம் மட்டுமே. ஆனால் நாங்கள் எந்தவித நீதிமன்ற நடவடிக்கைகளுக்கும் கொண்டுசெல்லப்படாது கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டிருக்கிறோம். விடுதலை கிடைக்குமா இல்லையா என்ற கேள்வியோடு இங்கு ஒவ்வொரு நாளையும் மிகவும் சிரமத்தின் மத்தியில் கழித்துவருகிறோம்.

எமது விடுதலையை வலியுறுத்தி 50 நாட்களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோம். இப்போராட்டத்தின் போது எம்மில் சிலர் விரக்தியின் உச்சத்தில் தமது உயிரையும் மாய்ப்பதற்கு முயற்சித்த பரிதாப சம்பவங்களும் இடம்பெற்றன.

நாங்கள் இந்தியாவில் இருந்த காலத்திலோ அல்லது இலங்கையில் இருந்த காலத்திலோ எந்தவித குற்ற நடவடிக்கைகளிலும் ஈடுபடாதவர்கள்.எங்கள் குடும்பங்கள் மிகவும் வறுமையினால் எந்தவித உதவியும் இன்றி வாழ்கின்றனர். சிலரது குடும்பங்கள் சீர்குலைந்து போகும் மிக வேதனையான சூழ்நிலைகளுக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனால் பெரும் மன உழைச்சலுக்குள்ளாகியுள்ளோம்.

கடந்த 27 ஆம் திகதி சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவொன்றை பிறப்பித்துள்ளதாக ஊடகங்கள் ஊடாக அறிந்தோம் அதில்,

பொதுமன்னிப்பு அடிப்படையில் எங்களை விடுதலை செய்து நாட்டிற்கு திருப்பி அனுப்புமாறு தமிழக அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்யுங்கள்

விடுதலை கிடைக்குமா இல்லையா என்ற கேள்வியோடு ஒவ்வொரு நாளையும் மிகுந்த சிரமத்தோடு கழித்துவருகின்றோம் என திருச்சி சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப் பட்டுள்ள இலங்கை தமிழர்கள் வடக்குகிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

பொதுமன்னிப்பு அடிப்படையில் எங்களை விடுதலை செய்து நாட்டிற்கு திருப்பி அனுப்புமாறு தமிழக அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்யுங்கள் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:
திருச்சி சிறைமுகாமில் தற்போது தடுத்துவைக்கப்பட்டுள்ள நாங்கள் ஒன்பது பேரும் இலங்கையில் இருந்து கடவுச்சீட்டு பெற்று சுற்றுலா விசா மூலம் இந்தியா வந்தவர்கள்.

நாங்கள் நுழைவுச்சீட்டு காலம் முடிவடைந்தது மற்றும் வாழ்வாதார உதவி பெறமுயன்றமைக்காக கைதுசெய்யப்பட்டு இரண்டு வருடங்களாக திருச்சி சிறையில் அடைக்கப்பட்டுள்ளோம்.

இங்கு எங்கள் குற்றத்திற்குரிய தண்டனைக்காலம் ஆறு மாதம் முதல் ஒருவருடம் மாத்திரமே ஆனால் நாங்கள் எந்தவித நீதிமன்ற நடவடிக்கைகளிற்கும் கொண்டு செல்லப் படாத நிலையில் திருச்சி முகாமில் அடைக்கப்பட்டுள்ளோம். விடுதலை கிடைக்குமா இல்லையா என்ற கேள்வியோடு ஒவ்வொரு நாளையும் மிகுந்த சிரமத்தோடு கழித்துவருகின்றோம்.

எமது விடுதலையை வலியுறுத்தி 50 நாள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோம் அவ்வேளை எம்மில் சிலர் விரக்தியின் உச்சத்தில் உயிரை மாய்த்துக்கொள் முயன்ற சம்பவங்களும் இடம்பெற்றன.

எம்மை எமது நாட்டுக்கு வருவதற்கு சம்பந்தப்பட்டவர் களுடன் கலந்துரையாடி விரைவில் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என ஆவணசெய்யவேண்டும்.

பொதுமன்னிப்பு அடிப்படையில் எங்களை விடுதலை செய்து நாட்டிற்கு திருப்பி அனுப்புமாறு தமிழக அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்யுமாறு வேண்டி நிற்கின்றோம் என அவர்கள் தங்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

# பாரம்பரிய மருத்துவத்தில் உலகத்தின் கவனத்தை இந்திய ஈர்க்க வேண்டும்!

01.10.2021

முதலாவது தென்னிந்திய பாரம்பரிய மருத்துவக் கருத்தரங்கம் கடந்த 01.10.2021 அன்று சென்னை லீலா பேலஸில் நடைபெற்றது. இதில் கலந்த கொண்டு தெலுங்கானா ஆளுநர் டொக்டர் தமிழிசை சௌந்தர்ராஜன் உரையாற்றினார். அவர் தனது உரையில் தெரிவித்ததாவது:

நானும் ஒரு மருத்துவர் என்பதில் இந்த மருத்துவ மாணவர்களுக்கு விருதுகளும் பாராட்டுகளும் வழங்குவதில் பெருமையடைகிறேன். முதலில் இந்த நிகழ்வை ஒருங்கிணைத்த உலகத்தமிழர் வர்த்தக அமைப்பின் தலைவர் செல்வகுமார் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த பாராட்டுக்கள். காரணம் இந்தியப் பிரதமரின் பெரும் விருப்பமான பாரம்பரிய இந்திய மருத்துவத்தை பாதுகாத்து வளர்த்தெடுப்பதில் அவர் கவனம் செலுத்துகின்றார். அந்த வகையில் முதல் தென்னிந்திய பாரம்பரிய மருத்துவக் கருத்தரங்கில் ஒருங்கிணைத்திருப்பத பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது...







பாரம்பரிய மருத்துவம் என்பது ஆங்கில மருத்துவத்திற்கு மாற்று மருத்துவம் அல்ல. இது இயற்கையாக முதலில் பயன்படுத்தப்பட்ட மருத்துவம். மாற்று மருத்துவம் என்பதையே மாற்ற வேண்டும். இதுவே மாற்றத்திற்கான வழியாக இருக்கம்.

நான் அலோபதி மருத்துவத்துறையில் பயின்று மருத்துவராக இருந்தாலும் இந்திய பாரம்பரிய மருத்துவத்தின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருக்கிறேன். எனது சிறுவயது முதலே என் தாயார் எனக்கு சுக்கு, மிளகு, திப்பிலி, போன்ற இயற்கை மருத்துவங்களை எவ்வாறு பயன்படுத்தத வேண்டும் என்று எனக்கு சொல்லி இருக்கிறார். இன்றும் நாம் இயற்கை மருத்துவத்தை எங்கள் வீட்டில் பயன்படுத்துகிறேன். இதை ஒரு ஆங்கில மருத்துவராகிய நானே சொல்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஒரு மருத்துவரைச் சந்தித்து மருத்துவர் எழுதிக் கொடுக்கும் மருந்துச் சீட்டைப் பெற்றவுடன் நோயாளிகள் கேட்கிற முதல் கேள்வி இந்த மருந்தில் பக்கவிளைவு இருக்கின்றதா? என்பதாகும். நாம் எடுத்துக்கொள்கின்ற பெரும்பான்மையான ஆங்கில மருந்து பக்கவிளைவு உள்ளதுதான்.

பெரிய பெரிய அறுவைச் சிகிச்சைகளுக்கும் திடீரென்று ஏற்படும் நோய்களுக்கும் நமக்கு அலோபதி மருத்துவம் தேவைப்படுகிறது. அதே சமயத்தில் இயற்கை மருத்துவம் எடுத்துக் கொண்டால் எதிர்ந்து போராட வேண்டிய அவசியமும் வராது.

கொரானா வந்த போது உலகமே தத்தளித்தது. ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரை பெரும் பாதிப்பு இல்லை. நம்முடைய பாரம்பரிய உணவு முறைதான் காரணம். குறிப்பாக உலக நாடுகளில் முதியவர்களை அதிகம் பாதித்த கொரோனா இந்தியாவில் குறைவாகவே பாதித்தது. காரணம் பாரம்பரிய உணவு முறைதான். பிரதமர் மோடி ஆட்சிக்கு வந்த பிறகு இந்தியாவில் 170 மருத்துவமனைகளை புதிதாக உருவாக்கியுள்ளார். இன்னும் நூறு மருத்துவமனைகளை புதிதாக கட்டிக் கொண்டிருக்கிறார். இவற்றில் அனைத்திலும் ஆயுஸ் என்கின்ற இந்திய பாரம்பரிய மருத்தவத்தை நிறுவியிருக்கிறார்கள். இன்றைய கால இளைஞர்கள் பயன்படுத்தும் வகையில் அதை நவீனப் படுத்தி இருக்கிறார்கள்.




இந்திய திருநாடு தெய்வீகமானது. அதே சமயத்தில் இயற்கை மருத்துவத்தில் சிறப்பு வாய்ந்த நாடு. ஆனாலும் நம் நாட்டின் இயற்கை மருத்துவத்தையும் யோகா போன்ற பாரம்பரிய பயிற்சி முறைகளையும் நாம் சரியாகப் பயன்படுத்துவது இல்லை. அதனால் இன்றைக்கு மருத்துவர்களை நம்பி நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த நிலை மாற வேண்டும். அதேபோல இங்கு ஆங்கில மருத்தவம் படிக்கின்ற மருத்துவர்கள் பெரும்பாலும் அமெரிக்காவிலேயே நிரந்தரமாக வசிக்கின்றார்கள். இந்த நிலைமாற வேண்டுமானால் இந்திய பாரம்பரிய இயற்கை மருத்தவத்தை படித்து அதை நாம் பயன்படுத்தினால் உலக நாடுகளே இந்தியாவை திரும்பிப் பார்க்கும். இந்தியாவிற்கு வந்து இயற்கை மருத்தவம் எடுத்துக் கொள்ளும் நிலை வரும். இயற்கை மருத்துவப் பொருட்களை பற்றி அதனுடைய பலன்களை பற்றி மக்களிடம் இன்னும் கூடுதலாக விழிப்புணர்ச்சியும் ஏற்படுத்த வேண்டும். இதில் குறிப்பாக திரிபலாவை பற்றி சொல்லும்

## இயற்கை வைத்தியம் மீது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்




பொழுது மூன்று பலம்வாய்ந்த மருந்து மட்டு மல்ல, மூன்று யுகத்திற்கும் பலம் தரக்கூடிய மருந்தாக இருக்கிறது.

நல்ல இயற்கை உணவை உண்ணாதவர்கள் மருத்துவரிடத்திலேயே செலவு செய்வார்கள் என்று நமது முன்னோர் சொல்லி வைத்திருக்கிறார்கள். இயன்ற அளவு இந்திய இயற்கை மருத்துவத்தை நாம் பயன்படுத்த வேண்டும்.

வீட்டில் கறிவேப்பிலை, இஞ்சி, மளிகு, சுக்கு போன்றவற்றை நாம் அதிகம் பயன்படுத்த வேண்டும்.

பெரும்பாலும் எல்லோரும் நடைப்பயிற்சி செல்வார்கள். உடற்பயிற்சி மேற்கொள்வார்கள். அதிக நேரம் உடற்பயிற்சி செய்தாலும் கூட, நேரடியாக அவர்கள் சரவணபவன் போன்ற உணவகங்களுக்குச் சென்று விருப்பமான உணவுகளை எல்லாம் சாப்பிடுவார்கள். இதனால் என்ன பயன்?

நாம் என்ன உண்ணுகிறோம் என்பதை உணர்ந்து உண்ணவேண்டும். நாம் அதற்கு ஏற்ற உடற்பயிற்சி, நடைப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். நாம் உண்ணும் உணவில் இயற்கை பாரம்பரிய உணவுகள் இருக்க வேண்டும். நமது தமிழர்கள் வாழை யிலையில் சாப்பிடுவதை வழக்கமாக வைத்திருந்தார்கள். வாழையிலையில் இயற்கையாகவே நடுவில் ஒரு கோடு இருக்கும். நம் பகுதியில் சோறு வைத்து, அடுத்த அடுத்த பகுதியில் காய்கறிகள் வைத்து சாப்பிடுகிறோம்.

அப்படியே திருப்பிப் போட்டால் நம் பகுதிகளில் காய்கறிகளையும் கீரைகளையும் அதிகமாக வைத்துக் கொண்டு அடுத்த பகுதியில் குறைவாக சோறு வைத்து சாப்பிடுவதை வழக்கமாக எடுத்துக் கொள்ளவேண்டும்.

நல்ல உணவையும் நல்ல ஆரோக்கியமான மனநிலையும் நாம் வைத்துக் கொள்ள வேண்டும். நமது மருத்துவ முறையோடு நம்முடைய பாரம்பரிய யோகா உடற்பயிற்சி செய்து, இயற்கை மருத்து எடுத்துக் கொண்டால் நாம் வாழ்க்கை மிக மகிழ்ச்சிகரமாக இருக்கும். விருது பெற்ற அனைவருக்கும் எனது வாழ்த்துகளையும், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளருக்கு வாழ்த்துகளையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

# கைதிகளைப்போல வாழுறோம்!” மாற்றத்தை ஏற்படுத்துமா மறுவாழ்வு முகாம்? முகாம் தமிழர்கள் கூறுவது என்ன? – விகடன்



அக்டோபர் 11, 2021

எங்களுக்கு அரசாங்க வேலை கிடைக்காது. மெட்ரோ சிட்டிங்களுக்கு போயி தனியார் கம்பெனிகள்லையும் வேலை செய்ய முடியாது. சித்தாளாவோ, பெயிண்டராவோத்தான போகப்போறேன். அதுக்கு ஏன் நான் படிக்கனும்னு எங்க புள்ளைங்க கேக்கும்போது நெஞ்சு கனத்துப் போகுது” -இலங்கை தமிழர்கள்

“இலங்கைத் தமிழர் அகதிகள் முகாம் இனி இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் என்று அழைக்கப்படும். இலங்கைத் தமிழர்கள் ஆதரவற்றவர்கள் அல்லர். அவர்களுக்காக நாங்கள் இருக்கிறோம்” என்று சட்டப்பேரவையில் தெரிவித்த முதல்வர் ஸ்டாலின், 110 விதியின் கீழ் அவர்களுக்கு பல்வேறு சலுகைகளையும் அறிவித்திருக்கிறார். முதல்வரின் இந்த அறிவிப்பு இலங்கைத் தமிழர்களிடம் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை அறிய அவர்களின் முகாம்களுக்குச் சென்றோம். விழுப்புரம் மாவட்டத்தில் இருக்கும் கீழ்ப்புத்துப்பட்டு முகாமுக்குச் சென்றோம். புதுச்சேரி - சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் கிழக்கு நோக்கி 300 மீட்டர் தூரத்தில் தனித்துத் தெரிகின்றன அந்த குடியிருப்புகள். தென்னங்கீத்துகளாலும், அரசியல் கட்சிகளின் பேனர்களாலும் அமைக்கப்பட்டிருந்த சுற்றுச்சுவர் நம்மை வரவேற்றன.

கடந்த 30 வருடமாக முகாமில் வசித்துவரும் லோகநாயகியிடம் பேசினோம். “1990-ல் இந்தியாவுக்கு அகதியளா வந்தோம். அன்று ஆட்சியில இருந்த கலைஞர்தான் 22 போட்டுகளை அனுப்பி ராமேஸ்வரம் வழியா எங்களையெல்லாம் தமிழ்நாட்டுக்கு கூட்டிக்கிட்டு வந்தாரு. அதுலதான் நானும் வந்தேன். விழுப்புரம் எம்.பி ரவிக்குமார் முயற்சியால அகதிங்கறத நீக்கி இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் என்று முதல்வர் அறிவித்திருப்பது எங்களுக்கு ஒரு நல்ல சொல்லாயிருக்குது.

எங்களின் 30 ஆண்டுகால மன உளைச்சலுக்கு முதல்வரய்யா மருந்து தடவியிருககாரு. வான் வழியாக வந்தால் முக்கால் மணி நேரம். கடல் வழியா வந்தால் மூனு மணி நேரம். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையேயுள்ள நேரம் அவ்வளவுதான். அப்படி இருந்தும் நாங்க இங்க அகதியளா இருப்பது எங்களுக்கு மன உளைச்சல்தான். மத்திய, மாநில அரசுகள் அதை கவனத்துல எடுத்துக்கிட்டு எங்களுக்கு இந்த நாட்டு உரிமையைத் தரணும். ஏன்னா நல்லாத் தெரியும் இலங்கைல இப்போ ராயபக்ஷேதான் ஆட்சியில இருக்காரு. அதனால் எங்களை அங்கே குடைஞ்செடுக்கறதுக்கு தயாராகத் தானிருப்பார்கள்.”

### இலங்கை தமிழர்கள் மறு வாழ்வு முகாம்

“திரும்பவும் நாங்கள் அங்க போறதாயிருந்தால், முப்பது வருசம் அகதியளா இங்க தப்ப வச்ச உயிரை அங்க கொண்டு போயி குடுக்கற மாதிரிதான் இருக்கும். நாங்கள் சட்டவிரோதமாக நுழைந்தோமென்று சட்டசபையில் பேசுகிறார்கள். உயிரைத் தப்ப வைக்க பக்கத்து நாட்டுக்குத்தானே வந்திருக்கறோம்? சட்ட விரோதமாக நாங்கள் வரயில்லையே? கனடாவுக்குப் போன என்னுடைய சிஸ்டர் அஞ்சு வருஷத்துல சிட்டிசன். ஆனா எங்க தாய் நாடான இந்தியாவுல 30 வருஷமா



நாங்க அகதியளாத்தான் இருக்கோம். எங்களுக்கு எல்லா சலுகைகளையும் செய்திருக்கும் ஸ்டாலின் ஐயா குடியுரிமையும் பெற்றுத் தரணும்.”

“அதேபோல ஒவ்வொரு மாசமும் எங்களை சிறைக் கைதிங்க மாதிரி வெய்யில்ல மணிக்கணக்கா நிக்கவச்சி சோதனை பண்றாங்க. வேலைக்குப் போயிருந்தாலும் அவங்க கூப்பிடற நேரத்துல அங்க நிக்கலைன்னா எங்க குடும்ப அட்டையை நீக்கிடுவாங்க. அதுக்கப்புறம் அரசோட உதவிகளும் எங்களுக்குக் கிடைக்காது. மறுபடியும் குடும்ப அட்டையை சேர்க்கணும்னா மெட்ராஸ்க்கு போயிட்டு வரணும். இதுனால எங்க புள்ளைங்க வெளில செஞ்சிக்கிட்டிருந்த வேலையும் போயிடும். அகதிங்கற பேரை எடுத்த மாதிரி, எங்களை அகதியளா நடத்தக் கூடாதுனும் உத்தரவு போடனும்னு முதல்வரய்யாவ கேட்டுக்கறோம்” என்றார்.

### இலங்கை தமிழர்கள் மறு வாழ்வு முகாம்

திருச்சி மாவட்டத்தில் துவாக்குடி அருகே உள்ள வாழவந்தான் கோட்டை பகுதியிலும், திருச்சி மாநகரில் உள்ள கொட்டப்பட்டு பகுதியிலும் இலங்கை தமிழர் முகாம்கள் அமைந்திருக்கின்றன. கொட்டப்பட்டு மறுவாழ்வு முகாமில் வசித்து வருபவரான தியாக விஜயன், “ஒரு அடிமை போலத்தான் இங்க வாழ்ந்துக்கிட்டு இருக்கோம். வர்றோம். ரேஷன் பொருளுங்க கூட குடும்பத் தலைவருக்கு 1,000/- ரூபாயும், மனைவிக்கு 750/- ரூபாயும், 12 வயசுக்குள்ள இருக்கற பசங்களுக்கு 400/- ரூபாயும் அரசு குடுக்குது. அதை மட்டும் நம்பித்தான் நாங்க வாழ்க்கையை ஓட்டிக்கிட்டு இருக்கோம். வெளியில எங்களால் எந்த வேலைக்கும் போக முடியாது. அப்படியே போனாலும் எங்களை கொலைக் குற்றவாளிகள் போல இவர்கள் கண்காணிக்கும் விதமும், நடந்துகொள்ளும் விதமும் ரொம்ப வேதனையானது” என்றார்.

ஈரோடு மாவட்டத்தில் ஈஞ்சம்பள்ளி, அறச்சலூர், பவானிசாகர் உள்ளிட்ட இடங்களில் முகாம்கள் அமைந்திருக்கின்றன. ஈஞ்சம்பள்ளி முகாமில் 162 குடும்பங்களைச் சேர்ந்த 500 பேர் வசித்து வருகின்றனர். 1993-ல் அரசு சார்பில் கட்டிக்கொடுக்கப்பட்ட 6 கழிப்பறைகள் பாழடைந்து போக, ஈரோட்டைச் சேர்ந்த சீமா என்ற தனியார் தொண்டு நிறுவனம் 20 கழிப்பறைகளை கட்டிக் கொடுத்திருக்கிறது. 500 பேருக்கு 20 கழிப்பறைகள் போதவில்லை என்பதால் முகாம்வாசிகளே தங்களது சொந்தப் பணத்தில் 40 கழிப்பறைகளை கட்டியிருக்கின்றனர்.

“இந்த கொரோனா காலக்கட்டத்துல ஒரு டாய்லெட்டை இத்தனை பேரு பயன்படுத்தறது ரொம்ப சிரமமா இருக்குங்க. சுகாதாரத்துல பப்ளிக் டாய்லெட்டை விட மோசமா இருக்கு. அரசாங்கம் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 100 சதுர அடியில் தான் வீட்டை கட்டிக் கொடுத்துருக்கு. அதுக்குள்ள தான் சமையலறை, படுக்கையறை, பாத்ரூம் எல்லாம் இருக்கு. வயசுப் புள்ளைங்க இருக்க வீட்டுல உடுப்பு மாத்துறது, தூங்குறதுன்னு எல்லாமே சிரமமா இருக்குது. சொந்தக்காரங்க யாராவது வந்தா அவங்களை பக்கத்து வீட்டுல தான் படுக்க வைக்கணும்” என்றனர்.

இலங்கைத் தமிழர்கள்
இலங்கைத் தமிழர்கள்

“பவானிசாகர் முகாமில் உள்ள 1,055 குடும்பங்களுக்கும் சேர்த்து வெறும் 30 குடிநீர் பைப்புகள் தான் இருக்கு. ஒரு குடிநீர் பைப்பை 30 குடும்பங்கள் பயன்படுத்த வேண்டியிருக்கு. ஒரு மணி நேரத்துக்குள்ள இந்த 30 குடும்பமும் எப்படி ஒரு குடும்பத்துக்குத் தேவையான தண்ணீரை புடிச்சிக்க முடியும்? 3,000 மக்கள் இருக்கற இந்த முகாம்ல வெறும் 220 டாய்லெட்தான் இருக்கு. அதுலயும் தண்ணி வசதி இல்லை. பக்கெட்டைத் தூக்கிட்டுதான் அலையணும். ஆத்தர அவசரத்துக்கு பொம்பளைங்க ஒதுங்க ரொம்ப சிரமப்படுறாங்க. நிம்மதியா டாய்லெட்கூட



போக முடியலை. குடியுரிமை இல்லாததால சொந்தமா ஒரு பைக் கூட எங்க பேர்ல வாங்க முடியலை. எங்கயாவது அடிபட்டு விழுந்தாலும் எந்த இன்ஸூரன்சும் எங்களுக்குக் கெடைக்காது. ஒவ்வொரு தேர்தல் அப்பவும் எங்களுக்கு ஏதாவது விடிவு கிடைக்காதானு ஏங்கி ஏங்கியே 30 வருஷம் போயிடுச்சி. எங்களுக்குக் குடியுரிமையை மட்டும் குடுத்தா போதும். வாழ்நாள் பூரா சாமி படம் இருக்க இடத்துல அவங்க படத்தை வெச்சிக் கும்பிடுவோம்” என்கிறார் பவானிசாகர் முகாமைச் சேர்ந்த ஸ்ரீகாந்தன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் தோப்புக் கொல்லை, லேணாவிளக்கு, அழியாநிலை என மூன்று இடங்களில் முகாம்கள் இருக்கின்றன. அழியா நிலை முகாமைச் சேர்ந்த ஜேசுராஜ், “எங்கள்ல இறந்தவங்களுக்கு ஈமச் சடங்கு செய்ய அரசாங்கம் 5,000 ரூபாய் தருது. ஆனா மூனு மாசத்துக்கு அப்புறம்தான் அது கையில கெடைக்குது. 1995 காலகட்டத்துல மார்க் அடிப்படையில எங்க புள்ளைங்களுக்கு டாக்டர் சீட் கெடச்சிது. அதற்கப்புறம் அத நிறுத்திட்டாங்க. இப்போ எங்க புள்ளைங்க அதிக மார்க் எடுத்தாலும் மருத்துவப் படிப்புக்கான நீட் தேர்வு கிடைக்கறதில்ல. எங்க புள்ளைங்க பலபேருக்கு வெளி நாட்டுல போய் படிக்கறதுக்கு வாய்ப்பு கெடைக்குது. ஆனா பாஸ்போர்ட் கிடைக்காததால அந்த வாய்ப்புகளும் போயிடுது” என்கிறார்.

இலங்கை தமிழர்கள்

கரூர் மாவட்டம், ராயனூர் முகாம்வாசி ஒருவர், “நான் அஞ்சு வயசுல இலங்கைல இருந்து இங்க வந்தேன். இப்போ 42 வயசாகுது. கெடைச்ச வேலையைப் பார்த்து காலத்தை ஓட்டிட்டேன். ஆனா இருவது வயசாகும் எம்மகனை காலேஜ்ல படிக்க வைக்கறேன். ஆனா இங்க நெறைய பசங்க பட்டப்படிப்பை முடிச்சிட்டு அரசாங்க வேலைக்கும் போக முடியல. தனியார் கம்பெனிகளுக்கும் போக முடியல. அதனால ரெண்டு டிகிரிகள் வாங்கன பசங்க கூட கட்டட வேலை, கொத்தனார், பெயிண்ட் அடிக்கறதுனு கெடைக்கற வேலைக்குப் போறாங்க.

அதல்லாம் பார்த்துட்டு எம்மவன், நமக்கு அரசாங்க வேலை கிடைக்காது. மெட்ரோ சிட்டிங்களுக்கு போயி தனியார் கம்பெனிகள்லையும் வேலை செய்ய முடியாது. சித்தாளாவோ, பெயிண்டராவோத்தான போகப்போறேன். அதுக்கு ஏன் நான் படிக்கனும்ணு கேக்கும்போது நெஞ்சு கனத்துப் போகுது. ஒரு தலமுறையே அகதியளா ஜெயில் வாழ்க்கையை வாழ்ந்துட்டோம். அடுத்த ஜெனரேஷனுக்கும் எங்க நெலம வரக்கூடாது. வாரத்துல நாலு நாள் செக்கிங் வர்றாங்க. அப்ப நாங்க முகாம்ல இல்லாம போயிட்டோம்னா, எங்கப் பேரை லிஸ்ட்டுல இருந்து நீக்கிடுறாங்க.

“அகதிகள் முகாம் அல்ல மறுவாழ்வு முகாம்” – முதல்வர் ஸ்டாலின்– சட்டசபை ஹைலைட்ஸ்!

அப்புறம் எங்கயாச்சும் சின்ன பிரச்னை ஏற்பட்டா ‘அவன் பண்ணக்கூடிய ஆள் தான்’னு எங்க மேல கேஸை போட்டுடறாங்க. கல்லூரிகள்ல இட ஒதுக்கீடுனு அறிவிச்சுக்காங்களே தவிர, ‘வேலை வாய்ப்பில் முன்னுரிமை, வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும்’னு சொல்லலை. நாங்களும் மனுஷங்கதான். ஈழத்தமிழர்களாக பிறந்ததை தவிர நாங்க வேறென்ன பாவம் செஞ்சோம்?” என்று கேட்கும்போதே அவரது குரல் உடைகிறது.

இலங்கை தமிழர்களின் இந்த வேதனைக் குரல்கள்குக்கு செவிமடுப்பாரா முதல்வர் ஸ்டாலின்?

# உலக செய்திகள்

## ஈக்குவடோரில் சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரம், 120 பேர் பலி



செப்ரெம்பர் 30, 2021

ஈக்குவடோரில் சிறைச்சாலையொன்றில் ஏற்பட்ட கலவரம் காரணமாக 120 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

நாட்டின் வரலாற்றில் இடம்பெற்ற மோசமான படுகொலை என வர்ணித்துள்ள அதிகாரிகள் ஐவர் தலைதுண்டிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என குறிப்பிட்டுள்ளனர்.

சிறைச்சாலை போர்க்களமாக காணப்படுவதையும் பல உடல்கள் காணப்படுவதையும் காண்பிக்கும் படங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

கைதிகள் கத்திகள் துப்பாக்கிகள் குண்டுகளை பயன்படுத்தி மோதலில் ஈடுபட்டனர் என தெரிவித்துள்ள பொலிஸ் அதிகாரி பாஸ்டகோ புவானகோ சிறையின் கழிவுநீர் வெளியேறும் குழாய்களில் பல உடல்கள் காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.

மருத்துவமனையின் பிரதே அறைக்கு வெளியே கண்ணீருடன் கைதிகளின் குடும்பத்தவர்கள் காத்திருக்கின்றனர். அவர்கள் தங்கள் குடும்பத்தவர்கள் எவ்வாறு தலை துண்டிக்கப்பட்டு கொலை செய்யப்படடனர் என்பதை விபரித்துள் ளனர்.

மெக்சிக்கோவில் செயற்படும் பலம்பொருந்திய போதைப் பொருள் கும்பலே சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்திற்கு காரணம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டவர்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்த சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தை அடக்குவதற்காக 400 பொலிஸாரை பயன்படுத்தியதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## வீதியோரமாக கைவிடப்பட்ட கொள்கலனிற்குள் 125 குடியேற்றவாசிகள் - குவாத்தமாலாவில் உயிருடன் மீட்பு

அக்டோபர் 10, 2021

வீதியோரமாக கைவிடப்பட்ட கொள்கலன் ஒன்றிற்குள் இருந்து 126 குடியேற்றவாசிகளை மீட்டுள்ளதாக குவாத்தமலா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



கொள்கலன் ஒன்றிற்குள் அலறல் சத்தம் கேட்பதாக உள்ளூர் மக்கள் தெரிவித்ததை மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது கொள்கலனிற்குள் குடியேற்றவாசிகள் மறைத்துவைக்கப்பட்டுள்ளமை தெரியவந்தது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவர்களை மெக்சிக்கோ ஊடாக அமெரிக்காவிற்கு கொண்டு செல்வதாக தெரிவித்து பணம் வாங்கிய ஆள்கடத்தல்காரர்கள் அவர்களை கொள்கலனிற்குள் கைவிட்டுவிட்டு சென்றிருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்டவர்களில் அனேகமானவர்கள் ஹெய்ட்டியை சேர்ந்தவர்கள் நேபாளத்தை சேர்ந்தவர்களும் மீட்கப் பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொள்கலனிற்குள் இருந்து அலறல்களையும் அதனை தட்டும் சத்தத்தையும் கேட்டோம் அதனை திறந்து பார்த்த வேளை ஆவணங்கள் அற்ற 126 பேர் காணப்பட்டனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவர்களிற்கு உணவு குடிநீரை வழங்கிய தற்காலிக தங்குமிடத்திற்கு அழைத்து சென்றுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஹொன்டுராசிற்கு வந்த இவர்கள் அங்கிருந்து ஆபத்தான பயணத்தினை மேற்கொண்டுள்ளனர் என அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

உயிருடன் மீட்கப்பட்டவர்களை ஹொண்டுராசிடம் கையளிக்கவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிலநாட்களிற்கு முன்னரே அமெரிக்க எல்லையில் மூன்று கொள்கலனிற்குள் 350 குழந்தைகள் உட்பட 652 பேரை மெக்சிக்கோ அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.



## செவ்வாயில் நீர் நிலைகள் இருந்ததற்கான அடையாளங்கள் - ரோவர் விண்கலம் படம் அனுப்பியது

அக்டோபர் 09. 2021

செவ்வாய்க் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா, பெர்சவரன்ஸ் என்கிற ரோவரை கடந்த ஆண்டு விண்ணுக்கு அனுப்பியது.

கடந்த பெப்ரவரி மாதம் செவ்வாய்க்கிரகத்தில் வெற்றிகரமாகத் தரையிறங்கிய பெர்சவரன்ஸ் ரோவர், செவ்வாய்க் கிரகத்தை படம் பிடித்து பூமிக்கு அனுப்பியது.

செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் வாழ்ந்தனவா என்பதை ஆராய அங்கிருந்து பாறை மற்றும் மண் துகள்களைச் சேகரிப்பதே பெர்சவரன்ஸ் ரோவரின் முக்கிய பணியாகும்.



ஆனால் பாறைத் துகள்களைச் சேகரிக்கும் பெர்சவரன்ஸ் ரோவரின் முதல் முயற்சி தோல்வியில் முடிந்ததாக கடந்த ஓகஸ்ட் மாதம் நாசா அறிவித்தது. எனினும் கடந்த மாத இறுதியில் செவ்வாய்க்கிரகத்தின் ஜெசேரோ பள்ளத்தாக்கில் இருந்து 2 பாறை துகள்களை பெர்சவரன்ஸ் சேகரித்தது.

அதன் தொடர்ச்சியாக தற்போது செவ்வாய்க் கிரகத்தில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆறு, ஏரி உள்ளிட்ட நீர் நிலைகள் இருந்ததற்கான அடையாளங்களை பெர்சவரன்ஸ் ரோவர் படம் பிடித்து அனுப்பியுள்ளது.

நாசா அந்தப் படங்களை டுவிட்டரில் வெளியிட்டு, “விண்வெளியில் இருந்து, செவ்வாய்க் கிரகத்தை ஆராய்ந்து வரும் பெர்சவரன்ஸ் ரோவர், நீர்நிலையுடன் இருந்த ஜெசேரோ பள்ளத்தாக்கின் கடந்த காலத்தை பற்றிய அற்புதமான குறிப்புகளை எங்களுக்குத் தந்தது. புவியியல் குறித்த இந்த ஆச்சரியங்கள் விஞ்ஞானிகளை உற்சாகமடையச் செய்துள்ளன” எனத் தெரிவித்துள்ளது.

## ஆப்கானிஸ்தானில் மசூதியொன்றில் தற்கொலை குண்டுத்தாக்குதல் ஐம்பதுக்கும் அதிகமானவர்கள் பலி

அக்டோபர் 08, 2021

ஆப்கானிஸ்தானின் குண்டுஸ் நகரில் மசூதியொன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 50க்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஷியா முஸ்லீம் சமூகத்தினரின் மசூதியில் இடம்பெற்ற இந்தக் குண்டுவெடிப்பில் 100க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர். மசூதிக்குள் உடல்கள் காணப்படுவதை காண்பிக்கும் படங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன. தற்கொலை குண்டுத் தாக்குதலே இடம்பெற்றுள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன.




MORTGAGE
நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
லைன் ஒப் கிரெடிட்(HELOC)
ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
Private 1st Mortgage (No Income Verification)
2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)
பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா
MORTGAGE IN ANY SITUATION
கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?
MORTGAGE CLINIC
www.mortgagecliniccanada.com
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011
RIGHT AT HOME REALTY INC.
ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker
Cell : 416-624-4843
எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)
MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Lic # 10530
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto ON M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto ON M2J 5B4


Manaja's
manajaskitchen.ca
MANAJA'S KITCHEN
A Fusion of Indian & Sri Lankan Cuisine
WE DO CATERING
மணம், சுவை கொண்ட அறுசுவை உணவுகளை
நிபுணத்துவத்துடன் தயார் செய்து விநியோகிப்பவர்கள்.
Specialized Mutton & Chicken Briyani
Take Out
Birthy Parties
Picnic / Get Together
or Office Parties
Backyard Dosa Party
அனைத்து தாயக சைவ
மற்றும் அசைவ உணவுகளுக்கு
உங்கள் விருப்பப்படி சிறந்த முறையில் தயாரித்த
அறுசுவை உணவுகளை செய்து குறிப்பிட்ட
நேரத்தில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
அழையுங்கள்
FREE Delivery for orders over $150 in GTA
75 Williamson Dr., W, Ajax ON L1T 4Y4
905.427.8263


bcpc
BOROS CANADIAN
PAPER CONVERTING INC.
Auto Body Masking Paper Rolls
Size 6", 18", 24" & 36"
Auto Painting Purposes
Medical Examine Paper Rolls
18", 21"&24"
Use For Medical Offices
Examination Table Paper Rolls
Disposable Chair or Tables Paper Rolls
Use for Salon Chairs & Spa Treatment Tables
Auto Body Masking Paper
Dental Examination Table Paper
Massage Table Paper Roll
Examination Table Paper Roll
Food Wrapping Paper Rolls
Meat Wrapping Paper Rolls
Alan Maniam
Director
647 299 2450
235 Nugget Ave., Unit 12, Scarborough ON M1S 3L3
boroscanadianpaper@gmail.com

# நாளைய மனிதருக்காக

# நமது இலக்கிய பணி என்ன?

எமது இலக்கியம் என்ற சொற்றொடர் ஒரு வித்தியாசமான அர்த்தத்தை உள்ளடக்கி நிற்கிறது. தமிழ்ப்பெருமக்கள் உலகெல்லாம் போராடிவாழும் காலமாகவே இக்காலம் திகழ்கிறது. அத்தோடு இம் மக்கள் ஆங் காங்கே தாம் வாழும் நாடுகளுக்கேற்ப தமது வாழ்வொழுங்கை மாற்றிக்கொள்ளவும் நேர் கிறது.

உண்மையில் மனித வாழ்வு தான் தேசத்தின் வாழ்வைப் பிரதிபலிப்பது. தான் எவ்வாறாக இருப்பின் அம் மக்களின் வாழ்வின் பிரதிவிம் பமே இலக்கியமாகவும் விரிகிறது.

தமிழகத்தில் வாழும் தமிழர்கள் எழுகோடி மக்களின் வாழ்வியல் ஒன்று ஈழத்தில் வாழும் தமிழினத்தின் வாழ்வுமற்றொன்றாக அமைந் தவிட்டது.

தமிழக வாழ்வில் பொதுவாக ஓர் அமைதி நிலை தென்பட்ட போதிலும் சமூகத்தின் தேசிய வாழ்வை ஊடறுத்து நோக்கும் ஒரு இலக்கியவாதிகளுக்கு அந்தச் சமூகத்தின் நெளிவு சுழிவுகள் பல தென்படவே செய்கின் றன. சாதிக்கலவரம், மதவெறியாட்டம், பெண்ணியம், பொருளாதார ஏற்றத்தாழ்வின் தாக்கம் போன்ற பல முதலாளியத்தின் வளர்ப் புக் குழந்தைகளின் திருவுருவங்கள் அங் குள்ள இன்றைய இலக்கியப்பொருளாக அமைந்து விடவதோடு இந்தக் குறைபாடு களைக் களைந்து மேல்நிலை காண்பதிலும் நாட்டம் காட்டப்படுகிறது.

எனினும் இவை எதுவுமே கண்ணில் படாது வானத்தில் முகில் ஏறி பயணம் செய்யும் படைப்பாளர்களும் உண்டு. இவற்றுக்கெல் லாம் சோதனை பாதனை என்று முத்திரை யும் குத்தப்படுகிறது. நூறு புத்தகங்களை எழுதிக் குவித்துவிடவேண்டும் என கங் கணம் கட்டிக்கொண்டுள்ளோரும் உண்டு. இதனை வாசிப்பதற்கு ஒரு கூட்டம் இருக்கவே செய்கிறது. தரமான வாசகர்கள் இல்லாத குறைபாடாக இது இருக்கலாம்.

சாளஸ் டிக்கன்சோ, லியோடால்ஸ்டாயோ இலக்கியத்தில் சோதனை நடாத்தியதாகத் தெரியவில்லை. அவர்கள் திசைதப்பிய வாழ் வின் பயங்கர அமைவை கோடிட்டுக் காட் டினார்கள். தாழ்ந்துபோன மனிதரின் அவலத் தை தெளிவாகப் படைத்து அவற்றின் பால் அனுதாப அலையை தோற்றுவிக்கும் நோக் குடன் தமது படைப்புகளைப் படைத்தார்கள். ஆண்டவனால் ஏற்படுத்தப்படாத வசதி படைத் தார்கள். ஆண்டவனால் ஏற்படுத்தப்படாத வசதி படைத்தவர்கள் வசதியற்றவர்கள் மீது ஏற்படுத்தும் கொடுமைகளின் பால் வாசகனும் விரக்தியை ஏற்படுத்தி இந்த சீரழிந்த சமுதாயத் தில் மாற்றத்தை துரிதப்படுத்துவதாக அமைந் தது அவர்கள் படைப்புகள். இதுவோ அவர்கள் தமது... மூலம் செய்துகொள்ளவிருந்த அறு வடையுமாகும்.

இலக்கியம் மகாசக்தி வாய்ந்ததெனலாம். கண்ணகி யை பத்தினி தெய்வமாக்கியதும் இராமனுக்கு கோயில் கட்ட வைத்தது இலக் கியத்திறனே. மாக்ஸிம் கார்க்கியின் தாய் நாவலில் உலாவிய 'ப வேல்" ருஷிய தேசத் திலும் பல பாவேல்களை உருவாக்கிவிட்டது என்பார்கள் திறனாய்வாளர்கள்.

எனவே, கைக்கத்தியை எடுத்து கழுத்தை நறுக்காது கத்தரிக்காயை வெட்டலாம். இலக் கியத்தை நல்ல வழிகளில் பயன்படுத்துவது இலக்கிய கர்த்தாக்களின் படைப்பாகும்.

இந்நிலையில் தமிழீழத்திலோ இலங்கையி லோ பேனா என்ற மேழிபிடிப்போர் மனித மனங்களை செல்வனே உழுது பயிரிடல் காலகட்ட கட்டளையாகிறது.



இலங்கைச் சரித்திரத்திற்கு முற்பட்ட காலந் தொட்டு எமது மண்ணில் வேரூன்றி வாழ்ந்த தமிழ்க்குடிகளால் ஒடுக்கப்பட்டும் பின்னர் ஆளப்பட்டதிலிருந்து இன்றுவரை சிறுபான் மையாகிவிட்ட தமிழினம் துரோகச் சதியினால் தொடர்ந்து ஏமாற்றப்பட்டதின் விளைவே இன் றைய தமிழீழத்தின் விடுதலைப் போராட் டமாகும். இனத்தைக் காக்க தேசத்தை விடு விக்க சிங்களப் படைகளுடன் தேசியத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலில் நடை பெறும் இப்போரிலே பகைவன் நம்மை ஒட்டு மொத்தமாக அழித்தொழிப்பதிலிருந்து நம்மை நம்பாது காப்பதோடு வெற்றிகளையும் சந்திக்கி றோம். தமிழினத்தின் மீது தொடுக்கப்பட்டுள்ள அநாகரீகமான இந்த பயங்கரவாதப் போர் இன்று ஜனநாயக உலகின் கண்களை திறந்தும் உள்ளது.

எனினும் எதிரியின் இப்போரிலே இன அழிவு என்றல்லாமல் இன அழிவுக்கு முன்னரே ஒரு கலாச்சார அழிவையும் அவன் தொடங்கி நடாத்துகிறான். இதில் அச்சத்தை தருவது பண்பாடு, கல்வி ஆற்றல் போன்றவையின் பின்னடைவே. இது நாளை வாழப்போகும் தலைமுறைக்கு எதிரே உள்ள பலத்தை அச்சுறுத்தலாகும்.

தொன்று தொட்டு நமது மக்களிடையே வேரூன்றி வளர்ந்து நிலைத்த நற்பண்புள்ள தார்மீக சிந்தனைகள் அறிவுத்திறன், உண் மை நேர்மை, பழக்கவழக்கம் போன்ற விழு மியச் சிறப்புகளயாவும் யுத்தத்தின் கோரத்தால் மறக்கப்படுகிறதை எங்கிலும் அவதானிக்க முடிகிறது.

கடும் போரிலும் தர்மத்தை நீதியை கடைப் பிடித்து ஒழுகியவன் தமிழன் இன்று கூட நமது விடுதலையைப் போரில் தலைவர் அவர்களின் பணிப்பிலே எதிரியின் உயிரற்ற உடலும் தக்க மரியாதைகளுடன் நடாத்தப்படுகிறது.

ஆனால் எதிரியிடம் நாம் காண்பது வேறு காட்டுமிராண்டிப்போக்கில் அவன் அப்பாவி களைச் சாகவிடுவதும் சொல்லொணாச் சித்திரவதைகளுக்கு ஆளாக்குவதும் நாளாந்த சம்பவங்களாகும்.

இத்தகைய துயரங்களாவன இளைய சந்ததி யினரின் மனதில் பாரிய தாக்கத்தையே உரு வாக்குகின்றது. மனிதநேயம், பாசம், இரக்கம், நேர்மை போன்றவை விலகிவருகிறது. இவை மறைந்து கொண்டிருக்கும் பழைய சந்ததியோடு மறைந்துவிடும்போல் தோன்றி வில்லையா? இது எத்தகைய மாபெரும் மனித வீழ்ச்சி என்பது சிந்திக்கத் தக்கது.

இவை அற்றுப்போன நாளைய மனிதன் உண்மையில் மனிதனாக நடமாட முடியுமா? மனிதத்தை இழந்த மனிதன் வெறும் ஜட மாகத்றோபோக்களாக அல்லது விலங் குகளாகவே நடமாடமுடியும்.

இந்த உயிர்ப்பு உள்ள மனநிலையை மீண் டும் நழுவ முடியாது பேணவேண்டியது சகல அறிவுத் துறையைச் சார்ந்தோரின் பெரும் கடனாகும், கல்லூரி ஆசிரியர் முதற்கொண்டு கலைத்துறைப் பணியாளர்கள் யாவரும் இதனைச் சிந்தித்து கடமை புரியவேண்டும்.

எதிரியால் அழிந்து கொண்டிருக்கும் ஒரு சமூக கட்டமைப்பை நாம் விடுதலை பெறும் வரை கட்டிக்காக்க வேண்டியது நமது இலக்கியப் படைப்பாளிகளது கடமையாகும். எமது படைப் புகளை வீரர்களை மட்டுமல்ல விவேகிகளை யும் உருவாக்கித்தரல் வேண்டும். நமது இலக்கிய சர்ச்சைகளில் இப்புதிய பிரச்சினை சர்ச்சைக்குள்ளாக வேண்டும்.

எதிர்கால மனிதனை ஒரு தமிழனை தடம் புரளாத பண்பாடுடைய மனிதனாக புடம் போட் டெடுக்கப்படல் வேண்டும்.

இதனை நமது தமிழீழத்தலைமை கரிசனை யோடு செய்துவரவே செய்கிறது.

கதைகளில் நாடகங்களில் நல்ல பாத்திரங் களை தோற்றுவித்தல் விடுதலை உணர்வு, வீரதீரம் போன்றவையோடு தர்மம், நீதிபோன் றவையும் நிலைநிறுத்தப்பட்டு, அவையால் மனித உள்ளங்களை ஆகர்சிக்க ஆவண செய்வோமாக. நாளைய விடியலுக்குப் பின் னர் சமத்துவ சகோதரத்துவ வாழ்நிலை உருவாகவேண்டும். உருவாகும் என்பதும் உறுதி. இதுவே நாளைய மனிதனுக்கு நமது இலக்கியப் பணியாகும்.

நன்றி: அகிலநாயகன் -எரிமலை ஒக்டோபர் 1999

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த
இனப்படுகொலைகளின் நினைவு
நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு
அடைந்த உங்கள் உறவுகளின்
நினைவு நாள் அறிவித்தல்களையும்
மற்றும் எழுத்தார்வம் மிக்க
வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள்
வரவேற்கப்படுகின்றன.

தங்களது ஆக்கம் தமிழ் தேசியம்,
சமூகம், இலக்கியம் சார்ந்ததாக
இருத்தல் நன்று.
எமது மின்னஞ்சல் முகவரிக்கு
தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு
வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com



சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
Email: aarthanan@hotmail.com
aarthananyathu@hotmail.com

AIR CONDITONER INSTALLATION SALE
High -Efficiency Air Conditoner Starting From $1,899
HIGH EFFICIENCY HEATING & COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
A/C Leak Check & Refilling the Gas
Repair, Service & Installation
Ductless Air Conditions
Is Your Home Keeping You COOL?




Carrier, Lennox, Comfortstar
Trane, Ameristar, Goodman
FREE 10 Years
Parts Warranty
Furnance, Air Conditioner,Hot Water Tank, Tankless Water Heater, HRV
Fireplace, Attic Insulation, Duct Work, Gas Line For BBQ, Stove, Dryer
Call Now for FREE ESTIMATE S.Kumar 416-993-8001




# இலங்கைத்தீவின் இனப்பிரச்சினையில் தமிழர்களின் தற்போதையை நிலைப்பாடு சரியானதா?

1948 ஆம் ஆண்டு மாசி 4 ஆம் திகதியில் இருந்து இன்று வரையான எழுபத்தி மூன்று ஆண்டுகால இலங்கைத்தீவின் சரித்திரத்தில் தீவின் வடக்கு, கிழக்கு, வடமேற்கு பகுதிகளைத் தமது பாரம்பரிய தாயகப் பூமியாக் கொண்ட தமிழர்கள் தெற்கு, மேற்குப் பகுதிகளைத் தாயகப் பூமியாகக் கொண்டு பெரும்பான்மை இனமாக வாழும் சிங்கள இனத்தால், பலவிதமான இன்னல்களுக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார்கள். அந்தப்பெரும்பான்மை இனத்தால் உருவாக்கப்படும் "சிங்கள அரசுகளோ" முழுத்தீவையும் ஆட்சி செய்வதுடன் காலத்துக்குக் காலம் புதுப் புதுச் சட்டங்களை இயற்றியும், புதிய அரசியல் அமைப்புச் சட்டங்களை உருவாக்கியும், திட்டமிட்ட தமிழின அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, தமிழர் தாயகத்தில் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தியும் தமிழினத்தை இத்தீவில் இருந்து முற்றாக அழிக்க கங்கணம் கட்டிச் செயற்பட்டு வருகிறார்கள்.

இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு, பழைய பாராளுமன்ற தமிழ் அரசியல்வாதிகள் சாத்வீக வழிமுறைப் போராட்டங்களை முப்பது வருடங்களாக நடாத்தினார்கள். ஆனால் எம்மினத்துக்குக் கிடைத்ததோ இவைகள் தான், "எமதுரிமைகள் பறிக்கப்பட்டன. பல்லாயிரக் கணக்கான தமிழர்களின் உயிர்கள் அழிக்கப்பட்டன. தமிழ்ப் பெண்கள் சிங்களக் காடையர்களால் கற்பழிக்கப்பட்டனர். எமது சொந்தத் தாயகம் சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு, சொந்த மண்ணில் சிறைக் கைதிகளாக, அடிமைகளாக வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டோம்." இவைகள் எம்மினத்துக்கு ஒரு விடயத்தை வெளிச்சம் போட்டக்காட்டின. அவ்விடயம், "எம்மினத்தின் எதிரி நாகரிகமற்றவன்; மிருகத்தனமானவன்; மனிதாபிமான மற்றவன்; இனவாதப் பித்துப் பிடித்து தமிழனின் இரத்தம் குடிக்கும் வெறிகொண்ட மிருகமாகிய ஒரு எதிரியிடம் நாம் நீதிகேட்க முடியாது. நியாயம் கேட்க முடியாது" என்பதனைத்தான்.




கோல்புறூக்கினால் வரையப்பட்ட இலங்கைப்படம் (1831 - 1832)

சாத்வீக நடவடிக்கைகளுக்கு ஏற்பட்ட தோல்வியினால் மனமுடைந்த அதே பாராளுமன்ற அரசியல்வாதிகள், "தமிழர் விடுதலைக் கூட்டணி" என்ற பெயரில் தமது முதலாவது மாகநாட்டை வட்டுக்கோட்டையில் நடாத்தி, 14.05.1976 இல் "வட்டுக்கோட்டைத் தீர்மானம்" என்றதனை தமிழர்களின் ஆட்சி உரிமையின் அடிப்படையில் நிறைவேற்றினார்கள். அத்தீர்மானத்தில் சாத்வீகப் போராட்டங்கள் நடந்தபோது எமது இனம் எவ்வாறு சிங்கள இனத்தால் புறக்கணிக்கப்பட்டு வந்தது என்பதனையும், தமிழனத்தின் "எதிர்கால நிரந்தரத் தீர்வு" எப்படி அமைய வேண்டும் என்பதனையும் பின்வருமாறு கூறுகிறார்கள்:-

"வரலாற்றுக் முற்பட்ட காலம் முதல் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக வளவை அற்றிலிருந்து சிலாபம் வரைக்கும் தெற்கு - மேற்குப் பகுதிகளிலும், நடுப்பகுதிகளிலும் சிங்கள மக்களும், வடக்கு – கிழக்கு – வடமேற்கு நிலப்பகுதிகளில் தமிழ் மக்களும் வாழ்ந்த இத்தீவின் ஆளுமையைச் சிங்கள நாட்டினமும், தமிழ் நாட்டினமும் தமக்குள் பகிர்ந்து வந்தபடியாலும், சிங்கள அரசுகளோடு தொடர்பற்ற வகையில் 1619 ஆம் ஆண்டு ஆனி ஐந்தாம் நாள் போர்த்துக்கேயரால் தமிழரசு போர்களத்தில் தோற்கடிக்கப்பட்டு, கைப்பற்றப்பட்டு அவர்களிடம் இருந்து ஒல்லாந்தராலும், பின் ஆங்கிலேயராலும் அதேவிதமான வெற்றிகொள்ளப்பட்ட படியாலும் சிங்களவர்களின் நிலப்பகுதிகளையும் ஆரம்பத்தில் வேறு வேறாக ஆட்சி செய்து வந்த ஆங்கில ஏகாதிபத்தியவாதிகள் 1833 ஆம் ஆண்டு "கோல்புறூக் ஆணைக்குழுவின்" வேண்டுகோளுக்கு அமையத் தம்முடைய ஆட்சிவசதி கருதி வலுக்கட்டாயமாக இந்த இரு நாடுகளின் நிலப்பகுதிகளை ஒன்றாக இணைத்தபடியாலும், ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சியில் இருந்து இலங்கையை விடுவிப்பதற்கான விடுதலைக் கிளர்ச்சியில் தமிழ்த் தலைவர்கள் முன்னோடிகளாக உழைத்து இறுதியில் 1948 ஆம் ஆண்டு இலங்கைத் தீவு சுதந்திரமடைந்தபடியாலும், மேற்கூறப்பட்ட வரலாற்று உண்மைகள் முற்றாகப் புறக்கணிக்கப் பட்டு எண்ணிக்கையில் பெரும்பான்மையினர் என்ற அடிப்படையில் முழுத்தீவின் மீதுமான அரசியல் அதிகாரம் சிங்கள நாட்டினத்தின் கைக்கு மாற்றப்பட்டு அதனால் தமிழ் நாட்டினம் அடிமை இனமாக தாழ்த்தப்பட்டபடியாலும், சுதந்திரம் பெற்ற நாள் (04.02.1948) முதல் ஆட்சிக்கு வந்த சிங்கள மக்களிடம் தீவிர இனவாதத்தைத் தூண்டி வளர்த்துத் தமது அரசியல் அதிகாரத்தைத் தமிழினத்துக்குப் பாதகமாக: -

1. தமிழ் மக்களில் அரைப் பங்கினரின் குடியுரிமை, வாக்குரிமைகளைப் பறித்து அதனால் பாராளுமன்றத்தில் தமிழரின் பிரதிநிதித்துவத்தைக் குறைத்தாலும்,

2. திட்டமிட்டு அரசாங்க உதவியுடன் நடாத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்களாலும், இரகசியமாக ஊக்கிவிடப்பட்ட சிங்களக்கள்ளக் குடியேற்றங்களைச் சட்டபூர்வமாக அங்கீகரித்தாலும், பண்டைய அரசின் நிலப்பகுதிகளில் சிங்கள மக்களை நுழைத்துத் தமிழரைத் தம் சொந்தத் தாயகத்திலேயே சிறுபான்மையினர் ஆக்கியபடியாலும்,

3. இலங்கை முழுவதும் "சிங்களம் மட்டுமே" ஆட்சி மொழியாக்கப்பட்டு தமிழர் மீதும், தமிழ் மொழி மீதும் தாழ்வு (குறைவான) முத்திரையைப் பொறித்தபடியாலும்,

4. குடியரசு அரசியல் யாப்பில்" பௌத்த மதத்திற்கு முதன்மையான இடத்தை அளித்து இந்நாட்டில் இந்து – கிறிஸ்த்தவ - இஸ்லாமிய தங்களை இரண்டாம் தரத்திற்குத் தாழ்த்தியமையினாலும்,

5. கல்வி, தொழில், வேலைவாய்ப்பு, நிலப்பங்கீடு, பொருளாதார வாழ்வு ஆகிய அனைத்துத்துறைகளிலும் தமிழ் மக்களுக்கு சமவாய்ப்பை மறுத்தும் பெருமளவிலான கைத்தொழில்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களில் தமிழ் நிலங்களைப் புறக்கணித்தும் இலங்கையில் தமிழ்மக்களின் வாழ்க்கையே ஊசலாடும் நிலையை ஏற்படுத்தியதாலும்,

6. 1956 ஆம் ஆண்டு கொழும்பிலும் அம்பாறை ஆகிய இடங்களிலும் நடந்த இனஅழிப்புப்போன்று, 1958 ஆம் ஆண்டு தீவு முழுவதும் தமிழின அழிப்பு திட்டமிட்டு மிகப் பெருமளிவில் நடாத்தப்பட்டபடியாலும், 1961 ஆம் ஆண்டு "சத்தியாக்கிரகப்போராட்டத்தில்" வடக்கு – கிழக்குப் பகுதிகளில் ஈடுபட்டிருந்த தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இராணுவ அட்டூழியங்களினாலும், 1974 தை மாதம் 10 ஆம் நாள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற "நான்காவது உலகத்தமிழாராய்ச்சி மகாநாட்டில்" கலந்துகொண்ட மக்கள் மீது சிங்களப் பொலிஸ் கட்டத்தில் 9 தமிழ் மக்களின் உயிர் குடிக்கக் காரணமான தாக்குதல் போன்று, 1976 ஆம் ஆண்டில் புத்தளத்திலும் இலங்கையின் வேறு பல பாகங்களிலும் சிங்கள காவல் படையும், சிங்கள இனவெறியர்களும் தமிழ் பேசும் முஸ்லீம் மக்கள் மீது தாக்குதலை மேற்கொண்டமையினாலும், தமிழனத்தின் மீது கட்டவிழ்த்து விடப்படும் இவ்வாறான அநீதிகளை எதிர்த்து நிற்கும் மனவுறுதியை ஏற்படுத்துவதற்கும்,

7. பல்வேறு தமிழ்ப் பாராளுமன்ற அரசியல் கட்சிகள் தமிழினத்தின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு சிங்கள அரசாங்கங்களோடு ஒத்துழைத்தும், பாராளுமன்றத்துக்கு உள்ளும் வெளியும் சாத்வீக போராட்டங்களைச் செய்தும் தமிழினம் தன்மானத்தோடு வாழக்கூடிய ஆகக்குறைந்த அரசியல் உரிமை

# இலங்கைத்தீவின்

களையாவது நிலைநாட்டுவதற்கு அடுத்தடுத்து வந்த சிங்களப் பிரதமர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் கிழித்து எறியப்பட்டபடியாலும்,

8. இலங்கைத் தீவின் ஒற்றையாட்சியில் பெரும்பான்மைச் சிங்கள இனம், சிறுபான்மைத் தமிழினத்தை நசுக்காதவாறு பாதுகாக்கும் பொருட்டு "சோல்பரி அரசியல் யாப்பில்" ஏற்றுக்கொள்ளப்பட்ட 29வது விதியின் சிறுபாதுகாப்பும் "குடியரசு அரசியல்யாப்பின்" கீழ் நீக்கப்பட்டபடியாலும்,

9. ஐக்கிய இலங்கைக் கூட்டாட்சிக் குடியரசின் ஓர் அங்கமாக, ஒரு தன்னாட்சித் "தமிழ் அரசை" நிறுவுதன் மூலம் தமிழ் மக்களின் தனித்துவத்தைக் காக்கும் அதேவேளையில், தீவின் ஒருமைப்பாட்டைப் பேணும் பொருட்டு "அரசியலமைப்புயாக்க அவைக்கு" முன்வைத்த திட்டங்கள் அவற்றின் தகுதி ஆராயப்படாமலேயே முழுதாக சிங்கள அரசால் நிராகரிக்கப்பட்டபடியாலும்,

10. 1972 ஆம் ஆண்டு வைகாசி 22ம் திகதி சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்களை மட்டும் கொண்டு அங்கீகாரம் பெற்ற "புதிய குடியரசு அரசியலமைப்பை" நிராகரித்த தமிழர் விடுதலைக்கூட்டணி 25-06-1972 அன்று சிங்களப் பிரதமருக்கும், அரசாங்கத்திற்கும் 6 அம்சக் கோரிக்கையைச் சமர்ப்பித்து அவற்றின் அடிப்படையில் அரசியல் அமைப்பைத் திருத்தி தமிழினத்தின் அபிலாசைகளை நிறைவு செய்ய ஏற்ற நடவடிக்கை எடுப்பதற்கு மூன்று மாத அவகாசம் அளித்தும், சிங்கள அரசு எவ்வித நடவடிக்கையினையும் எடுக்கத் தவறினால், "சுயநிர்ணய உரிமையின்" அடிப்படையில் தமிழ்த் தேசிய இனத்தின் சுதந்திரத்தினையும் உரிமைகளையும் வென்றெடுக்க அரசுக்கு எதிராக அறவழி நேரடி போராட்ட நடவடிக்கையில் இறங்கும் என சிங்கள அரசாங்கத்திற்கு அறிவித்தபடியாலும்,

11. 06.02.1975 அன்று நடைபெற்ற இடைத் தேர்தலில் காங்கேசன்துறை வாக்காளர், அதிகப் பெரும்பான்மை வாக்குகளால் "சிங்கள அரசாங்கத்தினால் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட குடியரசு அரசியில் அமைப்பை" நிராகரித்து சுதந்திர இறைமையுள்ள மதச் சார்பற்ற, "சோசலிச தமிழீழ அரசை" மீள்வித்துப் புனரமைப்புச் செய்யக்கட்டளையிட்டபடியாலும், 14.05.1976 திகதியாகிய இன்று " இத்தீவில் உள்ள தமிழீழத் தேசத்தின் குடிமக்களாகிய தமிழரின் நிலையான வாழ்வைப் காதுகாப்பதற்கு ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் உரித்தான சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திர சோசலிச தமிழீழ அரசை மீள்வித்துப் புனரமைப்புச் செய்வது தவிர்க்க முடியாததாகிவிட்டது என்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

மேலும், "தமிழீழ விடுதலைக்கான புதினதப் போரில் தம்மை முற்றுமுழுதாக அர்ப்பணிக்க முன்வருமாறும், இறைமையுள்ள சோசலிச தமிழீழ அரசு என்ற இலட்சியத்தை அடையும் வரை தயங்காது போராடுமாறு தமிழ்த் தேசிய இனத்துக்குப் பொதுவாகவும், தமிழ் இளம் சமூகத்துக்குச் சிறப்பாகவும் இம்மகாநாடு அறைகூவல் விடுக்கின்றது" என்றவாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டைத் தீர்மானம் முடிகிறது.

இத்தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்ட 22.07.1977 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில், "தமிழீழத் தேசத்தின் விடுதலைதான் எமது முடிந்த முடிவு- இதுதான் எமது இறுதித் தேர்தல் - தமிழ் மக்களே! உங்களது பொன்னான வாக்குகளை எமக்கு அளியுங்கள். இளைஞர்களே, யுவதிகளே வாக்களிக்கக்கூடிய அனைத்து மக்களையும் (வயதானவர்கள், நடக்கமுடியாதவர்கள் உட்பட) தேர்தல் வாக்குச் சாவடிக்குக் கொண்டுவந்து வாக்களிக்க வையுங்கள்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வேண்டுகோள் விடுத்தனர். இவர்களின் வாய் வீரத்தை நம்பிய மக்கள் அலையலையாகச் சென்று தமிழீழ இலட்சியத்துக்காக வாக்களித்தார்கள். இளைஞர்களும், யுவதிகளும் வீடுவீடாகச் சென்று மக்களை வாக்குச் சாவடிக்குக் கொண்டு வந்தார்கள். மக்களின் பேராதரவின் மூலம் பெரும் வெற்றி பெற்ற கூட்டணியினர் பாராளுமன்றம் சென்றனர். சென்றவர்களை வரவேற்பதுபோல் சிங்கள ஜே.ஆர். அரசு, 16.08.1977 இல் தமிழினப் படுகொலை ஒன்றை நடாத்தி முடித்தது. சென்றவர்கள் சென்றவர்கள் தான். கூட்டணியினர் என்னத்தைச் சொல்லி தமிழீழ மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்றோம் என்பதனை மறந்து பாராளுமன்றக் கதிரைகளைக் கட்டிப் பிடித்தபடி சிங்கள அரசினருக்கு துதிபாடிக் கொண்டிருந்தனர். சிங்கள அரசினர் காட்டிய மாயமான்களாகிய பிரதேச சபை, மாவட்டசபை, மாகாணசபை ஆகியவற்றின் பின்னால் சென்று பொதுவாகத் தமிழீழ மக்களுக்கும், குறிப்பாகத் தமிழ் இளம் சந்ததியினருக்கும் துரோகம் செய்யத் தொடங்கினர். இத்துரோகம் இன்றும் தொடர்கிறது.

ஆனால் மேற் குறிப்பிட்ட வட்டக்கோட்டைத் தீர்மானத்திற்கு சில வருடங்களின் முன்பாகவே தமிழ் இளம் சமூகத்திடையே, தமிழீழ விடுதலைக்கான புரட்சிகர ஆயுதப் போராட்டத்திற்கு வித்திடப்பட்டுவிட்டது.

சிங்கள இனத்தால், தமிழ் மக்களின் மீது திட்டமிட்ட முறையில் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளும், இன அழிப்பும் இளைய சந்ததியினருக்கு உயர் கல்வி வாய்ப்புக்களும் வேலை வாய்ப்புக்களும் மறுக்கப்பட்ட நிலையில் ஏற்பட்ட விரக்தியும், தொடர்ச்சியாகச் சாத்வீகப் போராட்டங்கள் அலட்சியப்படுத்தப்பட்டு ஆயுத முனையில் முறியடிக்கப்பட்டு வந்த நிலையில் கூட, பாராளுமன்றத் தமிழ் அரசியல்வாதிகள் எந்தவொரு ஆக்கபூர்வமான மாற்று நடவடிக்கைகளும் மேற்கொள்ளாது, காலம் கடத்தி வந்தாலும் தமிழ் இளம் சமூகத்திடையே தீவரமான போராட்ட உணர்வு உருவாகியது. அவ்வுணர்பு, "புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் மூலமே தமிழினம் விடுதலை பெறமுடியும், விடுதலை பெற்ற தமிழீழத்திலேயே தமிழினம் சுதந்திரமாக — கௌரவமாக- பாதுகாப்பாக வாழமுடியும் என்பதுதான்.

1970 களின் ஆரம்பத்தில் எதேச்சையாகக் கட்டப்பாடற்ற முறையில் பிரவாகம் எடுத்த அரசயில் வன்முறை எழுச்சிகள், புரட்சிகர அரசியல் கோட்பாட்டையும் புரட்சிகர ஆயதப் போராட்ட நடவடிக்கைகளையும் கொண்ட அமைப்பையும் புரட்சிகரத் தலைமையையும் நாடி நின்றன. இந்தப் புரட்சிகர அரசியல் சூழ்நிலையில்தான், அதாவது 1972 இல் விடுதலைப் புலிகள் இயக்கம் தனது வரலாற்று ரீதியான பிறப்பை எடுத்தது. இந்தப் புரட்சிகர இயக்கம் தமிழீழத்தின் தேசியத் தலைவரும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பிரதம இராணுவத் தளபதியுமான மேதகு. வே. பிரபாகரன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அதன் ஆரம்ப காலத்தில், "புதிய தமிழ்ப் புலிகள்" என்ற பெயரில் அழைக்கப்பட்டு




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



Suren Sornalingam
Certified Insolvency Counsellor

DSC DEBT SOLUTION CANADA
55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 647-797-1991
www.debtsolutioncanada.ca

# இலங்கைத்தீவின்

பின்பு முழுத் தமிழீழ மக்களையும் பரந்துபட்ட ஆயுதப் போராட்டத்தின் ஒன்றிணைக்கும் நோக்குடன் சட்ட, திட்டங்கள் நோக்குடன் சட்ட, திட்டங்கள் மாற்றப்பட்டு 05.05.1976 இல், "தமிழீழ விடுதலைப்புலிகள்" என்ற பெயரைச் சூட்டிக் கொண்டது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆரம்பகால நடவடிக்கைகள் கெரில்லாப் போர் முறையிலேயே ஆரம்பமாகின. காரணம், கெரில்லாப்போர் முறையானது ஒரு வெகுசனப் போராட்ட வடிவம். கெரில்லாப் போராட்டத்தை மக்கள் மத்தியில் படிப்படியாக நிலைப்படுத்தி மக்களின் பங்களிப்போடு விரிவுபடுத்தி, வெகுசன யுத்தமாக பரிணாமம் பெறச் செய்யும் கொள்கைத் திட்டத்தின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது.

அரசியல் ரீதியான செயற்பாட்டில் இவர்களின் நிலைப்பாடு "ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளுக்குப் புறம்பான இருகட்டமாக அல்லது அவற்றுக்கு முன்னோடியாக அரசியல் பிரச்சாரத்தை மேற்கொள்வது என்பது, எதிரியை விழிப்படையச் செய்வதுடன் பிரச்சாரத்தில் ஈடுபடும் போராளிகளை அழிவுப் பாதையில் இட்டுச் சென்று இராணுவ நடவடிக்கைகளுக்குச் சாதகமான பகுதிகளை அம்பலப்படுத்துவதாக முடியும். அத்துடன் தமிழீழச் சூழ்நிலையில் வலிமை வாய்ந்த அரசியல் பிரச்சாரா வடிவம் என்றால் அது வெற்றிகரமான ஒரு இராணுவ நடவடிக்கைதான்" என்பதாகும்.

மேற்குறிப்பிட்டவாறாக இராணுவ, அரசியல் செயற்பாடுகளை நடாத்திச் சென்ற தமிழீழ விடுதலைப்புலிகள் இன்று தமிழீழ மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக பல பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகளையும், பல இலட்சம் தமிழ் மக்களையும் போர்க்களத்தில் பலி கொடுத்த நிலையிலும் மக்கள் பலமும், மனப்பலுமும், இராணுவப் பலமும், கொண்டு சிங்கள இனவெறியர்களுடன் போராடி வருகிறார்கள்.

இதனால் சினம்கொண்ட சிங்கள இனவாதம், தமிழினத்தின் மீது பொருளாதாரத்தடை, போக்குவரத்துத்தடை, மருந்துப்பொருள்களுக்கான தடை, விமானக்குண்டு வீச்சு, செல்லடி, பீரங்கித் தாக்குதல் என்றவாறாக தமிழினத்தின் உயிர் மூச்சில் கால்பதிக்க முனைகின்றது. தமிழ் மக்களிடையே விரக்தி நிலையைத் தோற்று வித்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை அழிக்க முயல்கிறது. இதற்கு தமிழ்க் கூலிகளையும் பயன்படுத்துகிறது. தமிழ் மக்கள் இன்றுபடும் துன்ப துயரங்களுக்கு காரணம் "அவர்களால் நடாத்தப்படும் தமிழீழ விடுதலைப் போராட்டம் தான்" என்று கூறி சிங்கள இன வெறியர், தாம் தமிழர்களுக்கு கடந்த 73 ஆண்டு காலத்தில் புரிந்த கொடுமைகளை மறைக்கப் பார்ககிறார்கள். இந்த இடத்தில்தான், தமிழினம் மிக மிக வழிப்பாக இருக்க வேண்டும். மிக மிக உறுதியாகவும் இருக்க வேண்டும்.

சிங்கள இனம் ஒட்டுமொத்தமாகச் சேர்ந்து எம்மினத்தின் மீதும், எம் தாய்ப்பூமி மீதும் ஏவி விட்டுள்ள பயங்கரவாதச் செயல்களுக்குப் பயந்து, அவர்களிடம் சலுகைகளுக்காகச் கையேந்தினால் நாம் அடிமைகளாகத்தான் வாழவேண்டும். காலப் போக்கில் தமிழினமே. சிங்கள இனவாதப் பூதத்தால் முழுமையாக விழுங்கப்பட்டுவிடும்.

சிலர் கூறுகிறார்கள்; "இந்தியா எமது




பிரித்தானியரால் கண்டி இராச்சியம் கைப்பற்றப் படுவதற்கு முன்னிருந்த இராச்சியங்கள் (1796 - 1816)

அயல்நாடு, பெரிய நாடு. தென்னாசியாவில் பலம் பொருந்திய நாடு. தமிழர்கள் மீது இந்தியாவுக்கு நல்லுறவு இல்லை. அதனால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தற்போதைய நிலைப்பாடு சரியானது அல்ல" என்கிறார்கள். இது பிழையான தொரு விளக்கம். 29.07.1987 இல் இந்திய – சிறீலங்கா ஒப்பந்தத்தை தமிழீழ மக்களின் ஒப்புதல் இன்றிச்






TAX ANALYST
ACCOUNTING | BOOKKEEPING | & MORE

- Affordable and Reliable Services
- Experienced Accountants
- Presonal & Corporate Tax
- Tax Planning / Audit Appeal
- HST/GST/WSIB
- Bookkeeping & Payroll
- UBER/LYFT Tax Filling

CRB/CERB HELP

OFFICE
416-898-8879

CALL FOR APPOINTMENT
416-838-2826

105Consumers Drive.
Whitby ON L1N 1C4

115 Mathesan Blvd W.
Mississauga ON L5R 1C6

www.taxanalyst.ca
kannan@taxanalyst.ca

Allstate.
You're in good hands.

உங்களுக்கு சேமிக்க உதவும்
தள்ளுபடிகள் பற்றி என்னிடம் கேளுங்கள்

பயணக் காப்புறுதி
கனடாவுக்கு வருபவர்களுக்கான காப்புறுதி

செல்லப் பிராணிக் காப்புறுதி

ஆயுள் காப்புறுதி
முதலீடுகள் மற்றும் நிதித் திட்டமிடல்

தனிப்பட்ட சேவைக்கும் ஆலோசனைக்கும்
என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்



Raji Linghan
Ajax Agency
15 Westney Road, N
(416) 817 5060
rlinghan@allstate.ca

Trademark owned by Allstate Insurance Company used under licence by Allstate Insurance Company of Canada. ©2020 Allstate Insurance Company of Canada. 011E | 201316

இப்போது வந்துவிட்டது!

தற்போதைய வைரஸ் தொற்று காலத்தில்

உங்கள் உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து அனைத்து நோய்களிலும் இருந்து உங்களைப் பாதுகாக்க வெளிவந்துவிட்டது

"3 Spoon 100 ஆயுள்"

உள் அடங்கும் பொருட்கள்: உள்ளி, இஞ்சி, தேசிக்காய், வினிகர், தேன், கருஞ்சீரகம்
இவை அனைத்தும் ஆயுள்வேத ஆகம முறைப்படி தயாரிக்கப்பட்டது. இதன் மருத்துவ குணங்கள் சொல்லில் அடங்காது.
அதிகாலை 3 கரண்டி அருந்தி அனைத்து நோய்களில் இருந்து விடுதலை பெறுங்கள். சிறுவர் முதல் பெரியோர் வரை அருந்தலாம்.
சுவையானது, கனேடிய அங்கீகாரம் பெற்றது. இப்போது அனைத்து தமிழ் குரோசரி (Grocery) கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: Raj - 416.388.5054

நீங்கள் எதிர் பார்த்திருந்த பானம்!

Benefits:

1. இரத்தக்குளாய் அடைப்பை நீக்குகிறது
2. இரத்த ஓட்டத்தைச் சீராக்குகிறது
3. நீரிழிவு நோயாளர்களுக்கு மிகவும் உகந்தது
4. உடலில் உள்ள தேவையற்ற கழிவை அகற்றி குடலை சுத்தமாக்குகிறது
5. உடல் பருமனை குறைக்கிறது, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்
6. மலச்சிக்கலை அறவே நீக்குகிறது. வயிற்றுப் புண்ணைக் குணப்படுத்தும்
7. தூக்கமின்மையை இல்லாமல் ஆக்குகிறது.
8. உடலில் உள்ள அதிகப்படியான கொழுப்பினைக் குறைக்கிறது
9. உடல் சோர்வை நீக்குகிறது

பருகும் முறை:
நன்றாகக் கலக்கி ஒவ்வொரு நாளும் அதிகாலையில் மூன்று கரண்டி அருந்தவும்.
பொருட்கள்: உள்ளி, இஞ்சி, தேசிக்காய், வினிகர், தேன், கருஞ்சீரகம்
Note: நீங்கள் இரத்தக்குழாய் அடைப்பிற்காக மருத்துவரால் சத்திர சிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்பட்டால், 6 மாத காலத்தில் இரத்தக் குழாய் அடைப்பை அறவே நீக்குகிறது.

3 ஸ்பூண் 100 ஆயுள்
3 Spoon 100 Life

(சுவையானது)
ஒவ்வொருவரும் அருந்த வேண்டிய பானம்

ஆயுள் வேத ஆகம முறைப்படி தயாரிக்கப்பட்டது.

மருந்து உணவல்ல, உணவே மருந்து.

Heart Attack இல் இருந்து பாதுகாக்கிறது.

NOW $ 20
~~$ 35~~



1. Removing the blood vesse blockae.
2. regulates bood flow
3. Good for diabetes people
4. Remove your body's unnecessary wast
5. Reduces obesity and increases resistance
6. Eliminate constipation, cures ulcer
7. Reject lack of sleep
8. Excess fat in the body dissolve
9. Elima=inate body fatigue

Ingredients: Garlic, Lemon, Vinegar, Ginger, Honey and Black Jeera

Buying Locations: For Distribution Call 416-388-5054 / Montreal No: 514-589-7617
Soon all Grocer Stores: Scarborough -Markham - Mississauga - Brampton - Ajax

Now Available Stores: New Spiceland, Pasumai Santhi, Suncity Supermarket, Poorani Villas, Vasantham Super Market

# இலங்கைத்தீவின்







செய்த இந்தியா தனது படைகளை தமிழீழப் பகுதிகளுக்கு அனுப்பியபோது, அவர்கள் தம் இருண்ட வாழ்வில் ஒளியேற்றப் போகிறார்கள் என நம்பிய தமிழ் மக்களைத் தமது முதுகுக்குப் பின்னால் கொண்டு வந்த தீப்பந்தங்களால் உயிருடன் கொளுத்தி தமிழீழத்தையே சுடகாடாக்கிய பின்னரே இந்திய இராணுவம் திரும்பிச்சென்றது. சமாதான முயற்சி ஒன்றுடன் தமிழீழம் திரும்பிய "கேணல் கிட்டுவை" நடுக்கடலில் சாகடித்து, தமிழீழ மக்களின் வாழ்வில் வெளிச்சமே ஏற்படக்கூடாது என்று கங்கணம் கட்டி நிற்கும் இந்திய அரசிடம், தமிழ் மக்கள் தம் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்படி கையேந்தி நிற்கமாட்டார்கள். ஆனால், தமிழீழ மக்கள் இந்திய மக்களுக்க எதிரானவர்கள் அல்ல. இந்திய மக்களுக்கு இருக்கும் அதே சுயநிர்ணய உரிமைகள் தமக்கும் உண்டு என்பதனையே வலியுறுத்துகிறார்கள். தாம் இந்திய மத்திய அரசுக்கு எதிரானவர்கள் அல்ல, இந்திய மத்திய அரசு தன் சுய இலாபங்களுக்காக தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அழித்து. தமிழ் மக்களை சிங்கள இனத்திடம் நிரந்தர அடிமைகளாக்கும் நீதியற்ற சுத்த சுயநலப் போக்கினை நிராகரிப்பதிலேயே இந்தியாவுடன் முரண்படுகிறார்கள். இதில் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டியது இநதியாவே. தமிழீழ மக்கள் தம் இன்றைய சரியான நிலைப்பாட்டில் உறுதியாகவே நிற்கவேண்டும்.

1993 காலப்பகுதயில் இலண்டன் பி.பி.சி.க்கு பேட்டியளித்த தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள், "வடக்கு – கிழக்கு இணைந்த தமிழர் பூரண சுயாட்சி அதிகாரம் உள்ள சமஸ்டி அமைப்பு" சமாதானத்தீர்வு முயற்சியாக சிங்கள அரசால் முன்வைக்கப்பட்டால், அதனைத் தாம் பரிசீலிக்கத்தயார் என்று கூறினார்.

இதுபற்றி சிங்கள அரசோ, சிங்கள மக்களோ சிறு துளியும் சிந்திக்கவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளை நம்ப முடியாது என்பவர்கள் ஏன்? சர்வதேச சமாதான முன்னெடுப்பாளர்களின் மத்தியஸ்த்தத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த முயற்சிக்கவில்லை. காரணம், அவர்களுக்கு (சிங்களவர்களுக்கு) த்தான் சமாதானத்தில் விருப்பமில்லை. அவர்களின் விருப்பமெல்லாம் தமிழினத்தையே அழிக்க வேண்டும் என்பதுதான்.

1993 காலப்பகுதியில் மனித உரிமைகள் அணைக்குழுவின் மகாநாட்டில் உரையாற்றிய சிறீலங்கா சிங்களப் பிரதிநிதி பின்வரமாறு கூறினார்; அதாவது "தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்தால், சிங்களப் பகுதிகளில் வாழும் தமிழர்களின் உயிர்களுக்கு சிங்களவரால் உயிராபத்து ஏற்படும்" என்று பகிரங்கமாக மிரட்டியுள்ளார்.

தற்போதைய புதிய சிங்கள ஜனாதிபதி ஒரு பத்திரிகைப் பேட்டியில் கூறுகிறார்: இங்கிருப்பது இனப்பிரச்சினையல்ல, பயங்கரவாதப் பிரச்சினையே" என்று.

இந்நிலையில் தெளிவாகத் தெரியும் ஒரு விடயம் என்னவெனில், "இன்றுள்ள தமிழரினன் நிலைப்பாடு சரியானது. இந்த நிலைப்பாட்டில் இருந்து இம்மியளவு விலகினாலும் சிங்கள இனவாதம், தமிழினத்தைச் சுலபமாக விழுங்கி விடும்" என்பதாகும்.

இனிமேல் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் வாழ முடியாது. தமிழீழ மக்கள் தமக்குரிய தமிழீழ அரசை அமைத்தால்தான் தமது சுதந்திரமான, கௌரவமான, பாதுகாப்பான பொருளாதார வாழ்வை மேம்படுத்தலாம்.

தமிழீழம் அமைவதில்தான், தமிழீழ மக்களின் "உயிர் வாழும் உரிமை" பாதுகாக்கப்படும். இத்தனை வீரஞ்செரிந்த போராட்டங்களின் பின், வீரமாக சாதனைகளின் பின், இத்தனை பெரிய இழப்புக்களின் பின் நாம் எமக்கு இன்றுள்ள இக்கட்டான பொருளாதாரப் பிரச்சினைகளுக்காக ஓரளவு இறங்கிவந்தால் அதனால் எம்மினத்துக்கு ஏற்படும் இழிவையும், இழப்பையும் என்றைக்குமே மீட்டுக்கொள்ள முடியாது.

என்றைக்கும் நாம் அடிமைகள். எமது பிள்ளைகள் அடிமைகள். பிள்ளைகளின் பிள்ளைகள் அடிமைகள்தான். என்பதனை எழுதி வத்தக்கொள்ள வேண்டியதுதான். அப்படிப்பட்ட ஒரு இழிவான வாழ்வை எமது எதிர்காலச் சந்ததிக்கு சொத்தாக விட்டுச் செல்வதைவிட, ஓட்டு மொத்தமாக தமிழீழ விடுதலைக்காக போராடி நாம் அழிந்து போவதே மேல்.

எனவோ, தமிழினம் தன்னை சகல அடக்குமுறைகளிலும் இருந்து விடுவித்துக்கொள்ளும் இறுதி நேரமாக இன்றைய காலகட்டம் உள்ளது.

வெளிநாடுகளில் அகதிகளாக வாழும் நாம் அனைவரும், உலகத்தமிழர்களும், தமிழ் நாடு தமிழர்களும் தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் தமிழ் மக்களின் தேசிய விடுதலைக்கு உறுதியாகவும், பக்கபலமாகவும் என்றும் உதவி செய்ய முன்வரவேண்டும்.

நாம் பிறந்து, தவழ்ந்து, விளையாடி வந்த மண்ணை மீட்க, எம் அனைவரையும் பங்ளிப்புச் செய்யும்படி வேண்டப்படுகிறார்கள். இன்றை இந்த வரலாற்றுத் தேவையைப் புரிந்து கொண்டு நாம் அனைவரும் பங்களிப்புச் செய்ய முன்வருவதுடன், தமிழீழ விடுதலைப் பேராட்டத்தின் தேவையை வெளிநாட்டு மக்களுக்கு விளக்கி அவர்களின் தார்மீக ஆதரவையும் நாம் பெற முயற்சிக்க வேண்டும். விடுதலைப் போராட்டம் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற முடியும். சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதும் வெளிநாட்டில் வதியும் தமிழ் ஈழத்தவரின் முக்கிய கடமையாகும்.

மிகுதியாக உள்ள எமது வாழ்வில் எந்தளவு கஸ்டங்களை எதிர்நோக்கினும் எதிர்கால தமிழீழச் சந்ததிக்கு, தமிழீழ தேசத்தை விடுதலையாக்கி விட்டே நாம் சாக வேண்டும். எமது அப்புவும் ஆச்சியும் விட்ட தவறை நாமும் விட்டு எமது எதிர்காலச் சந்ததியை அகதிகளாக, அடிமைகளாக உலகம் பூராகவும் அலையவிடக் கூடாது.

கடந்த 73 ஆண்டுகால தமிழர், தமது வரலாற்றைத் திருப்பிப் பார்க்கின்ற போது, "இன்றைய தமிழர்களின் நிலைப்பாடு சரியானதே". எனவே இந்த சரியான நிலைப்பாட்டில் இருந்தே தமிழீழம் மீட்கப்பட வேண்டும். இன்றுள்ள தமிழினமே அழிவதானாலும் எதிர்கால தமிழீழ மக்களுக்குத் தமிழீழத்தை விடுவித்துக் கொடுத்தே அழிய வேண்டும்.

நன்றி : இராசா – "உலகத்தமிழர்"

# தேரியக்கொடி வணக்கம்

## மக்களின் மகோன்னத கடமை




ஒரு நாட்டின் தேசிய இனங்கள், நாட்டு மக்களின் பண்புகள், ஆட்சி இறைமை என்பவை உட்பட அந்த நாட்டைக் குறிக்கின்ற ஒட்டுமொத்தமான பொதுச் சின்னமாக தேசியக் கொடி விளங்குகிறது. நாட்டின் இயல்புகள், நிலைமைகள், எண்ணங்களின் வெளிப்பாடாக அவ்வவ் நாடுகளினது தேசியக் கொடிகளின் சின்னம், நிறம் என்பன வேறுபட்டிருக்கும்.

நாட்டைப் போற்றி வணங்குவதற்குப் பதிலாக தேசயக் கொடிக்கு வணக்கம் செலுத்தப்படுகின்றது. தேசியக் கொடியை வணங்குவது நாட்டை வணங்குவது போலாகும். நாட்டின் தலைவர், படை, ஆட்சி என்பனவற்றை விடவும் உயர்ந்ததாக தேசியிக்கொடி மதிக்கப்படுகின்றது. எனவே தான் ஒரு நாட்டின் எந்தவொரு சிறப்பு நிகழ்வுகளின் போதும், நாட்டின் தலைவர், படை அரசுப்பணியாளர் உட்பட அனைவரும் தேசியக்கொடி வணக்கம் செலுத்துகின்றனர். தேசியக்கொடிக்கு வழங்கப்படும் மதிப்பு, சிறப்பு என்பன அந்த நாட்டைச் சென்றடைவது போல், தேசியக்கொடிக்கு ஏற்படுத்தப்படும் இழிவு, புறக்கணிப்பு என்பனவும் அதன் நாட்டையே சென்றடையும். எனவே தான் தேசியக்கொடிக்கு ஏற்படுத்தப்படும் இழிவு பெரும் குற்றமாகக் கருதப்பட்டு, அக்குற்றத்துக்கு மிகுதியான ஒறுப்பு (தண்டனை) வழங்கப்படுகிறது.

வடக்கு – கிழக்குப் பிரதேசம் தமிழீழ மக்களின் பாரம்பரிய தாயகம். தமிழீழ தாயகத்தின் இறைமையின் சின்னமாக தமிழீழத் தேசியக் கொடி விளங்குகின்றது. 1990 ஆம் ஆண்டு மாவீரர் நாளிலிருந்து (27.11.1990) அறிவிக்கப்பட்டு தமிழீழத்தின் தேசியக் கொடியாக இருந்து வரும், எமது தேசயக்கொடியை மஞ்சள், சிவப்பு, கறுப்பு வெள்ளை ஆகிய நான்கு நிறங்கள் அலங்கரிக்கின்றன.

"தமிழீழ மக்களுக்கு ஒரு தாயகம் உண்டு; அந்தத் தாயகம் அவர்களது சொத்துரிமை; தமிழீழ மக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம் என்பதால் அவர்களுக்கு தன்னாட்சி (சுயநிர்ணய) உரிமை உண்டு; இந்த தன்னாட்சி உரிமை அவர்களது அடிப்படை அரசியல் உரிமை; தமது தாயகத்தை மீட்டெடுத்து, தன்னாட்சி உரிமையை நிலைநாட்டுவதற்கு தமிழீழ மக்கள் மேற்கொண்டுள்ள தேசிய விடுதலைப் போராட்டம் அறத்தின் பாற்பட்டது; மனித தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது" என்பதை "மஞ்சள்" சுட்டி நிற்கின்றது.

"தேசிய சுதந்திரம் பெற்று தமிழீழ தனியரசை அமைத்து விட்டால் மட்டும் நாம் முழுமையாக விடுதலை பெற்றதாகக் கொள்ள முடியாது; தமிழீழ சமுதாயத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகள் ஒழிக்கப்பட வேண்டும்; வர்க்க, சாதிய முரண்பாடுகள் அகற்றப்பட்ட வேண்டும் பெண் அடிமைத்தனம் நீக்கப்பட வேண்டும்; இதற்கு சமுதாய அமைப்பில் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்ட வரவேண்டும்; சமத்துவமும், சமதர்மமும், சமூகநீதியும் நிலைநாட்டப்பட வேண்டும்; இவ்வாறான புரட்சிகரமான சமுதாய மாற்றத்தை வேண்டி நிற்கும் எமது அரசியல் இலட்சியத்தை "சிவப்பு" குறியீடு செய்கின்றது.

"விடுதலைப் பாதை கரடு முரடானது; சாவும், அழிவும், தாங்கொணாத் துன்பங்களும் நிறைந்தது; இத்தனையையும் தாங்கிக்கொள்ள இரும்பு போன்ற இதயம் வேண்டும்; என்றும் தளராத உறுதி வேண்டும் என்பதை "கறுப்பு நிறம்" குறித்துக்காட்டுகின்றது.

"விடுதலை அமைப்பும், மக்களும், தலைவர்களும் தூய்மையையும், நேர்மையையும் கடைப்பிடிக்க வேண்டுமென்பதை வெள்ள நிறம் குறித்து நிற்கிறது."

மேற்காட்டிய பண்புகளையே "எங்கள் தேசியக் கொடியிது" எனத் தொடங்கும் தமிழீழ தேசியக்கொடிப் பாடலானது வெளிப்படுத்தி நிற்கின்றது. "எங்கள் தேசியக் கொடியிது" பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களினதும், மாவீரர்களினதும் உழைப்பால், தியாகத்தால் உருவான, உட்டுத் திக்கிலும் எம்மினத்தின் மானத்தைக் காத்த தமிழ்த் தாயவள் மணிக்கொடியாக விளங்கும் எங்கள் தேசியக்கொடியை தமிழீழ மக்கள், மாவீரர் நாள் உட்பட தமது முக்கிய வைபவங்களில் எல்லாம், அதற்குரிய ஒழுங்குகளில் ஏற்றி. வணக்கம் செலுத்தி மரியாதை அளித்து வருகின்றார்கள். தமிழீழத்திற்கு வெளியில் வாழும் தமிழீழ மக்களும் இன்று தமிழீழத் தேசியக்கொடிக்கு மரியாதை செலுத்தம் தேசியக் கடமையை ஆற்றத் தொடங்கி விட்டார்கள். இது தமிழ் மக்களின் பிறப்புரிமை.




இந்த அடிப்படையில் தான் விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுப் பிரதிநிதிகளுக்குமிடையில் நடைபெற்ற முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது, அது நடைபெற்ற மண்டபத்தின் நடுவே தமிழீழ தேசியக்கொடி பறக்கவிடப்பட்டிருந்தது. பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும் வரை அதைத் தடுக்கும் வகையில், இனத்துவேசத்தை வெளிப்படுத்தி வந்த சிறீலங்கா அரசியல் வாதிகள் சிலரும், கொழும்புப் பத்திரிகைகள் சிலவும் முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது பறக்கவிடப்பட்டிருந்த தமிழீழத் தேசியக்கொடியை தமது இனத்துவேச பிரசாரத்திற்குப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளமை கவலைக்கும், கண்டனத்திற்குமுரிய விடயமாகும். செய்தித் தாளின் ஆசிரியிர் தலையங்கத்திலேயே முக்கியத்துவம் கொடுத்து எழுதக் கூடியளவுக்கு, தமிழீழத் தேசியக்கொடியை தமது இனத்துவேசத்திற்குப் பயன்படுத்தியுள்ளனர்.

சிறீலங்காவில் நடந்த சமாதானப் பேச்சுவார்த்தைக்கான முன்னெடுப்புக்களைக் குழப்பும் முன்னெடுப்புக்களைக் குழப்பும் இனவாதிகளின் செயலே இதுவாகும். இவ்வாறான இனவாதிகளையும் உள்வாங்கியிருக்கும் சிறீலங்காவின் ஒற்றையாட்சியின் கீழ் பூரண அரசியல் இறைமையுடன் வாழமுடியாது என்தையோ இனத்துவேசக் கருத்துக்கள், தமிழ் மக்களுக்கு மீண்டுமொரு முறை உணர்த்தியுள்ளன.

### தமிழீழத் தேசியக் கொடிப் பாடல்

ஏறுதுபார் கொடி ஏறுது பார்
ஏறுதுபார் கொடி ஏறுது பார் – இங்கு
ஏறுதுபார் கொடி ஏறுது பார் – தமிழ்

ஈழத்தின் வேதனை தீர்த்தகொடி – எட்டுத்
திக்கிலும் மானத்தைச் சேர்த்தகொடி
காலத்தை வென்றுமே நின்றகொடி – புலி
காட்டியபாதையில் சென்ற கொடி
(ஏறுதுபார்)

செக்க நிறத்திலே வேங்கை நடுவிலே
சீறிடும் கொடியிது – தமிழ்
மக்களைக் காத்த நம்மானமா வீரரை
வாழ்த்திடும் கொடியிது – புலி
வீரத்தின் கொடியிது – மா
வீரனின் கொடியிது
(ஏறுதுபார்)

எத்தனை எத்தனை வேங்கைகள் ரத்தத்தில்
ஏறிய கொடியிது – பெரும்
சத்திய வேள்வியில் செந்தமிழ் மீதினில்
சாற்றிய கொடியிது – தமிழ்
ஈழத்தின் கொடியிது – புலி
ஏந்திய கொடியிது
(ஏறுதுபார்)

சாதிகள் சண்டைகள் சாய்த்து விழுத்திய
சாதனைக் கொடியிது – சங்கு
ஊதி முழங்கிட ஊர்மனை யாவிலும்
உலவிய கொடியிது – சம
தர்மத்தின் கொடியிது – எங்கள்
தாயவள் கொடியிது
(ஏறுதுபார்)

ஆயிரமாயிரம் பேரென வேங்கைகள்
ஆக்கிய கொடியிது – பிர
பாகரன் என்றிடும் காவிய நாயகன்
போற்றிடும் கொடியிது – தமிழ்த்
தேசத்தின் கொடியிது – எங்கள்
தேசியக் கொடியிது
(ஏறுதுபார்)




# எமது இயற்கை வளங்களைப் பாதுகாப்போம் பயன் படுத்துவோம்

எமது சுதந்திரப் போராட்டத்தை சொல்லொணா இன்னல் களினூடாகவே வென்றெடுக்க வேண்டியவர்களாக உள் ளோம். ஒவ்வோர் மூலவளங்களையும் நாம் பயன்பாட் டுக்கு கொண்டு வரவேண்டும். இன்று எங்கு பார்த்தாலும் இயந்திர மயமாக்கப்பட்ட நிலையிலேயே எமது மண்ணின் நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன. எமது இயற்கை வளங்களில் தங்கிநிற்காது அந்நியப்பட்டு நிற்கும் நிலை தொடருமானால் நாம் பட்டினிச் சாவையே எதிர்நோக்க வேண்டி நேரிடும்.

காலத்துக்குக்காலம் எமது மண் திட்டமிடப்பட்டு அடக்கு முறையாளரினால் நசுக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்தும் இந்நிலை தொடரும் என்பதில் ஐயமே இல்லை. எமது பிரதேசங்களில் உள்ள இயற்கைவளங்களை பாதுகாக் கவும் பயன்படுத்தவும் நாம் முன்வரவேண்டும். தமிழீழப் போராட்டம் உச்சக் கட்டம் அடைந்து வரும்வேளையிலும் சிறீலங்கா இனவெறி அரசு எமது பிதேசத்திற்கான சகல தொடர்பையும் துண்டிக்கும். இதனை தடைசெய்வதன் மூலம் நாம் தோற்றுப்போவதாகவும் பட்டினிச்சாவை எதிர்




நோக்கி சரணடைய வைத்து விடலாம் என்றும் அடக்கு முறையாளர் கனவு, காண்பார்கள்.

உதாரணம், யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறு அளவிலான நிலப்பரப்பளவைக் கொண்டு விவசாய நடவடிக்கைகளை ஆற்றும் மக்கள் இயந்திரவலு உப யோகத்திலேயே கருத்தாக உள்ளனர். பெருமளவிலான நிலப்பரப்புகள் கொண்ட உற்பத்தியாளர்கள் தவிர்க்க முடியாத காரணத் தால் உழவுயந்திரம் பயன்பாடு அவசியமாகிறது. அவர்கள் ஒரே தடவையில் உற்பத்தி நடவடிக்கைகளை காலதாமதம் இன்றி மேற்கொள்ள தேவையாகிறது. ஆனால் எமது மக்கள் இங்குள்ள இயற்கை வளங்களை அழியவிட்டுக் கொண்டு இருப்பது கவலைக்குரியதே. நாம் இயற்கையோடு ஒன்றி வாழவேண்டும். இது தவிர்க்க முடியாதது.

நாம் முதலில் அந்நியச் சார்பில் இருந்து விடுபடுதல் வேண்டும். முதலாளித்துவ அரசின் உற்பத்திப் பொருட் களின் உபயோகங்களை நாம் முற்றாக தவிர்த்துக் கொள்ள வேண்டும். தேநீர் மற்றும் பிற உணவுப்பொருட்களிலும் நாம் அவர்களைப் பார்த்துக் கொண்டிருத்தல் மடமை யானது.

எமது வளங்களை முறையாக பேணுவோம். பழகிவந்த பழக்கங்களை மாற்றிக்கொள்ள சிரமம் ஏற்படுவது இயற்கை யே. எனவே இப்போதிலிருந்தே பழகிக் கொள்ளவோம். தேநீருக்கு பதிலாக நாம் எமது மண்ணில் விளையக்கூடிய வரண்ட பயிர்ச்செய்கையாக மல்லியை பயிர் செய்வதன் மூலம் உடல் நலத்தக்கும் உகந்த பானத்தை தயாரிக்கலாம். மற்றும் உணவுத்தேவையைப் பூர்த்தி செய்வதில் நாம் சோழம், வரகு, குரக்கன், பயறு, தினை, போன்ற சிறு தானியப் பயிர்களை பயிரிடல் வேண்டும். சிறுதானிய உற்பத்தியில் நாம் பெரிதும் கவனம் செலுத்துதல் வேண் டும்.

விடுதலை நோக்கி நாம் எமது மண்ணோடு ஒன்றி எமது உடல், பொருள், ஆவினைத்தையும் ஈய்ந்து உழைக்க முன்வர வேண்டும். எனவே எம்மால் கைவிடப்பட்ட பழைய விவசாய வளங்கொழிக்கும் மரபை மீண்டும் கைக்கொள்வோம்.

மாடுகளைக் கொண்டு உழுவோம். நாமே அறுவடை செய்வோம். களை பிடுங்குவோம். எமது மக்கள் ஒன்று சேர்ந்து கூடிக்களிக்கும் காலம் உதயமாகட்டும். அந்த இனிமையான பண்ணை நாட்களை எம் மண்ணில் செய்வோம்.

காற்றாடி மூலம் நீர் இறைகதும் முறையைக் கையாண்டு நீர்பாசனம் செய்வோம். இதன் மூலம் குறைந்த ஆக்கச் செலவுமட்டுமே முதலில் ஏற்படும். இவ்வாறு நாம் எம்மில் தங்கும் நிலைக்கு தயாராக வேண்டும். மாடுகளை பயன்பாட்டுக்கு கொண்டு வருவதன் மூலம் அவற்றின் சாணத்தை கொண்டு உயிரியல்வாயு உற்பத்தி செய்து கொள்ளப்படுகிறது. இதன் மூலம், மின்சாரத்தேவையை நாம் பூர்த்தி செய்துகொள்ளலாம். எனவே முதலில் இவ் வளங்களை நாம் பயன்படுத்தத் தொடங்கல் அவசிய மானது.

கால் நடை வளர்ப்பின் மூலம் எமது விவசாய நடவடிக கைகளை செய்வதோடு எமது பால் உணவு இறைச்சி தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

இன்று கொண்டாடப்படும் தேசிய உர விழாவானது எம் மக்கள் மத்தியில் பரப்புவதன் மூலம் முதலாளித்துவ நாடுகளும் முதலாளித்துவ தரகர்களும் தம்மை வளர்த்துக் கொள்ள எடுத்துள்ள நடவடிக்கையே. இதுபற்றி எமது மக்கள் வழிப்பாக இருந்தல் வேண்டும். உரப்பாவனைமூலம் விவசாய நிலங்கள் சத்தற்றுப்போகின்றது. உரப்பசளையை நாம் அறவே ஒழிக்கவேண்டும் எமது நாட்டில் இயற்கை யாக கடைக்கும் தழைகள், கடற்தாளை, சருகுகள் போன்ற வற்றை பயன்படுத்தலாம் அத்தோடு சணல் விளைவு செய்து நிலத்தோடு உழுது விடுவதன் மூலம் நிலத்தை பன்மடங்கு வளப்படுத்தலாம்.

மாடுகளை வளர்ப்பதன் மூலம் அவற்றின் எருக்களை கூட்டெருவாக தயாரித்து பயிர்களுக்கு இடுவதன்மூலம் நாம் எதிர்பார்த்த பலனை எளிதில் அடையலாம். இவற்றை மக்கள் இனிவரும் நாட்களில் இவ்வாறான உரப்பயன பாடுகளின் தடைகள் எம்மை எதிர்நோக்கும் பட்சத்தில் அவற்றாலுள்ள தீமைகளையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

இயற்கையாக கிடைக்கும் உரங்களை பயன்படுத்துவதன் மூலம் எமது நிலங்கள் செழிப்புள்ளதாக வளரும். தாவர நோய்கள் குறையும். மாற்றுப்பயிர் ஒன்றை செய்வதன் மூலமும் அதாவது (அவரைஇனப் பயிர்) இதுபோன்ற வளங்களை தொடர்ந்து பேணலாம். அடுத்து எமது வளங்களில் பெரும்பங்கை வகிக்கும் பனை தென்னை விருட்சங்கள் நிறைந்த காணிகள் தரிசு நிலங்களாக கிட்க்கின்றன, இன்று தமிழீழத்தில் சகல பகுதிகளிலும் வயது முதிர்ந்த தென்னைகளையும் பனைகளையும் காணக்கூடிய ஒரு துரதிஷ்டமான நிலை உருவாகியிருக்கிறது. எமது மக்கள் தொடர்ச்சியாக வளம்பேணல் இன்மை என்ற கோப்பினுள் சிக்கி இருப்பது பெரும் துயரத்தை தருகின்றது. இதற்கான முதல் நடவடிக்கைகளை எமது மக்கள் கற்றுவருதல் வேண்டும்.

புதிய நாற்றுக்களை நடுவதன் மூலம் எமது வளம் தொடர்ந்து பேணப்பட்டு எமது எதிர்காலத்தை சுபீட்சம் நிறைந்ததாக மாற்றுவோம்...நாளை.

# எதிரியை விட துரோகிகளே மிகவும் ஆபத்தானவர்கள்



“நாம் எமது விடுதலைப் பயணத்தை ஆரம்பித்து முப்பது ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. விபரிக்கமுடியாத துன்பங்களும் வியக்கத்தக்க தியாகங்களும் நிறைந்த ஒரு மகத்தான வீர காவியமாக எமது விடுதலை வரலாறு நீண்டுசெல்கிறது. இரத்தத்தால் எழுதப்படும் எமது இனத்தின் விடுதலை வரலாறு மனித குலத்தின் விடுதலை எழுச்சிக்கு ஒரு உன்னத எடுத்துக்காட்டாக விளங்குகிறது.



உலகில் எங்குமே நிகழாத கொடுமைகள் எம்மீது கட்டவிழ்த்துவிடப்பட்டன. மனித நாகரீகமே வெட்கித் தலைகுனியுமளவிற்கு எதிரி எம்மீது மிருகத்தனமாக நடந்து கொண்டான். எமது பழைய தலைமையின் துரோகத்தனம் காரணமாக, நம்பி, நம்பி ஏமாந்த வெகுளித்தனம் காரணமாக, நாம் என்றுமில்லாதபடி பாரிய அழிவுகளை சந்திக்கவேண்டியிருந்தது. தமிழின ஒழிப்பையே இலட்சியமாகக் கொண்டு செயல்படும் ஈவிரக்கமற்ற எதிரியுடன் கொஞ்சிக்குலாவி, சலுகைகள் கேட்டு, சமரஸ ஒப்பத்தங்கள் செய்து, சப்பாணிப்போராட்டம் நடத்தி, தமிழினத்தைப் பெரிய, அழிவுப்பாதையில் இட்டுச் சென்ற பெருமை எமது காந்தியவாத தலைவர்களையே சாரும்.

குட்டக் குட்டத் தலைகுனிந்து, அடிமைகளாக, அவமானத்துடன் வாழ்ந்த தமிழனை, தலைநிமிர்த்தி, தன்மானத்துடன் வாழவைத்த பெருமை எமது விடுதலை இயக்கத்தையே சாரும். உண்மையில் எமது வீரசுததந் திரப் போராட்டம் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தோற்றத்திலிருந்தே ஆரம்பமாகிறது என்பதை எவரும் மறுக்க முடியாது. கடந்த பத்து ஆண்டகால ஆயுதப் போராட்ட வரலாற்றில் எமது இயக்கம் ஒப்பற்ற சாதனைகளை நிலைநாட்டியது. எத்தனையோ இடையூறுகள் மத்தியில், எத்தனையோ கஷ்டங்கள் மத்தியில், எத்தனையோ சோதனைகள் மத்தியில், சலிப்படையாது, நம்பிக்கை தளராது, இரும்பையொத்த உறுதியுடன் தொடர்ச்சியான, தீர்க்கமாக ஆயுதப்புரட்சிப்போராட்டத்தை நாம் முன்னெடுத்து வருகின்றோம். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற ஒழுக்கவிதிகளில் நெறிப்படுத்தப்பட்டு, அஞ்சா நெஞ்சம் படைத்த இலட்சிய வீரர்களை உருவாக்கிய எமது விடுதலை இயக்கம் இன்று முழு உலகமுமே வியக்கத்தக்க முறையில் சிங்கள அரச பயங்கரவாதிகளையும் அவர்களுக்கு முண்டு கொடுத்துவரும் சர்வதேச நாசகார சக்திகளையும் தனித்துநின்று சமர் புரிந்து விரட்டியடித்து வருகிறது. விடுதலைப்புலிகளின் வியப்பூட்டும் இராணுவ சாதனைகள் காரணமாகவே இன்று எமது விடுதலைப் போராட்டம் உலக அரங்கில் மிகப்பிரசித்தி பெற்றதாக விளங்குகிறது. சமாதானப் பேச்சு என்றும், சமரஸத்திட்டம் என்றும், போர்நிறுத்தம் என்றும் சிங்கள அரசு இன்று வெள்ளைக்கொடி காட்டுவதும் எமது போராட்ட சாதனைகளின் விளைவாகத் தான், இந்தப் பத்தாண்டு கால விடுதலை யுத்தத்தில் எமது விடுதலை வீரர்கள் நெஞ்சத்தைப் பிளக்கும் தியாகங்களைப் புரிந்தனர் மக்களின் விடுதலை என்ற ஒரே இலட்சியத்துக்காக, மக்களை இன அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக, மக்கள் சுபீட்சமாக, நிம்மதியாக வாழ வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுக்காக இளம் புலி வீரர்கள் களத்தில் தமது உயிரை அர்ப்பணம் செய்து வருகின்றனர்.

இன்று வடக்கில் பல பகுதிகள் விடுதலைப் பிரதேசங்களாக எமது கட்டுப்பாட்டில் எமது நிர்வாகத்தில் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. தமிழ்மக்களை நரவேட்டை ஆடிவந்த சிங்கள இராணுவம் முகாம்களுக்குள் முடங்கிக்கிடக்கின்றது. மக்களின் ஒரே பாதுகாப்பு அரணாக இன்று எமது இயக்கம் தமிழீழம் எங்கும் தன்னை நிலைப்படுத்தி பலப்படுத்தி வருகிறது.

தமிழீழத் தனியரசு என்ற எமது இலட்சிய நட்சத்திரம் அடிவானத்தில் பிரகாசிக்கத்தொடங்கியிருக்கிறது நீண்ட, கடினமான விடுதலைப் பயணத்தின் பயனாக நாம் சுதந்திர மலையின் சிகரத்தை அண்மித்துக் கொண்டிருக்கிறோம். எமது விடுதலை வரலாற்றின் இந்த ம்கியமான கால கட்டத்தில், எமது வெற்றிகளை நாம் நிலைப்படுத்தி வடிவை நோக்கி விரைந்து செல்ல வேண்டிய இந்த நேரத்தில், எமது போராட்டத்தை முறியடிக்கவும், எமது விடுதலை இயக்கத்தை அழித்துவிடவும் எமது எதிரி ஒருபுறமும், மற்றும் தீய சக்திகள் மறுபுறமுமாக ஈடுபட்டுவருகின்றன எண்ணற்ற தியாகங்கள் புரிந்து, எத்தனையோ உயிர்ப்பலிகள் கொடுத்து, இத்தனை ஆண்டுகளாக கண்ணிரும் வியர்வையுமாக நாம் கட்டி எழுப்பிய எமது வீர சுதந்திரப் போராட்டம் இந்த சக்திகார சக்திகளினால் இன்று ஒரு ஆபத்தான சூழ்நிலையை எதிர்கொண்டு நிற்கிறது. இந்த இக்கட்டான சந்தர்ப்பத்தில் நாம் விழிப்புடன் செயற்படத்தவறினால் இத்தனை ஆண்டு காலமாக நாம் செய்த தியாகங்கள், நாம் புரிந்த சாதனைகள், நாம் அடைந்த வெற்றிகள், நாம் அனுபவித்த துன்ப துயரங்கள், நாம் கொடுத்த உயிரிழப்புகள், பொருளிழப்புகள், எல்லாமே அர்த்தமற்றவையாய் போய்விடுவதுடன் நாம் மீண்டும் அடிமை வாழ்வில் தள்ளப்பட நேரிடும்.”

(தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்திற்கு விரோதமான முறையில் எதிரியோடு இணைந்து செயற்படும் இனத்துரோகிகள் மீது மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி, 1985ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தலைவர் வெளிவிட்ட அறிக்கையின் ஒருபகுதியை இங்கு பிரசுரிக்கிறோம்)




With Best Wishes From
KENNEDY LAW OFFICE
உங்களது அனைத்து சட்டத் தேவைகளுக்கும்.....
கெனடி சட்ட அலுவலகம்
REAL ESTATE LAW காணி, வீடுகள் - வாங்கல், விற்றல், அடமானம்
BUSINESS LAW வணிகச் சட்டம்
CRIMINAL LAW குற்றவியல் சட்டம்
FAMILY LAW குடும்பச் சட்டம்
IMMIGRATION LAW குடிவரவுச் சட்டம்
ODSP APPEALS
SMALL CLAIMS
WILLS, POWER OF ATTORNEY & AFFIDAVITS
NOTARIZING & COMMISSIONING
W.KENNEDY BERNADIUS, LL.B
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC
Tel: 416 613 4900
Fax: 416 613 4904
E: williamkennedylaw@gmail.com
2390 Eglinton Ave., East, Suite# 250, Scarborough, ON M1K 2P5 (Kenndy & Eglinton)


WEXFORD
WELLNESS CARE INC.
We treat all car accident injuries!
Massage Therapy
Physiotherapy
Orthopaedic
Acupuncture
Chiropractic
Orthotic
We deal directly with Insurance Companies, Extended health Care Corporate Insurance, ODSP WSIB, Motor Vihicle Accident (MVA)
Tel: 647-349-5120
Fax: 647-349-5121
Serve Two Location
Unit 301-240 Alton Towers Cir, Scarborough ON M1V 3Z3
2900 Markham Rd Unit F11, Scarborough ON M1X 1E6
(Majestic City, Colombo Rd)


சங்கத்தமிழ்
ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!
உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?
விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்
437.345.4203


NAM THAYAKAM
நம் தாயகம்
நம் தாயகம்
வாங்குவீர்... வாழ்வு தருவீர்!
பெண் தலைமைத்துவ குடும்பங்களினதும்
போரில் அவயங்களை இழந்தோருக்கான
தற்சார்புப் பொருளாதார மேம்பாடு எமது நோக்கம்
முன்னாள் போராளிகளினதும் துணையிழந்த பெண்களினதும்
தயாரிப்புகள் கலப்படங்கள் அற்ற பாரம்பரிய முறைத் தயாரிப்புகள்,
உடல் நலம் காப்பவை.
நம் தாயகப் பொருட்களைக் கொள்வனவு செய்து தாயக மக்களின்
பொருளாதார முன்னேற்றத்துக்கு பங்களிக்கும் உள்ளங்களுக்கு நன்றி
முள்ளிவாய்க்காலில் இருந்து...
"உணர்வினில் தாய் மண் வாசமும் உணர்வோடு தாய் மண் நேசமுமாய்"
Tel: 416-558-2111
nam.thayagam@gmail.com
3031 Markham Road, Unit 35, Scarborough. M1X 1L9 (Markham & Passmore)




# இந்தியாவின் இராணுவத்தினால் யாழ். போதனா வைத்தியசாலைப் படுகொலை 21,22.10.1987



யாழ் நகரத்தின் கிழக்குப் புறமாக நகரில் அமைந்துள்ள யாழ். போதனா வைத்தியசாலை யாழ் குடாநாட்டில் வாழ்கின்ற எட்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களிற்கு மட்டுமன்றி அயல் மாவட்டங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களிற்கும் பிரதான வைத்தியசாலையாக உள்ளது. தினசரி ஆயிரம் பேர் வரையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதோடு, பல கட்டட வசதிகளுடன், சத்திரசிகிச்சைப் பிரிவு, அவசர சத்திரசிகிச்சைப் பிரிவு எனப் பல பிரிவுகளுடனும் 1970 களிலிருந்து இயங்கி வருகிறது.

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் பத்தாம் நாள் இந்தியப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தம் தொடங்கியதிலிருந்து தொடர்ச்சியாக நடைபெற்ற போரின்மூலம் யாழ்நகரைக் கைப்பற்றும் முயற்சியில் இந்திய இராணுவத்தினர் ஈடுபட்டார்கள். யாழ்ப்பாணக் கோட்டையில் நிலைகொண்டிருந்த இந்திய இராணுவத்தினர் யாழ் நகரப்பகுதி மீது பெருமளவு எறிகணைத் தாக்குதல், விமானத் தாக்குதலை மேற்கொண்டிருந்தபோதும் யாழ். வைத்தியசாலையில் வைத்தியர்கள், ஊழியர்கள், தாதிமார் தமது உயிரையும் பொருட்படுத்தாமல் மக்களுக்கான வைத்திய சேவையை வழங்கிப் பல உயிர்களைக் காப்பாற்றிக் கொண்டிருந்தார்கள்.

1987 ஒக்டோபர் இருபத்தோராம் திகதி இந்தியப்படையினர் எறிகணை வீச்சு, விமானத் தாக்குதல்களை நடத்தியவாறு யாழ். நகரை நோக்கி முன்னேறினார்கள். யாழ். வைத்தியசாலையில் பணிகளில் ஈடுபட்ட வைத்தியர்கள், ஊழியர்கள், சிகிச்சை பெற வந்த நோயாளர்கள் போன்றோர் பாதுகாப்பிற்காக, வைத்தியசாலை எக்ஸ்றே பிரிவு அலுவலகம் அமைந்துள்ள இடத்தில் பாதுகாப்பு தேடினார்கள். பிற்பகல் 3:00 மணியளவில் யாழ் நகரப் பகுதிக்குள் இந்திய இராணுவம் உள்நுழைந்தது. பின்னர் 4:30 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்குள் நுழைந்த இந்திய இராணுவம் அலுவலகப் பகுதியில் வைத்தியசாலைச் சீருடையுடன் இருந்த ஊழியர்கள், நோயாளர் வண்டில், கட்டில், பாய். வாங்குகளிற் படுத்திருந்த நோயாளர்கள் என எல்லோரையும் சுட்டுப்படுகொலை செய்தது.

**இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர் கூறுகையில்**

"1987 ஒக்ரோபர் இருபத்திதோராம் திகதி மாலை 4:30 மணியளவில் வைத்தியசாலையினுள் வந்த இந்திய இராணுவத்தினர் மறுநாள் காலை 10:00 மணி வரை வைத்தியசாலையில் மக்கள் மீது தாக்குதலை நடத்தினார்கள். தாக்குதலிற் காயப்பட்டவர்கள் சத்தமிடும் போது அவர்கள் மீது கைக்குண்டினை எறிந்ததுடன், துப்பாகியாலும் சுட்டார்கள். மறுநாள் காலை 6:00 —



7:00 மணிக்கிடையில் வைத்தியசாலையின் இருபத்தாறாவது நோயாளர் விடுதிப் பக்கமிருந்து சம்பவ இடத்திற்கு வந்த வைத்தியர் திரு. சிவபாதசுந்தரம் அவர்களும், இரண்டு தாதியினரும் இந்தியச் இராணுவத்தினருடன் கதைத்து எஞ்சியிருக்கும் பொதுமக்களைக் காப்பாற்ற முயற்சித்தார்கள். ஆனால் இராணுவத்தினர் ஓடிச் சென்று துப்பாக்கியினை எடுத்து வைத்தியரையும் கூடச்சென்றவர்களையும் சுட்டதில் அவர்கள் அனைவரும் உயிரிழந்தார்கள். காலை 10:00 மணியளவில் ஏனைய வைத்தியர்கள் எடுத்த முயற்சியினால் சம்பவத்தில் காயமடைந்து உயிருடனிருந்தவர்கள் காப்பாற்றப்பட்டார்கள். சம்பவத்தில் உயிரிழ்நத மூன்று வைத்தியர்கள், இரண்டு தாதிமார்கள், மேற்பார்வையாளர், ஊழியர்கள் உப்பட இருபத்தொரு மருத்துவமனை பணியாளர்களும், நோயளார் விடுதிகளிற் சிகிச்சை பெற்றுவந்த நாற்பத்தேழு நோயாளர்களுமாக மொத்தம் அறுபத்தெட்டுப் பேர் உயிரிழந்தார்கள். உயிரிழந்த அனைவரது உடல்களையும் வைத்தியசாலை பின்வாசற் பக்கமுள்ள பிண அறைக்கு அருகிற் போட்டு இந்தியப்படையினர் எரியூட்டினர்." எனத் தெரிவித்தார்.

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் இருபத்தோராம், இருபத்திரண்டாம் திகதியில் கடமையின்பால் உயிர் நீத்த வைத்தியர்கள் உட்பட இருபத்தொரு ஊழியர்களையும் அவர்களுடன் உயிரிழந்த நோயாளர்கள் நாற்பத்தேழு பேரையும் யாழ். மருத்துவமனை ஒவ்வொரு வருடமும் நினைவுகூர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**21,22.10.1987 அன்று யாழ். போதனா வைத்தியசாலைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:-**

1. சூடாமணி அவுடையம்மா (55)
2. இராஜதுரை மகேஸ்வரி (46)
3. இராயப்பு சூசைப்பிள்ளை (74)
4. இராமநாதன் மங்கையற்கரசி (31)
5. இராமசாமி இலங்கேஸ்வரன் (25)
6. இராமலிங்கம் சுகுமார் (24)
7. இராசு சுப்பிரமணியம் (46)
8. இராசரத்தினம் இரத்தினராஜா (28)
9. நடராஜா ஜெயசீலன் ( 21)
10. கந்தையா செல்வராஜா (50)
11. கந்தையா செல்வராஜா (56)
12. கந்தையா வேதாரணியம் (27)
13. கந்தையா சிவராஜா (25)
14. கந்தன் மார்க்கண்டு (39)
15. கதிர்காமு பரிமேலழகர் ( 40)
16. கிருபாகரன் இந்திராணி (32)
17. குருசுமத்து ஜோன்பீற்றர் ( 24)
18. கணபதி கிருஸ்ணராஜா (50)



19. கணபதி சிவலோகநாதன் (23)
20. பஸ்தியாம்பிள்ளை யோன் அரியமலர் (60)
21. பஸ்ரியாம்பிள்ளை நொய்லா விஜயந்தி (20)
22. வைத்திலிங்கம் சண்முகலிங்கம் (49)
23. துரைச்சாமி இராஜேந்திரா (70)
24. துரைச்சாமி மகேந்திரா (73)
25. துரைச்சாமி ஆறுமுகம் (72)
26. தம்பிப்பிள்ளை கனகலிங்கம் (64)
27. தம்பிப்பிள்ளை கிருபாகரன் (33)
28. தியாகராசா மதியரசன் (17)
29. திருமதி வடிவேலு (48)
30. தங்கவேலு சவுந்தரராஜா (06)
31. மார்க்கண்ட தியாகராசா (48)
32. முத்தையா லீலாவதி (28)
33. முத்துக்குமாரு துரைராஜா (26)
34. அந்தோனிமுத்து அந்தோனி விக்ரர் (35)
35. அப்பையா மாணிக்கம் (76)
36. அரியகுட்டி இராசரத்தினம் (53)
37. அரியரட்ணம் லில்லி நேசம் (75)
38. அருணாசலம் சிவபாதசுந்தரம் (-)
39. அல்பிரட் அந்தோனிப்பிள்ளை (65)
40. அல்பிரட் மேரியோசெப்பின் (37)
41. ஜெபமணி கீதபொன்கலன் (43)
42. ஜோன் சின்னையா (65)
43. யோன் சிமியோன் (67)
44. கோபாலப்பிள்ளை உருத்திரன் (24)
45. பொன்னம்பலம் வரதராஜன் (28)
46. பெலிசியன் சதீஸ் யோகேந்திரன் (15)
47. தோம்ஸ் பேரின்பநாயம் பஸ்தியாம்பிள்ளை (66)
48. செபஸ்தியன் தம்பிராஜா (55)
49. சேதுசிகாமணி கணேசரட்ணம் (29)
50. செல்லையா தங்கமணி (58)
51. செல்லர் சிவபுரம் (-)
52. வேலுப்பிள்ளை சரவணமுத்து (60)
53. ஞானப்பிரகாசம் செந்தூர் முருகன் (40)
54. சுப்பிரமணியம் ஜெணமோகன் (32)
55. சத்தியசீலன் ஜெயசீலன் (17)
56. சின்னப்பு ஜெயநாதன் (36)
57. சின்னத்தம்பி வேலுப்பிள்ளை (75)
58. சின்னவி சின்னத்துரை (57)
59. சிவலை குணரட்ணம் (49)

**காயமடைந்தவர்களின் விபரம்**

1. யூலியஸ் பிரதீபன் (06)
2. ந. அன்னம் (90)
3. நா. நவரத்தினம் (54)
4. நா. செல்லையா (21)
5. நடராசா தனபாலசிங்கம் (20)
6. நவரத்தினம் சந்திரகுமார் (18)
7. பூ. விஸ்ணுதாசன் (34)
8. பத்மநாதன் தனபாக்கிய லட்சுமி (43)
9. பற்குணராஜா கமலா (25)
10. தா. இராசேந்திரன் (44)
11. மா. அன்னலட்சுமி (75)
12. அ. சண்முகராசா (36)
13. அ. கந்தசாமி (36)
14. கே. பாலையா (44)
15. செ. பத்மநாதன் (46)
16. செ. தவராஜன் (22)
17. சின்னப்பொடி தெய்வானை (65)
18. வா. மதிஜீவன் (23)
19. ராஜரட்ணம் ஜனார்த்தனன் (20)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



# அராலித்துறைப் படுகொலை 22.10.1987

அராலித்துறை யாழ் மாவட்டத்தின் வலிகாம் மேற்கு சங்கானைப் பிரதேச எல்லைக்குள் அமைந்துள்ளது. இலங்கை இராணுவம் யாழ்கோட்டைப்பகுதியில் நிலைகொண்டிருந்ததால், யாழ் கோட்டைப் பகுதியின் அருகாமையிலுள்ள பண்ணைப் பாலம் ஊடான போக்குவரத்துத் தடைப்பட்டிருந்தது. இதன் காரணமாக தீவுப் பகுதிக்கான போக்குவரத்துப் பாதையாக அராலித்துறை விளங்கியது.

அக்காலப்பகுதியில் தீவுப்பகுதி மக்கள் அராலித்துறைப் பாதையினூடாகப் போக்குவரத்தில் ஈடுபட்டனர்.

1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் இருபத்திரண்டாம் நாள் தீவுப் பகுதியிலிருந்து யாழ் நகரம் நோக்கி பதினைந்து வரையான இயந்திரப் படகுகளில் முந்நூறிற்கும் மேற்பட்ட மக்கள் பயணம் செய்தனர். அன்று மதியம் அராலித்துறைக் கரையில் தரையிறங்கிய பொதுமாக்கள் மீது இந்திய இராணுவத்தின் உலங்கு வானூர்தி மூலம் தாக்குதல் நடத்தியதால் அச்சமடைந்த மக்கள் அராலித்துறை மட்தில் தஞ்சம் புகந்தனர். பாதுகாப்புத்தேடி ஓடிய, தஞ்சமடைந்த மக்களை இலக்கு வைத்து ஏழிற்கும் மேற்பட்ட றொக்கட் குண்டுகள் வீசப்பட்டது. இதனால் அராலித்துறை மடத்தடியில் தஞ்சம் புகுந்த பயணிகள் முப்பத்தைந்து பேர் உயிரிழந்தனர். முப்பதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். ஏழிற்கும் மேற்பட்ட படகுகள் முழுமையாக சேதமடைந்தன. சில படகுகள் பகுதியளவில் சேதமடைந்தன. இறந்தவர்களின் சடலங்கள், காயப்பட்டவர்கள் மீள மறுகரைக்கு செல்லப்பட்டன. இறந்தவர்களில் தீவுப்பகுதியைச் சேர்ந்த அரச உத்தியோகத்தார்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் இடங்குவர்.

**22.10.1987 அன்று அராலித்துறைப் பாடுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. யேசுதாசன் ஜீவகுமார் (06)
2. ஆரோக்கியம் (40)
3. யேசுதாசன் குமுதினி (09)
4. செ. சேவியர் (70)
5. கிறிஸ்ரிராஜா நீற்றம்மா (31)
6. கிறிஸ் ரிராஜா சகாய நாயகி (06)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

# கொக்குவில் இந்துக்கல்லூரிப் பாடுகொலை 24.10.1987

கொக்குவிற் கிராமம் யாழ். மாவட்டத்தில் நல்லூர் பிரதேச செயலக பிரிவினுள் அமைந்துள்ளது. யாழ். நகரிலிருந்து காங்கேசன்துறை வீதியூடாகச் செல்லும் வழியில் ஏறக்குறைய யாழ் நகரிலிருந்து நான்கு மைல் தூரத்திலுள்ள கொக்குவிற் சந்திக்குக் கிழக்குப் புறமாக கொக்குவில் இந்துக்கல்லூரி அமைந்துள்ளது.

1987 ஒக்டோபர் பத்தாம் நாள் இந்திய இராணுவத்திற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்தம் தொடங்கிய பின்னர் இந்திய இராணுவத்தின் பரவலான விமானக்குண்டு வீச்சு மற்றும் ஏறிகணைத்தாக்குதலுக்கு அஞ்சி கொக்குவில் கிழக்கு, ஆனைக் கோட்டைப் பகுதியைச் சோந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்புக்கருதி கொக்குவில் இந்துக்கல்லூாயீல் தஞ்சமடைந்தார்கள். அத்துடன் தங்களை அகதிகள் என அடையாளப்படுத்தும் நோக்குடன் பாடசாலையின் முக்கிய இடங்களில் வெள்ளைக் கொடியைப் பறக்கவிட்டனர்.

1987 ஒக்டோபர் இருபத்துநான்காம் நாள் காங்கேசன்துறை வீதி வழியாக யாழ் நகரம் நோக்கிக் கவசவாகனங்கள், டாங்கிகள் சகிதம் முன்னேறிய இந்தியப் படையினர் கொக்குவில் இந்துக் கல்லூரியை வந்தடைந்ததும், கவச வாகனங்களிலிருந்து அங்கு அடைக்கலம் புகுந்திருந்த பொது மக்கள் தங்கியிருந்த பாடசாலைக் கட்டடங்களின் மேல் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் பாடசாலை வகுப்பறையில் தங்கியிருந்த இருபத்தாறு பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்கள்.

படுகாயமடைந்தவர்களில் பதின்நான்கு பேர் மருத்துவ வசதிகளற்று உள்ளூர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் வழியிலும், மருத்துவமனைகளிலும் உயிரிழந்தனர். இச்சம்பவத்தில் யாழ் பல்கலைக் கழக கல்வியற்துறைப் பீடாதிபதி பேராசிரியர் சந்திரசேகரம் உட்பட மொத்தம் நாற்பது பேர் உயிரிழந்ததுடன், எண்பது பேர் படுகாயமடைந்தனர்.

உரிய முறைப்படி தகனம் செய்வதற்கான சூழ்நிலையில்லாததால் இறந்தவர்களின் சடலங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஒரோ குழியில் வைத்து அடக்கம் செய்யப்பட்டது.

**24.10 அன்று கொக்குவில் இந்துக்கல்லூரிப் பாடு கொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இராசையா பஞ்சலிங்கம் (43)
2. இராசையா செல்வராணி (37)
3. இராமு இராசு (60)
4. நாகரத்தினம் விஜயரத்தினம் (46)
5. நடராசா இராசகுமாரன் (44)
6. நடராசா இராசராசேஸ்வரி (24)
7. நடராசா குணராணி (35)
8. நடராசா தமிழ்ச்செல்வி (10)
9. நடராசா சபேஸ்குமார் (06)
10. நடராசா ரமதி (13)
11. நடேசு பரமேஸ்வரி (51)
12. நல்லையா பாக்கியம் (50)
13. கந்தையா சங்கரப்பிள்ளை (65)
14. கந்தவனம் மகேஸ்வரி (52)
15. குணபாலசிங்கம் பத்மசிறி (08)
16. பரமு தங்மணி (24)
17. பரமேஸ்வரன் மனோன்மணி (35)
18. பரமேஸ்வரன் மாலினி (01)
19. தர்மலிங்கம் நிசாந்தன் (02)
20. துரைச்சாமி குமாராசாமி (72)
21. தம்பிராசா நடராசா (61)
22. வேணுகோபால் மகாதேவன் (41)
23. மகாதேவன் இராசம்மா (28)
24. மகாதேவன் பாலமுருகன் (09)
25. மகாதேவன் வேணுகிருஸ்ணா (07)
26. மகாதேவன் விக்கினேஸ்வரன் (10)
27. அன்னசிங்கம் கமலாதேவி (33)
28. பெரியதம்பி இராசையா (30)
29. பேராசிரியர் சோ. சந்திரசேகரம் (-)
30. செல்வநாயகம் மாணிக்கரத்தினம் (69)
31. செல்லர் திரவியம் (53)
32. சுப்பிரால் கோவிந்தசாமி (73)
33. சிவகுரு செல்லத்துரை (85)
34. விஸ்வநாதி விஜயரத்தினம் (40)

குறிப்பு: - இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# அளவெட்டி ஆச்சிரமப் படுகொலை 26.10.1987

அளவெட்டிக் கிராமம் யாழ் மாவட்டத்தில் வலிகாமத்தின் வடக்குப் பகுதியில் தெல்லிப்பளைப் பிரதேச செயலகப் பிரிவினுள் அமைந்துள்ளது. அளவெட்டி அம்பனைப் பகுதியில் அளவெட்டி — மல்லாகம் ப. நோ.கூ.சங்கம் அமைந்துள்ள கட்டடத்திற்கு முன்பா அளவெட்டி இந்து ஆச்சிரமம் அமைந்துள்ளது.

அளவெட்டிப் பிரதேசத்திலுள்ள இந்த இந்து ஆச்சிரமம் இந்து மக்களின் வயோதிபர் மடமாகவும், கடந்த கால வன்செயல்களால் கடும் பாதிப்புற்ற இளஞ்சிறார்கள் கல்வி கற்கும் இடமாகவும் செயற்பட்டுக்கொண்டிருந்தது.

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இருபத்தாறாம் நாள் இந்திய இராணுவத்தினரின் தாக்குதல்கள் ஆரம்பித்ததன் பின்னர் அளவெட்டியில் அமைந்துள்ள இந்து ஆச்சிரமத்தின் மீது இந்திய இராணுவத்தினரின் “முதலை” என்னும் எம்.ஐ. 24 ரக உலங்குவானூர்தியால் நடத்திய றொக்கட் தாக்குதலில் ஆச்சிரமத்திலுள்ள வயோதிபர்கள், சிறார்கள் உட்பட பதினைந்து பேர் உயிரிழந்தனர். பன்னிரண்டு பேர் படுகாயமடைந்தனர்.

**26.10.1987 அன்று அளவெட்டி ஆச்சிரமப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இராசரத்தினம் கோமதி (15)
2. இராசரத்தினம் ஞானகணேசன் (21)
3. குணசீலன் கோணேஸ்வரி (38)
4. பத்மநாதன் செல்வச்சந்திரன் (12)
5. தர்மலிங்கம் சிறிஸ்கந்தராசா (25)
6. துரைசிங்கம் மதி (01)
7. தம்பிராசா சிறீபவன் (12)
8. அமிர்தநாதர் நேசம்மா (50)
9. சின்னத்துரை தங்கலிங்கம் (47)
10. சின்னத்தம்பி தம்பிராசா (56)
11. சின்னத்தம்பி இரத்தினம் (47)
12. சின்னையா இராசரத்தினம் (62)
13. சிவகுருநாதன் சிவபாக்கியநாதன் (41)
14. விஜயரத்தினம் பத்மராணி (33)
15. வினாசித்தம்பி ஜயாத்துரை (80)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# சாவகச்சேரிசந்தைப் படுகொலை 27.10.1987

யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிழக் குத் திசையில் யாழ் நகரையும், வன்னிப் பெருநிலப்பரப்பையும் இணைப்பது தென்மராட்சிப் பிரதேச மாகும். யாழ்-கண்டி பிரதான நெடுஞ்சாலையில் யாழ். நகரத்திலிருந்து ஏறக்குறைய பதினைந்து கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள சாவகச்சேரி நகரமானது, தென்மராட்சி பிரதேசத்தின் பிரதான நகரமாகும். 1987 ஒக்டோபர் இருபத்தேழாம் திகதியன்று கந்தசட்டி சூரன் போர் ஆகையால், நகரத்திலிருந்த ஆலயத்திலிருந்து சூரன் வீதியால் வீதியுலா சென்று கொண்டிருந்த நேரம் மதியம் 12 மணியளவில் வானில் வந்த இந்திய இராணுவத் துக்குச் சொந்தமான இரண்டு எம்.ஐ 24 ரக உலங்குவானூர்திகள் மக்கள் மீது தாக்குதலை மேற்கொண்டன. பீதியடைந்த மக்கள் என்ன செய்வதென்று தெரியாது அங்குமிங் குமாகச் சிதறி ஓடினர். தொடர்ச்சி யாக மக்கள் மீது உலங்குவானூர்தி ஏவிய றொக்கட் குண்டகளால் சந்தைக்கு வந்த அறுபத்தொட்டுப் பொதுமக்கள் உயிரிழந்தார்கள். நூற்றி எழுபத்தைந்து பேர் காய மடைந்தார்கள். இந்து ஆலயத்தில் வீதியுலா சென்ற சூரன் சிலையும் சேதமடைந்தது.

**27.10.1987 அன்று சாவகச் சேரி சந்தைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இளையதம்பி நாகராசா (50)
2. இராசையா திரவியம் மரியாம்பிள்ளை (32)
3. இராசநாயகம் நந்தினி (20)
4. இராசநாயகம் அருந்தவ ராசா (13)
5. இராசா சிறிதரன் (26)
6. இராசதுரை இராசேந்திர போஸ் (18)
7. இராசசிங்கம் மனோ கரன் (38)
8. இராசசிங்கம் கௌரிதாஸ் (20)
9. நாகமுத்து தங்கம்மா (66)
10. நாகமுத்து தவராசா (27)
11. நாகராசா புஸ்பராசா (13)
12. நாகராசா தனலட்சுமி (21)
13. நாகராசா மகேஸ்வரி (41)
14. நாகராசா சண்முகராசா (10)
15. நல்லதம்பி இராசையா (56)
16. கனகு பொன்னு (57)
17. கந்தையா மனோன் மணி (58)
18. கந்தன் தங்கம் (51)
19. கந்தசாமி வைத்தீஸ்வர சர்மா (26)
20. வைத்தீஸ்வரசர்மா கலைச்செல்வன் (02)
21. கந்தசாமி கெந்தீஸ்வரன் (20)
22. கார்த்திகேசு பெனடிக்ற் மத்தியூஸ் (32)
23. கணபதி மயில்வாகனம் (40)
24. பழனியாண்டி கனகரத்தினம் (34)

## சாவகச்சேரிசந்தைப் படுகொலை 27.10.1987

25. பிள்ளையாங்குட்டி துரைச்சாமி (49)
26. பிலிப்பு இராசேந்திரம் (42)
27. வைத்திலிங்கம் மயில்வாகனம் (45)
28. தம்பு ஜெயரத்தினம் (22)
29. தம்பிராசா சந்திரமோகன் (21)
30. மார்க்கண்டு துரைராசா (55)
31. முருகேசு நடராசா (50)
32. முருகேசு சிவசுப்பிரமணியம் (41)
33. ஆனந்தசாமி அருந்தவசிவனேசன் (25)
34. ஆறுமுகம் விஸ்வநாதன் (31)
35. அல்பிரட் நொபேட் லூயிஸ் ஸ்ரிப்ன (29)
36. ஜெயரத்தினம் வீரஜெயபரஞ்சோதி (23)
37. கோவிந்தசாமி மகேந்திரன் (27)
38. பொன்னுத்துரை கமமேஸ்வரி (10)
39. பொன்னுத்துரை தங்கரத்தினம் (56)
40. பொன்னுத்துரை மகேஸ்வரி (49)
41. பொன்னுத்துரை மஞ்சுளாதேவி (28)
42. பொன்னம்பலம் கனகசிங்கம் (41)
43. பொலோறஞ் அரியமலர் இராசசிங்கம் (65)
44. தேசிங்கன் செல்லையா (14)
45. டொனால்ட் நவீன் குண்டேக்ஸ் (20
46. சோமசுந்தரம் சின்னாச்சி (38)
47. செல்லத்துரை தயாபரன் (16)
48. செல்லத்துரை ரெங்கநாதன் (32)
49. வெற்றிவேலு சிவசிறி (18)
50. வேலுப்பிள்ளை குணபாலசிங்கம் (30)
51. வேலுப்பிள்ளை தங்கம்மா (72)
52. வேலுப்பிள்ளை யோகேஸ்வரன் (19)
53. ஞானமுத்து இரஞ்சிதமலர் (63)
54. சுப்பிரமணியம் பரந்தாமன் (12)
55. சுப்பையா பொன்னம்மா (60)
56. சின்னவன் நாகமுத்து (76)
57. சின்னவன் செல்லையன் (45)
58. சின்னராசா அருமைராசா (33)
59. சின்னையா அம்பிகைபாலன் (27)
60. சிதம்பரப்பிள்ளை குமாரசாமி (52)
61. சிவக்கொழுந்து மகேஸ்வரன் (55)
62. சண்முகம் பரராசசிங்கம் (34)
63. வன்னியசிங்கம் பாஸ்கரன் (19)
64. விசுவநாதன் கந்தையா (59)
65. எலியாஸ் சிறாயுதீன் (27)

குறிப்பு: - இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விரபங்களையும் பெறமுடியவில்லை.

# முல்லை. புதுக்குடியிருப்பு கைவேலிப் படுகொலை 16.10.2006

முல்லைத்தீவு மாவட்டம் புதக் குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற் குட்பட்ட புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியிலுள்ள கைவேலி என்னும் கிராமம் மீது 2006 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ஆம் நாள் மாலை 5:15 மணியளவில் சிறீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான நான்கு கிபிர் விமானங்கள் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் ஒரு மாதக் குழந்தை மற்றும் இரு சிறுவர்கள் உட்பட மூவர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் பத்து பொதுமக்கள் காயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர். இவ்வாறு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் தவராசா இந்திரா என்பவர் நான்காம் நாள் சிகிச்சை பலனளிக்காது மருத்துவமனையில் சாவடைந்தார்.

**இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டவர்களது பெயர் விபரம்**

1. யூட்கிறிஸ்ரின் டன்சிபா (01)
2. சிவகுமார் தனுசிகா (14)
3. தவராஜா துசாந்தினி (14)
4. தவராசா இந்திரா (42)

**இச்சம்பவத்தின் போது காயமடைந்தவர்களது பெயர் விபரம்**

1. முருகானந்தன் தியாகராஜா (22)
2. கந்தசாமி நாகேந்திரம் (34)
3. வீரசிங்கம் நிதர்சன் (12)
4. நாகராசா நிரோஜினி (13)
5. புவனச்சந்திரன் புஸ்பலதா (38)
6. பிறேமசிங் சிவாஜினி (32)
7. நாகேந்திரம் சுகந்தினி (29)
8. சர்மிலா (09)
9. மேலும் ஒருவர்

# பெரியமடுப் படுகொலை 25.10.2007

மன்னார் மாந்தை மேற்கில் விவசாயத்தினைப் பிரதான தொழிலாகக் கொண்டு மக்கள் செறிந்து வாழ்கின்ற கிராமங்களில் பெரியமடு கிராமமும் ஒன்றாகும். இடம்பெயர்ந்தோர் குடியிருப்பின் மீது 20.10.2007 அன்று நண்பகல் 12:00 மணியளவில் சிறீலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கர்ப்பிணித் தாய் உட்பட ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் கொல்லப்பட்டும் 09 பேர் காயமடைந்துள்ளனர்.

மாந்தை மேற்குப் பிரசேத செயலர் பிரிவிலிருந்து 2007 ஒகஸ்ட் 25 ஆம் நாள் தொடக்கம் சிங்கள இராணுவத்தின் செல்வீச்சு காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் உள்ள அகதி முகாம்களில் தஞ்சமடைந்து வருகின்றனர். இவ்வாறு இடம்பெயர்ந்து வந்தவர்களில் பெரியமடு 30 வீட்டுத்திட்ட கிராமப் பகுதியில் 23 குடும்பத்தினர் தற்காலிக கொட்டகைகள் அமைத்து வசித்துக் கொண்டிருந்தனர்.

2007 ஒக்ரோபர் 25 ஆம் நாள் நண்பகல் 12:00 மணியளவில் இக் குடியிருப்பு பகுதி மீது மன்னார் தள்ளாடி சிங்கள இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட செல் வீட்டின் முற்றத்தில் வீழ்ந்து வெடித்ததால் வீட்டிற்குள்ளிருந்த நிறைமாதக் கர்ப்பிணியான செல்வநாதன் பரிமளா (வயது 19), அவரின் சகோதி தங்கவேல் கௌசல்யா (வயது 09), இவர்களின் தந்தை சோமசுந்தரம் ஜெயபாலசிங்கம் (வயது 61) ஆகியோர் உடல்சிதறிப் பலியானதுடன் பரிமளா, கௌசல்யா ஆகியோரின் தாயார் ஜெயபாலசிங்கம் திரவியம் (வயது 55) இவரது பேரப்பிள்ளை செல்வநாதன் கோகிலன் (வயது 03), பிரான்சிஸ் சுதர்சன் (வயது 45), இவர்களின் மகள் உமாதேவி (வயது 13), வசந்தன் றெபேக்கா (வயது05), சுப்பையா மோகன்ராஜ் (வயது 29), பா. சுப்பிரமணியம் (வயது 28) ஆகியோர் படுகாயமடைந்து, முழங்காவில், கிளிநொச்சி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இதில் செல்வநாதன் கோகுலன் என்ற மூன்று வயதுக் குழந்தை மிகவும் கவலைக்கிடமான நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதில் குறிப்பாக நிறைமாதக் கர்ப்பிணியான பரிமாளவின் வயிற்றுப்பகுதியை செல்துண்டுகள் வெட்டி சென்றதனால் வயிற்றிலிருந்த இரணைச்சிசுக்களும் வயிற்றிலிருந்து வெளியே வந்திருந்த கோரநிகழ்வும் இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.



# உலகத் தமிழினமே! முழக்கம் இங்காகட்டும் முரசு உனதாகட்டும்

வெளியில் வராத குரல்களாக
விழுங்கப்படுகிறது எம்வாழ்வு.
மருத்துவர்களால் கைவிடப்பட்ட தீராப்பிணியனின்
சிரிப்புப்போலாச்சு எம் இருப்பு.
யாரொடு நோகலாம்?
யார்க்கெடுத் துரைக்கலாம்?
எத்தெய்வம் சபித்தது எம் தலையில்?
தீவொன்றில் தனித்துவிடப்பட்டவர்களாக நாங்கள்.
எவரெம் குரல்களை உலகுக்குச் சொல்வரோ?
எம்மை நோக்கிய வையவிழிகள் எப்போ திறக்கும்?
இருபத்தோராம் நூற்றாண்டுக்கு
தாலிகட்டத் தயாராகிறது உலகம்.
பதினாறாம் நூற்றாண்டிற் படுத்துக்கிடக்கின்றோம் நாம்.
நிரவமுடியாத அகழி.
நினைக்கமுடியாத தொலைவு.
குறுக்குவெட்டாக துண்டிக்கப்பட்டவனே உயிர்க்கும் போது
உலகெங்கும் அடித்துவிரட்டப்பட்ட மலேரியா கூட
ஓடிந்து இங்கேதான் ஒதங்கிக் கொண்டது.
தடிமன் மருந்துக்கே தட்டுப்பாடு.
இங்கு மருத்துவர்கள் கை பிடிப்பது
வைத்தியம் செய்யவல்ல...
வெறும் மன நிறைவுக்கே.
சுக்கும், மிளகும், சுடுநீருமே உயிரைத் தாங்கிக் கொள்கிறது.
எத்தனைக்கென்றுதான் அழுவது?
ஊற்றடைத்துக் கொண்டது விழிக்கிணறு.
உலகமேன் ஊமையானது?
பூமிப்பந்தின் பரப்பெங்கும் தமிழன் இருக்கின்றான்.
எம் குரல்கள் மட்டும் ஏன் கேட்கவில்லை?
உறக்கம் கலைக உலகமே!
இங்கே சேடமிழுத்துக் கிடக்கிறது மனிதப்பிண்டம்.
இதற்காகவும் எவரெனினும் பேசுங்களேன்.
உரிமைக்குக் குரல் கொடுக்கும் ஒரு இனத்துக்கு
இதுதானா கதி?
ஆரோகணித்திருக்கச் சிம்மாசனமா கேட்டோம்?
கால்மடித்திருக்கக் கதிரை தானே கேட்கின்றோம்.
இதற்காகவா இந்தப் பாரச்சிலுவை?
இயக்கர்களாக இவர்களும்...
நாகர்களாக நாங்களும்...
இல்லையெனில்...
அவர்களாக அவர்களும்...
நாங்களாக நாங்களும்...
இதுவுமில்லையெனில்...
ஏதோ ஒரு வழியில்
ஒன்றாயிருந்த வீட்டிற்தானே உரிமை கேட்கின்றோம்.
பாதிவீட்டைத் தந்தாற்போதும்.
மீதி வீடு அவர்களுக்குத்தான்.
இந்தப் பிறிவிடுதலுக்கேன் இத்தனை கொதிப்பு?
மிஞ்சிய சோறுவாங்கிக் கும்பிடு போடுவதற்கு
நாங்கள் இராப்பிச்சைக்காரர்களல்ல.
தாம்பத்தியம் தள்ளாடும் போது
விவாகரத்துத்தான் விமோசனமளிக்கும்.
சமாதானத் தூதர்கள் தோற்றுப்போனபோது
பேச்சுவார்த்தை மேசையின் பூச்சழிந்த பின்னரே
நாங்கள் போருக்கெழுந்தோம்.



இடிக்க வந்தது மாடு.
அடித்தோம்.
மாட்டிக்கு அடித்தல் பாவமென மனுப்போடுபவர்களே!
எங்கள் கூட்டையே குலைத்தது குரங்கு.
குரங்கையேன் நீங்கள் குற்றம் காணவில்லை?
யானை வந்தழிக்கிறது எங்கள் புலவை.
வெடிகொளுத்திப் போடுகின்றறோம்.
மிதிக்கும்போது ஊமையான வாய்கள்
கலைக்கும்போது மட்டும் கண்டிக்கின்றன.
எருமைத்தோல் உடுத்தவனா தமிழன்?
சுரணையற்றுக் கிடப்பதற்கு.
உதைத்த காலுக்கு முத்தமிட்டுக் கிடந்த
ஒரு இனத்தின் ஓரத்தில்
நெருப்புப்பொளியொன்று நீறுபூத்துக் கிடந்தது.
ஆது....பிரபாகரன்.
கோபம் உரசியபோது திக்குச்சி பற்றிக்கொண்டது.
இன்று தீச்சுவாலை முளாசி எரிகிறது.
தர்மயுத்தமென்பதே தமிழீழப்போரானது.
பாச்சல் நடக்கும் போது
பாவ புண்ணியக் கணக்கு கொஞ்சம் கூடும், குறையும்.
அதற்கேன் இத்தனை ஒப்பாரி?
மரங்களைத் தறிக்காதே;
சூழலை மாசு செய்யாதே;
மிருகங்களை வதையாதே;
பூக்களைக் கிள்ளாதே... என்று
குரல்கள் கேட்கின்றனவே.
ஈழத்தமிழனை எரித்து முடிக்காதேயென்று
உலகமுகடையிடிக்கும் குரல்கள் எப்போது எழும்?
அவலக்குரலை எப்போது உலகமறியும்.
எல்லைகளை;
வேலிகளை;
வரம்புகளைக் கடந்து
ஈழத்தமிழரைத்தாங்க நீளும் கரங்கள்
எப்போது கிட்டும்?
அழியும் வரை போராடுவோம் என்பதில் அர்த்தம் கிடையாது.
கிட்டும் வரை எட்டுவோம்.
உயிரெனப்படுவது மானம்.
அதையிழந்து வாழ்வதென்பது சாவுக்குச்சமம்.
பெரும்புயலில் அல்லாடுகிறது எம்போர்ப்படகு.
கரையேறக் கயிறெறியுங்கள்.
உலகத் தமிழினமே!
உன்போர் இது... உனக்கான போரிது.
முழக்கம் இங்காகட்டும்.
முரசு உனதாகட்டும்.
எம்மைக் காசுக்கு யாசிக்கவிடாதே.
வாரிவழங்கு.
தாங்கும் தோள்களிலொன்று உன்தோளுமாகட்டும்.
மூட்டம் போட்ட மேகத்தைக் கலைத்து
உரிமைப் போருக்கு ஊட்டம்கொடு.
வாழ்ந்தான் தமிழனென வரலாறு எழுதப்படும்போது
முன்னுரையிலே உன்பெயர் இருக்கட்டும்.
பரணிக்கு நாயகர்களைப் பாட
உலகெங்கமிருக்கும் புலவர்களே எழுக.
பொய்மைத்திரி அணைந்து போக
உண்மையை வாயால் ஊதுங்கள்.
சத்தியமே ஜெயம்.
சூரியன் யாருக்கும் சேவகம் செய்தவர்
கால்களிற் பூசைகள் செய்யாது.
போரினிலே பிரபாகரன் சேனைகள்
சாவினுக்கஞ்சியே ஓடாது.

**உலைக்களம் – வியாசன்**

# சிறுவர் இல்லங்கள், ஒரு சில முதியோர் இல்லங்கள் Children's homes, a few nursing homes

இலங்கையில் யுத்தம் ஓய்ந்து ஒரு சாகாப்தகாலம் கடந்து விட்டது. ஆனாலும் வடக்கு, கிழக்கில் பல பராமரிப்பு இல்லங்கள் இன்னமும் இயங்கிவருகின்றன. இவை சிறுவர், மூத்தோர், சிறப்புத் தேவையுள்ளோர் இல்லங்கள் என வகைப்படும். இவை அனைத்தும் பொது மக்களின், பொது அமைப்புக்களின் நன்கொடைகளிலேயே தங்கியுள்ளன. தற்போதைய கோவிட்19 காலத்தில் நன்கொடைகள் குறைந்துள்ள இவ்வேளையில் எம்மாலான சிறு உதவிகளையேனும் இவ்வில்லங்களுக்கு வழங்கி இந்த இக்கட்டான காலத்தை கடக்க அனைவரும் உதவவேண்டுகின்றோம்

COVID 19 நோய்கள் பெரும் பரவல் காலம், உங்களை விட்டால் யாரும் இல்லை இவர்களுக்கு...!

“இந்தக் குழந்தைகள் யாருமற்றவர்களல்லர். தமிழன்னையின் புதல்வர்கள். வரலாற்றுப் பெருமை மிக்க சுதந்திரப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்த இளம் விதைகளைப் பயிரிடுகின்றோம். இவை வேர்விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்களாக மாறி ஒருகாலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாகச் சிறப்புற வேண்டும் என்பதே எனது ஆவல்.“



**Amman Women & Child Development Center**
Sagamam Rd, Kolavil 01, Akkaraipattu - Amparai — 4 67 490 4955

**Hermans Girls Home**
Main St., Periyaneelavanai, Kalmurani - Amparai — 97 76 058 5344

**Jesus Lives Girls Home**
Main St., Kalmuanai - Amparai — 01 94 67 492 1161

**Methodist Girls Home**
Wesly School Rd, Kalmuanai - Amparai — 94 67 222 9182

**RKM Sharatha Girls Home**
Girls Vidyalaya Rd, Karaithivu Amparai — 05 94 67 222 3600

**Seephe Divi Child Delelopment Centre**
Kovil Rd, Veeramunai 01, Sammanthurai - Amparai — 94 67 226 1144

**Sri Indasara Child Development Centre**
DK/65, Aralaganvila Rd, Dehiattakandiya - Amparai — 94 27 562 2919

**St. Maryís Boys Home**
Yard Rd, Kalmunai - Amparai — 01 94 71 354 5782

**Swami Vipulanantha Boys Children Development Centre**
Kurukkal Rd, Akkaraipattu 7/2 - Amparai — 94 67 227 7514

**Canaan Harvest Childrenís Home**
No 320/8, Passara Rd, 3rd Lane - Badulla — 94 77 229 2022

**Up Country Children Home**
19/6, Badulupitiya Rd - Badulla — 94 55 222 3335

**Arutpani Girls Home**
Beach Rd, Navakkuda - Batticaloa — 94 77 6849

**Assisi Boys Home**
Main Rd, Kurukulmadam - Batticaloa — 94 65 225 0313

**Benthel Boys Children Home**
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa — 94 77 632 8577

**Benthel Girlís Children Home**
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa — 94 77 632 8577

**Bethel Girls Children Home**
Vipulanada Rd, Valichenai - Batticaloa — 94 77 515 3078

**Eravur Children Care Home**
Meerakerny Rd, Eravur - Batticaloa — 94 77 996 6345

**Good Shepherd Children Home**
Post Office Rd, Valaichenai - Batticaloa — 94 65 225 7400

**Hari Boys Home**
New Kalmuani Rd - Batticaloa — 94 65 222 3653

**Jeevananthan Girls Home**
Main Rd, Pudukuduirippu - Batticaloa — 94 65 365 0438

**Kattankudy Boys Home**
Kattankudy 01 - Batticaloa — 94 65 224 5308

**London Sivan Kovil Girls Home**
Main Rd, Settipalayam - Batticaloa — 94 65 205 6336

**Managayarkarasi Girls Home**
Maruthadi Rd - Batticaloa — 94 65 205 7310

**Manikkavasagar Boys Home**
Palaiyadithona, Santhiveli, Kiran - Batticaloa — 94 77 191 3037

**Methodist Girls Home**
Bar Rd, Kotamunai - Batticaloa — 94 65 222 5402

**Miyani Boys Home**
Miyani nagar, Thannamunai - Batticaloa — 94 77 459 0298

**Miyani Girls Home**
Miyani nagar, Thannamunai - Batticaloa — 94 77 792 6410

**Pariyowan Boys Home**
Trinco Rd, Santhurukondan - Batticaloa — 94 05 222 2524

**Ramakrishana Boys Home**
New Kalmunai Rd, Kalladi - Batticaloa — 94 65 222 2752

**Ramakrirushana Girls Home**
New Kalmunai Rd, Kalladi - Batticaloa — 94 65 222 2752

**Sakthi Girls Home**
Shakthi Home Rd, Kaluwanchikudy - Batticaloa — 94 65 225 0745

**Shakthi Girls Home**
Arasadi Thervu, Kokaticholai - Batticaloa — 94 65 364 2290

**Shanthi Bawan Girls Home**
Ghanasooriyam Sq., Cross Rd - Batticaloa — 94 65 222 2524

**Spaks Girls Home**
Main Rd, Periya Kallaru - Batticaloa — 94 67 222 1875

**Thilahawathiyar Girls.Children Home**
Main St., Kathiraveli, Vaharai - Batticaloa — 94 77 629 8461

**Thilahawathiyar Girls Home**
Batticaloa - Hospital Rd, Palukamam - Batticaloa — 94 65 225 1166

**Thiruniyanasampathar Gurukulam**
Main Rd, Kaluthavalai - Batticaloa — 94 65 225 0277

**Trust Village Womens Development Center**
Savukady Rd, Mayilampavelhi - Batticaloa — 94 76 789 7573

**Vidhyajothi Boys Home**
Central Rd - Batticaloa — 94 77 481 6576

**Vipulanantha Children Home**

Main Rd, Palukamam - Batticaloa 94 65 225 1101
**Vivehanada Children Home**
Rattnam Rd, Valaichenai - Batticaloa 94 65 205 1442
**Yoga Suwami Saiva Girls Children Home**
Main Rd, Siththandi - Batticaloa 94 65 205 0420
**St.Joseph Elders Home**
Trinco Rd- Batticaloa 94 71 851 1951
**Swami Vipulananthar Elder Home**
Government Quaters Rd, Kallady - Batticaloa 94 65 222 6202
**Ozanam Centre**
Sathurukondan - Batticaloa 94 65 365 8636
**Uthayam Association of Visually Handicapped**
Saratha St., Nochchimunai - Batticaloa 94 65 205 0707

**Elim Boys Child Development Center**
Memorial Lane, Manipay - Jaffna 94 77 742 3824
**Elim Girls Child Development Center**
Memorial Lane, Manipay - Jaffna 94 77 406 9962
**Forth Sq Girls Child Development Center**
No 35, Sellar Rd, Nallur - Jaffna 94 77 064 1109
**Hindu Board Boys Child Development Center**
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 990 5304
**Hindu Board Girls Child Development Center**
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 699 2082
**Holy Family Girls Child Development Center**
Mirusuvil South, Mirusuvil - Jaffna 94 77 908 1270
**Karunai Girls Child Development Center**
Palaly Rd, Urumpirai, East - Jaffna 94 77 255 4334
**Karunalayam Annai Krishnabai Girls C. D. C.**
No 131, Palaly Rd, Thirunelveli - Jaffna 94 77 905 4873
**Karunalayam Boys Children Development Center**
Karanthan, Neerveli - Jaffna 94 77 416 1002
**Salvation Army Girls Child Development Center**
Kandy Rd, Kaithady - Jaffna 94 77 976 5696
**SOS Village Child Development Center**
No 219, Nayanmarkaddu, Nallur - Jaffna 94 77 373 3711
**Sri Pramanatha Girls Child Development Center**
Vathiri, Karaveddy, Jaffna - Jaffna 94 76 578 3004
**Thurkkapuram Girl Child Development Center**
Thurkkapuram, Tellippalai - Jaffna 94 21 224 9894
**Valluvar Girlsí Child Development Center**
Vaddukoddai East, Vaddukoddai - Jaffna 94 77 525 9513
**Mother Teresa Elder Home Amithi Illam**
Kondavil - Jaffna 94 21 223 0302
**Sivapoomi Elders Home**
Tholpuram. Chulipuram - Jaffna 94 21 225 0085, 94 21 321 4230
**Sivapoomi School ForChildren with Special Needs**
Intellectuals Disability - Jaffna Kondavil - Jaffna 94 21 224 9894
**Vaalvagham-Home for the Vissually Handicapped**
Sabapathipillai Rd, Chunnakam-Jaffna 94 21 224 0146 , 94 76 828 6331

**Aruvucholai Boys Child Development Center**
Thiruvaiaru West, Thiruvaiaru - Kilinochchi 94 21 228 3313
**Aropanam Boys Child Development Center**
Uruththirapuram - Kilinochchi 94 21 228 5088
**Gandhi Nilaya Chidren Home & Training Centre** - Kilinochchi
D-8,Uruthirapuram 94 21 228 4310, 94 77 208 1947, 94 77 720 1461
**Holy Family Girls Child Development Center**
D-8,Uruthirapuram - Kilinochchi 94 76 685 3115
**Karuna Nilayam Girls Child Development Center**
A9 Rd, Kandy Rd - Kilinochchi 94 21 228 5836
**Mahadeva Saiva Boy Child Development Center**
Puthumurippu - Kilinochchi 94 21 492 3121
**Mahadeva Saiva Girls Child Development Center** (11-18 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3119
**Mahadeva Saiva Girls Child Development Center (6-10 Yrs)**
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3118
**Sencholai Boysí Child Development Center**
Thiruvaiaru, Kilinochchi 94 76 536 8308
**Sencholai Girlí Child Development Center**
Thiruvaiaru - Kilinochchi 94 71 535 4504
**Thangamma Elders Home** -Kilinochchi
Puthukkulam, Kanagarayankulam 024 4931455, 077 449 9619
**Trist Children Home**
Ramanathapuram - Kilinochchi 94 21 206 0694
**Yogar Swamigal Thiruvadi Nilaiyam Home**
Vannerikulam - Kilinochchi 94 76 709 9162
**Association. to Empowerthe Special Needs Children**
Emersion Rd , Karadipokku 94 77 509 4390, 94 77 375 3776
**Killinochchi Special Needs Newtwork**
Malayapuram, Karachi - Kilinochchi 94 77 831 7536

**Annai Girlsí Child Development Center**
Uppukulam - Mannar 94 23 222 2483
**Anpu Sakotharar Boys Child Development Center**
Keeri - Mannar 94 77 534 4427
**Sepamalai Mariyannai Irakathin Girlsí Child Development Center**
Pesalai - Mannar 94 23 205 0095
**Sivanarul Boys Child Development Center**
Thiruketheeswaram - Mannar 94 23 205 0805, 94 77 581 5998
**Sivanarul Girls Children Development Center**
Thiruketheeswaram - Mannar 94 23 2050 804
**Vetijin Nalnampikai Illam Good Faith Home of Victory**
No 43, Convent Rd, Pattah - Mannar 94 23 2222 545

**Saradha Mission Child Development Center**
Kirigalpotta - Matale 94 66 205 1721
**St. Francis Child Development Center**
Vihaara Rd - Matale 94 77 438 4851

**Anpu Boysí Child Development Center**
Muthu Vinayagar Puram, Oddusuddan 94 71 535 4502
**Barathy GirlChild Development Center**
Putharikuda, Mulliyavalai - Mullaitivu 94 77 201 5234
**Ladani Girls Child Development Center**
Silawaththai - Mullaitivu 94 77 422 8853
**Nallayan Girls Child Development Center**
Jaffna Rd, Mankulam - Mullaitivu 94 21 206 1034
**Pari Girlsí Child Development Center**
Mulliyavalai - Mullaitivu 94 21 206 1034
**Iniya Vazhvu Illam**
A Division , Thevipuram - Mullaitivu 94 21 206 1949

**Happy Home Child Development Center**
Wanigasekarapura, Kotagala - Nuwara Eliya 94 51 224 4174
**Maranatha Child Development Center**
Hatton - Nuwara Eliya 94 51 222 2489
**Rainbow Child Development Center**
Drayton Estate, Kotagala - Nuwara Eliya 94 77 532 1680
**Shalom Child Development Center**
Lackam Estate, Maskeliya - Nuwara Eliya 94 52 227 7222

**Annai Saratha Children Home**
Mallihaitheevu, Muthur - Trincomalee 94 26 205 4506
**Anpu Illam**
167, Central Rd - Trincomalee 94 26 222 1214
**Four Square**
707 Anpuvalipuram - Trincomalee 94 26 222 7170
**Grace Girls**
3rd Mile Post, Cholaiyadi, Uppuveli - Trincomalee 94 26 722 3644
**Hasanath Boys**
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135
**Hasanath Girls**
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135
**My Fatherís House Boys Children Homes**
46, Kandasamy Rd - Trincomalee 94 26 222 6861
**Rawlathul Athfal**
PMB Rice Mill, Muthur - Trincomalee 94 77 934 7438
**Rewathe Child Development Center**
5th Post, Kandy Rd - Trincomalee 94 26 224 2328
**Sivayogasamayam Swami Gangadaranatha Children Home**
64 Main St. - Trincomalee 94 26 222 2049
**Sri Sanmuga Boys** 294 inner Harbor Rd - Trincomalee 94 26 567 0234
**Sri Sanmuga Girls** 57, Viddyalaya Rd - Trincomalee 94 26 222 2521
**Thapovanam Boys**
Thirukadaloor - Trincomalee 94 26 222 1469
**Thapovanam Girls** Thirukadaloor - Trincomalee 94 26 222 1469
**Deva Anpu Children Home**
Thiththikulam, Murunkanoor - Vavuniya 94 24 4921 859
**Hindu Anpakam Children Home**
Mannar Rd, Veppankulam - Vavuniya 94 24 222 3683
**Salvatorian Girls Home**
Iluppaikulam, Neriyakulam, Cheddikulam - Vavuniya 94 24 324 4577
**Sri Ahilandeswary Children Home** Kovilkulam - Vavuniya 94 24 222 1685
**Mother Teresa Elder Home** Pampaimadu -Vavuniya 94 24 205 4494
**Sivan Elders Home**
Ellappar Marutham Kulam - Vavuniya 94 24 222 1685, 94 77 656 7827
**Thanagamma Eleders**
No. 1 Puthukulam Rd, Puthukula - Vavuniya 94 76 248 2766

# புலம்பெயர் தமிழர்களின் புத்திசாதுரியத்தை புரிந்து கொண்டாரா இலங்கை ஜனாதிபதி?



புலம் பெயர் தமிழர்களைப் புலிகள் என்றும், புலிகளின் நிழல்கள் என்றும் சிங்கள ஆட்சியாளர்கள் அலட்சியப்படுத்தி வந்தார்கள். குறிப்பாக மகிந்த ராஜபக்ச தலைமையிலான கட்சியினர் இவ்விடயத்தில் கூர்மையாக இருந்தனர்.

ஆனால் நல்லாட்சிக் காலத்தில் புலம்பெயர் தமிழர்களை வெறுக்காமல் அவர்களுடனும் பேச வேண்டும் என்ற உண்மையை ஆட்சியாளர்கள் புரிந்து கொண்டார்கள். ஆனால் பிரதமர் மகிந்த தரப்பினர் அவர்களில் பலரையும், பல அமைப்புகளையும் தடை செய்வதில் அக்கறை காட்டினர் என கட்டுரையாளர் ஞா. ஸ்ரீநேசன் (முன்னாள் நா.உ , மட்டக்களப்பு) தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது கட்டுரையில் மேலும் குறிப்பிடுகையில்,

ஆனால் இவ்வாறு தடை செய்யப்பட்டவர்கள் புலம் பெயர் நாடுகளில் பயந்து பணிந்து கொண்டிருக்காமல் தமது புத்திசாதுரியமான நகர்த்தல்களை பல்வேறு நாடுகளிலும் மக்கள் எழுச்சியுடன் மேற்கொண்டு வந்தனர்.

இதனால் அவர்களது பலம் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைப் பேரவை வரை ஊடுருவியது. இலங்கை ஆட்சியாளர்களுக்கு அவர்கள் வேண்டத்தகாதவர்களாகத் தீண்டத்தகாதவர்களாக இருந்தாலும் மேற்குலக ஜனநாயக நாடுகளில் புலம்பெயர் தமிழர்களின் ஜனநாயக வழியான செயற்பாடுகளுக்கு மதிப்பும், மரியாதையும் கணிசமான அளவு காணப்பட்டது.

இறுதி யுத்தத்தின் போது இனப்படுகொலை நடைபெற்றது என்பதை நோக்கிப் புலம்பெயர் தமிழர்களின் நகர்வுகள் படிப்படியாகப் பலம் சேர்க்கும் விதத்தில் அமைந்து கொண்டிருக்கின்றன. அதற்கான வழிமுறைகளை நோக்கி புத்திசாதுரியமாக அவர்கள் செயற்பட்டுக் கொண்டுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினையைப் புலத்திலுள்ள உறவுகள் போராட்டங்கள் மூலமாக முன்னெடுக்கும் அதேவேளைப் புலம் பெயர் தமிழ் உறவுகள் அதற்கான சர்வதேச முன்னெடுப்புகளை மனிதவுரிமை மீறல் என்ற வகையிலும் இனப்படுகொலை என்ற வகையிலும் நகர்த்தல்களைச் செய்து வருகின்றனர்.

இந்த தாற்பரியத்தை தற்போது விடாக்கண்டர் கொடாக்கண்டர்களாக இருந்த இலங்கை ஆட்சியாளர்கள் உணரத் தலைப்பட்டுள்ளனர். இந்த நாட்டில் இடம் பெற்ற இனப்படுகொலைகளால் புலம் பெயர்ந்து பல நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்த தமிழ் மக்கள் மேற்குலக அரசியல்களின் பங்காளர்களாகவும் மாறியுள்ளனர்.

நோர்வே, கனடா, பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் பிரதான அரசியல் கட்சிகளுடன் பலமான தொடர்புகளை ஏற்படுத்தி கௌரவமாக வாழுவதுடன் மட்டுமல்லாமல், புத்திசாதுரியமான அரசியலையும் செய்து வருகின்றனர்.

நோர்வே, கனடா போன்ற நாடுகளில் ஈழத்தமிழர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் உள்ளனர். அமெரிக்க ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஈழத் தமிழர் உள்ளார். இவ்வாறாகச் சொந்த நாட்டில் இல்லாத உரிமை சுதந்திரம் சமத்துவத்தை மேற்குலக நாடுகள் தமிழர்க்கு வழங்கியுள்ளன.

எனவே மேற்குலகில் தமிழர்கள் பல்வேறு துறைகளில் தடம் பதித்து வருகின்றனர். தமிழ் புத்திஜீவிகளை இலங்கை அரசு ஒதுக்கியது ஓரங்கட்டியது. இன வன்முறைகளால் அவர்களை அழிக்கவும் வாய்ப்பளித்தது.

இதனால் இந்த நாட்டில் வாழ முடியாத தமிழர்கள் மேற்குலகில் இடம் பெயர்ந்து அந்த நாடுகளில் பக்கபலமாக இருந்து பல்வேறு துறைகளையும் வளர்ப்பதில் பங்களிப்புச் செய்கின்றனர்.

தமிழர்கள் என்பதற்காக அடிப்படைவாதத்தால் உதறித் தள்ளப்பட்டவர்கள் இன்று உலகநாடுகளில் ஈழத்தமிழர்களின் நீதி நியாயங்களைத் தேடும் சக்திகளாகவும் மூளை வளங்களாகவும் மாறியுள்ளனர்.

இனவாதத்தால் உதறப்பட்டவர்கள் தமது இனத்தைப் பாதுகாக்கும் சக்திகளாக மாறியுள்ளனர். நாட்டை வளர்க்க வேண்டிய மூளை வளங்களை எதிர் சக்திகளாக மாற்றிய சிங்கள ஆட்சியாளர்கள் 73 ஆண்டுகளுக்குப் பின்னராவது திருந்துவார்களா? இல்லை தொடர்ந்தும் பிற்போக்குவாதிகளாக இருக்கப்போகின்றார்களா? என்பதே எமது முனைப்பான பட்டறிவுக் கேள்வியாகும்.

பேரினவாதம் நாட்டை ஆக்கப்பாதையில் கொண்டு செல்லவில்லை அழிவுப்பாதைக்குக் கொண்டு சேர்த்துள்ளது என்பதே உண்மையாகும். இதனைச் சிங்கள ஆட்சியாளர்கள் உணர்ந்துதான் ஆக வேண்டும்.

இல்லையென்றால் அது உணர்தப்பட்டேயாகும் என்பதே உலக நியதியாகும். யூக்கோஸ்லாவியா, சூடான், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் இந்த உண்மை உணர்த்தப்பட்டுள்ளது என்பது பட்டறிவுப் பகிர்வாகும்.

நாட்டை ஆக்கப்பாதையில் கொண்டு செல்ல வேண்டுமாயின் தமிழர்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு என்பது காலத்தின் கட்டாய தேவையாகும்.இதன் மூலமாகப் புலம் பெயர்ந்த புத்திஜீவிகளின் ஆற்றல் அர்ப்பணிப்பு நிபுணத்துவம் செல்வம் போன்றவற்றை நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தலாம்.

இல்லையென்றால் நாடு மேலும் குட்டிச்சுவராவதை எவராலும் தடுக்க முடியாது. அத்துடன் சீனா, அமெரிக்கா, இந்தியா, யப்பான் போன்ற நாடுகளின் போட்டிக்களமாகவும் இலங்கை மாறுவதைத் தவிர்க்க முடியாது. இதற்கு சீனாவால் கடலில் உருவாக்கப்பட்ட போட்சிற்றி அம்பாந்தோட்டைத் துறைமுகம் முக்கியமான எடுத்துக்காட்டுகளாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நன்றி: தமிழ்வின்










# மனித குலம் அழியுமென எதிர்பாத்தும் நடக்காத வரலாற்று நிகழ்வுள்



மனித குலம் அழியுமென எதிர்பார்த்தும் நடக்காத நிகழ்வுகள்

1960-களின் பிற்பகுதியில் மனித குலத்தின் விதியை எழுதும் ஒரு முடிவை எடுக்க வேண்டிய நிலையில் அமெரிக்காவின் நாசா அமைப்பைச் சேர்ந்த விஞ் ஞானிகள் இருந்தார்கள். அப்போலோ 11 விண்கலத்தில் நிலாவுக்குச் சென்ற மூன்று விஞ்ஞானிகளைக் கொண்ட பேழை பசிபிக் கடலில் மிதந்து கொண்டிருந்தது. அவர்களுக்கு உள்ளே இருப்பது அசவுகரியாக இருந்தது. அவர்களை மீட்டு தேசிய ஹீரோக்களாக அறிவிக்க வேண்டும் என்ற முடிவை நாசா அதிகாரிகள் எடுத்தனர். ஆனால் இன்னொரு பக்கம், நிலாவில் இருந்து மனிதர்களைக் கொல்லும் வேற்றுலக நுண்ணுயிரிகள் ஏதும் பூமிக்கு வந்துவிடுவதற்கும் சாத்தியம் இருந்தது.

அதற்கு சில தசாப்தங்களுக்கு முன்பு விஞ்ஞானிகள், ராணுவ அதிகாரிகள் போன்றோரைக் கொண்ட குழுவுக்கு இதேபோன்ற ஒரு நிலை ஏற்பட்டது. முதல் அணுகுண்டு சோதனை நடத்தப்படுவதற்கு முன்பு, அது உலகத்தையே அழித்துவிட்டால் என்ன செய்வது என்ற குழபபம் ஏற்பட்டிருந்தது. வளிமண்டலம் முற்றிலுமாக அழிந்து உயிர்கள் வாழமுடியாத சூழல் ஏற்படக்கூடும் என்று கருதப்பட்டது.

இப்படி, கடந்த நூற்றாண்டின் சில தருணங்களில், உலகத்தின் தலைவிதியையே சிலர் அடங்கிய குழுக்கள் தங்களது கைகளில் வைத்திருந்தன. சிறிய அளவு சாத்தியமே என்றாலும், ஒட்டுமொத்தமாக பூமியை அழித்துவிடும் அபாயங்கள் அவர்களின் முடிவுகளில் இருந்தன. அது அவர்களையும் சேர்த்து ஒட்டுமொத்தமாக எல்லாவற்றின் முடிவாகவும் இருந்திருக்கும்.

அப்போலோ 11



ஆயினும் அபாயங்களைப் பொருள்படுத்தாமல், அந்த முடிவுகளை அவர்கள் எடுத்தது ஏன்? அதுபோன்று நாம் இப்போது என்ன விதமான ஆபத்துகளையும் நெருக்கடிகளையும் சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

அந்தச் சூழலைப் பற்றி அவர்கள் இப்போது என்ன சொல்வார்கள்?

20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் விண்கலன்களையும் மனிதர்களையும் விண்வெளிக்கு அனுப்பத் திட்டமிட்டபோது விண்வெளிக் குப்பைகள் உருவாகும் ஆபத்து ஏற்பட்டது.

முதலாவது ஆபத்து, பூமியில் உள்ள நுண்ணுயிரிகள் விண்வெளிக்குச் சென்று, அங்கு ஒருவேளை வேற்றுலக உயிர்கள் இருந்தால் அவற்றை அழித்துவிடக்கூடிய ஆபத்து இருந்தது. அதனால் விண்கலன்கள் அனைத்தும் முற்றிலுமாக கிருமி நீக்கப்பட்டிருக்க வேண்டும். இப்போது இருப்பதைப் போன்றே விண்வெளிப் போட்டி உச்சத்தில் இருந்த காலகட்டத்திலும் இந்த அச்சம் அதிகமாக இருந்தது.

இரண்டாவது கவலை முதலாவதற்கு நேர் எதிரானது. அதாவது விண்வெளிக்குச் சென்றுவிட்டு பூமிக்குத் திரும்பும் வீரர்கள், விண்கலன்கள், ராக்கெட்டுகள் போன்றவை பூமியில் உள்ள ஆக்சிஜன் அனைத்தையும் உட்கொள்ளும் வகையிலான நுண்ணுயிர்களைக் கொண்டு வந்துவிட்டால் என்ன செய்வது என்பதுதான் அந்தக் கவலை.

நிலாவுக்கு அப்போலோ விண்வெளித் திட்டத்தைத் தொடங்கியபோது, இந்த இரண்டாவது கவலைதான் நாசாவுக்கு அதிகமாக இருந்தது. ஆபத்தான ஏதேனும் உயிரினத்தை விண்வெளி வீரர்கள் பூமிக்கு கொண்டு வந்துவிட டால் என்னவாகும் என விஞ்ஞானிகள் அஞ்சினர்.

ஆயினும் பெரும்பாலானவர்கள் நிலாவில் எந்தவகையான உயிர்களும் வாழ்வதற்கு வாய்ப்பில்லை என உறுதியாக நம்பினர். அதனால் அங்கிருந்து பூமிக்கு நுண்ணுயிர்கள் வருவது என்பது சாத்தியக் குறைவான ஒன்றுதான். ”நிலாவில் இருந்து பூமிக்கு நுண்ணுயிர்கள் வருவதற்கு 99 சதவிகிதம் வாய்ப்பில்லை” என்று அப்போதிருந்த செல்வாக்கு மிக்க ஒரு விஞ்ஞானி உறுதியாகக் கூறியிருக்கிறார்.

இருப்பினும் விண்வெளியில் இருந்து திரும்பி வருவோரை தனிமைப்படுத்தும் கடுமையான நடவடிக்கைகளை எடுத்தது. அப்போது சில ஆட்சேபங்களும் இருந்தன. ஒருவேளை விண்வெளி வீரர்களுக்கு ஏதேனும் பாதிப்பு இருந்தால் நாட்டு எல்லைக்குள் நுழைய அவர்களுக்கு அனுமதி மறுப்பதற்கும் தங்களுக்கு அதிகாரம் உண்டு என சுகாதாரத் துறை அதிகாரிகள் வாதிட்டனர்.
அப்போலோ

நாடாளுமன்றத்தில் விவாதம் நடந்தது. அதன் பிறகு அதிகப் பொருள் செலவில் கப்பலில்



விண்வெளி வீரர்களைத் தனிமைப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. நிலாவுக்குச் சென்றுவரும் அனைவரும் மூன்று வாரங்களுக்குத் தனிமையில் இருந்த பிறகே குடம்பத் தினரையும் உறவினர்களையும் சந்திக்க முடியும் அல்லது அதிபருடன் கைகுலுக்க முடியும் என்ற விதிமுறைக்கும் நாசா ஒப்புக் கொண்டது.

ஆனால் அந்த முடிவிலும் உண்மையில் செயல்படுத்தப்பட்ட நடவடிக்கையிலும் பெரிய அளவு இடைவெளி இருந்தது. கப்பலுக்குச் செல்லும்வரை நிலாவில் இருந்து திரும்பி வந்த அதே விண்கலத்துக்குள்ளேயே வீரர்கள் இருக்க வேண்டும் என்பதுதான் வகுக்கப்பட்ட விதிமுறை. ஆனால், அதிக சூடான அந்த குறுகிய இடத்துக்குள் நீண்ட நேரம் இருந்தால், வீரர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்ற கவலை எழுந்ததால், அதன் கதவை நீரில் மிதக்கும்போதே திறக்க நாசா விஞ்ஞானிகள் முடிவு செய்தனர். அதனால் கப்பலுக்குச் சென்று தனிமைப்படுத்தப்படுவதற்கு முன்பே பேழையின் கதவு திறக்கப்பட்டு, வீரர்கள் வெளிப்பட்டனர். அதன்பிறகு ஹெலிகாப்டர் மூலம் கப்பலுக்குச் சென்றுவிட்டனர்.

அப்படிக் கதவைத் திறந்தபோதும், நல்ல வேளையாக அப்போலோ 11 விண்கலத்தின் மூலம் எந்தவகையான வேற்றுலக உயிர்களும் பூமிக்குள் நுழைந்துவிடவில்லை. ஒருவேளை அப்படி ஏதேனும் நுழைந்திருந்தால், ஒரு குறுகிய கால அசவுகரியத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் பூமிக்கும் மனித குலத்துக்கும் நிரந்தரமாக பேரபாயத்தை ஏற்படுத்தியதாக அந்த முடிவு இருந்திருக்கும்.

## பேரழிவு அணுகுண்டு சோதனை

அதற்கு இருபத்து நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, அமெரிக்க அரசின் மூத்த அதிகாரிகளுக்கு இதேபோன்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருந்தது. 1945-ஆம் ஆண்டில் மன்ஹாட்டம் திட்டம் எனப்படும் அணுஆயுதத் திட்டத்தின் மூலமாக ட்ரினிட்டி எனப்படும் உலகின் முதலாவது அணுகுண்டு சோதனை நடந்த நேரம் அது.

அணுக்கருப் பிளவு மூலம் வெளிப்படும் வெப்ப ஆற்றல் கணக்கிட முடியாத அளவுக்கு அதிகமாக இருக்க வாய்ப்புண்டு என விஞ்ஞானிகளுக்குத் தோன்றியது. அந்த வெடிப்பானது பூமியின் வளிமண்டலத்தைப் பற்றி எரியச் செய்து, கடல்களை எரித்து, பூமியின் பெரும்பாலான உயிர்களை அழித்துவிடும் வாய்ப்புள்ளதாகக் கருதப்பட்டது.

அது பெரும்பாலும் சாத்தியமில்லாதது என அடுத்தடுத்த ஆய்வுகள் கூறின. ஆயினும் அணுகுண்டு சோதனை நடக்கும் நாள்வரை தங்களது கணக்கீடுகளை விஞ்ஞானிகள் தொடர்ந்து சரிபார்த்துக் கொண்டே இருந்தனர். இறுதியில் அணுகுண்டை வெடிக்கச் செய்யலாம் என முடிவு செய்தனர்.

அணுகுண்டு வெடித்தபோது, அது பேரழிவை ஏற்படுத்தப்போகிறது என்று பலர் கருதினர். அவர்களில் ஒருவர் ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தின் தலைவர். அவரது தொடக்ககால பிரமிப்பு, அச்சமாக உருவெடுத்திருந்தது.

”வெடிகுண்டு வேலை செய்யும் என்று அவர் நம்பவில்லை. பேரழிவை ஏற்படுத்தியுள்ளதாகக் கருதினார். “உலகின் முடிவு“ என்று குறிப்பிட்டார்” என அவரது பேத்தி ஜென்னட் கோனன்ட் வாஷிங்டன் போஸ்ட்டில் தெரிவித்திருந்தார்.

அணுகுண்டு





அப்போலோ

**அழியும் அபாயம் கொண்ட உலகம்**

21-ஆம் நூற்றாண்டின் அறிவார்ந்த சூழலில் இருந்து பார்க்கும்போது அவர்கள் எடுத்த முடிவு நேரத்துக்கு ஏற்றது எனக் கூறிவிடுவது எளிது. இப்போது சூரிய மண்டலத்தைப் பற்றிய அறிவும் விண்வெளி மாசுபாடு பற்றிய கூடுதல் புரிதலும் இருக்கிறது. மேலும் உலகப் போர் நடந்தும் வெகு காலமாகிவிட்டது. இப்போது அப்படியொரு ஆபத்தான முடிவை யாரும் எடுப்பார்களா?

நிச்சயமாக இல்லை. தற்செயலாகவோ அல்லது வேறுவிதமாகவோ, பேரழிவுக்கான சாத்தியம் ஏதாவது இருப்பதாகக் கருதினால், அது முன்பு இருந்ததை விட இப்போது அதிகமாகி இருக்கிறது என்பதுதான் உண்மை.

வேற்றுலக உயிர்கள் பூமியை அழிப்பது என்பது பெரிய ஆபத்து என்று சொல்ல முடியாது. இருப்பினும் அதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. நமது பூமி பாதுகாப்புக் கொள்கைகள், வேற்றுலக உயிர்கள் பூமியைத் தாக்காத அளவுக்கு கவனமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பது முக்கியமான கேள்வி. விண்வெளிக்கோ, நிலாவுக்கோ சென்றுவரும் தனியார் நிறுவனங்கள் இந்த நடைமுறைகளை எப்படி கையாளுகின்றன என்பதும் சந்தேகத்துக்கு உரியது.

அதைவிடவும் மிகவும் கவலைக்குரியது அணுஆயுதங்களால் ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல். வளிமண்டலம் பற்றி எரிவது சாத்தியமில்லாததாக இருக்கலாம். ஆனால் அணுஆயுதப் போரும் அதனால் ஏற்படும் பருவநிலை மாற்றமும் சாத்தியமில்லாதவை என்று கூற முடியாது.

**அப்போலோ**

இரண்டாம் உலகப் போரின்போது அணு ஆயுதங்கள் சக்திவாய்ந்தவையாகவும், அதிக எண்ணிக்கையிலும் இல்லை. ஆனால் இப்போது பல நாடுகளிடம் அணு ஆயுதங்கள் ஏராளமான அளவில் இருக்கின்றன. ஆற்றலும் அதிகம்.

பேராசிரியர் ஆர்ட், இருபதாம் நூற்றாண்டிலேயே மனித குலம் அழிந்துபோவதற்கான வாய்ப்பு ஒரு சதவிகிதம் என மதிப்பிட்டிருந்தார். ஆனால் இப்போது அது அதிகரித்திருப்பதாக அவர் நம்புகிறார். கடந்த சில தசாப்தங்களில் மனித குலத்தை அழிக்கும் வாய்ப்புகள் பெருகியிருப்பதாக அவர் வாதிடுகிறார்.

பயங்கரவாதம் தொடர்பான ஒரு ஆபத்து தொடர்பான செய்தி, அரசியல்வாதிகளின் நடவடிக்கைகள், தொழில்நுட்பங்கள் போன்றவை செய்திகளில் இடம்பிடிக்கின்றன. ஆனால், அசாதாரண ஆபத்துகள் பற்றிய செய்திகள் வருவதில்லை. உண்மையில் அனுபவங்கள் மூலமாக அதைக் கற்றுக் கொள்வதும் சாத்தியமில்லைதான். ஆனால், அப்படியொன்று நடந்துவிட்டால், அவ்வளவுதான். ஆட்டம் முடிந்துவிடும்.

**ட்ரினிட்டி**



ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் தத்துவப் பேராசிரியர் டோபி ஆர்ட், ட்ரினிட்டி அணுகுண்டு சோதனை நடத்தப்பட்ட அந்த குறிப்பிட்ட நேரத்தை மனித குலத்தின் புதிய சகாப்தத்தின் தொடக்கம் என்று வரையறுத்தார்.

"திடீரென்று நாம் அதிக ஆற்றலை வெளியேற்றுகிறோம். பூமியின் முழு வரலாற்றிலும் இல்லாத வெப்பநிலையை உருவாக்குகிறோம்" என்று ஆர்ட் தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மன்ஹாட்டன் திட்டத்தின் விஞ்ஞானிகளின் கணக்கீடுகள் மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்படவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். மேலும் அதிபர் உள்ளிட்ட எந்தவொரு மக்கள் பிரதிநிதியிடமும் இப்படியொரு ஆபத்து பற்றி கூறப்பட்டதற்கான எந்த ஆதாரமும் இல்லை. விஞ்ஞானிகளும் ராணுவத் தலைவர்களும் தாங்களாகவே முடிவெடுத்து சோதனையை முன்னெடுத்து நடத்திவிட்டனர்.

அணுஆயுதங்களைப் போலவே, தீங்கான செயற்கை நுண்ணறிவு, கார்பன் வெளியீடு போன்றவற்றுடன் கொடிய வைரஸ்களும் மிக வேகமாக வளர்ந்திருக்கின்றன.

**"அசாதாரண துயரங்கள்"**

இத்தகைய பேரழிவுக்கான அபாயங்களுக்கு அவற்றுக்குரிய முக்கியத்துவம் அளிக்க நாம் ஏன் தவறுகிறோம்? டியூக் பல்கலைக்கழகத்தின் ஜோனாதன் வீனர் இதுபற்றி விவரிக்கிறார். பேரழிவு அபாயங்களை மக்கள் "அசாதாரணமானவை" என்று மக்கள் தவறாக புரிந்து கொள்கிறார்கள் என்கிறார் அவர்.

இதுபற்றிக் கேள்விப் பட்டிருக்கலாம். அதாவது சுயநல மனிதர்கள் தங்களது விருப்பத்துக்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது, அனைவருக்கும் அதனால் பாதிப்பு ஏற்படுகிறது. காடழிப்பு, பருவநிலை மாற்றம், அதிக மீன்பிடிப்பு போன்றவை இதில் குறிப்பிடப்படுகின்றன.

ஆனால் உண்மையில் "அசாதாரண துயரங்கள்" வேறுபட்டது. மக்கள் இதைத் தவறாகப் புரிந்து கொள்வது ஏன் என்று வீனர் விளக்குகிறார்.

அரிய பேரழிவுகள் பற்றிய தகவல்கள் இல்லாதது முக்கியமான காரணம். ஒருபோதும் நடக்காத நிகழ்வுகளை விட சமீபத்திய முக்கியமான நிகழ்வுகளை மனதில் கொண்டு வருவது எளிதாகிவிடுகிறது. கடந்த காலத்தைப் பற்றிய நினைவுகளின் தொகுப்புடன் மூளை எதிர்காலத்தை உருவாக்க முனைகிறது.

மிக அரிதான பேரழிவுகளை நாம் தவறாகப் புரிந்துகொள்வதற்கான மற்றொரு காரணம் தனிநபர் சோகத்தைப் பற்றிய கவலைகளுடன் ஒப்பிடும்போது, ஒட்டுமொத்தப் பேரழிவு குறித்த அக்கறை குறைகிறது என்பது.

மற்றொரு காரணம் பொறுப்பின்மை. உங்களது செயலால் உலகம் அழிந்துபோனால், அதற்காக உங்களை யாரும் கேட்க முடியாது. வழக்குத் தொடுக்கவும் இயலாது.

ஆனால் கவலைக்குரிய அம்சம் என்னவென்றால், ஒருவருடைய முடிவால் மட்டுமல்லாமல், தற்செயலாகவும் இப்படிப்பட்ட பேரழிவுகள் நடந்துவிடலாம் என்பதுதான்.

அப்போலோ 11 அதிகாரிகள் மற்றும் மன்ஹாட்டன் விஞ்ஞானிகள் அப்படி எதையும் செய்யவில்லை. எதிர்காலத்திலும் ஒரு நாள், மனித குலத்தின் தலைவிதியை முடிவு செய்யும் முடிவை எடுக்கும் இடத்தில் யாராவது இருக்கலாம். அவர்களும் நல்ல முடிவை எடுக்க வேண்டும்.

நன்றி - பிபிசி தமிழ்

# சேகுவேரா பற்றிய வரலாற்றுக் குறிப்புகள்



★ 1967 ஒக்ரோபர் 09 ஆம் திகதி லாகியூறா என்னும் இடத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கைதியாக வைக்கப்பட்டிருந்தா் சேகுவேரா சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது சடலம் அங்கிருந்து அதிகதூரத்தில் இருந்த இராணுவத் தளம் ஒன்றுக்கு ஹெலி மூலம் கொண்டு செல்லப்பட்டது.

★ கொல்லப்படுவதற்கு முன்னர் சேகுவேரா கடைசியாகக் கூறிய வார்த்தைகள் பொலீவிய இராணுவத்தின் எட்டாவது படைப்பிரிவின் உளவுத்துறை அதிகாரியான கேணல் ஆர்னல்டோ தமது உத்தியோக பூர்வ அறிக்கையில் வெளியிட்டார். அது பின்வருமாறு காணப்பட்டது:

"நீ என்னைச் சுட போகிறாய் என்பது எனக்குத் தெரியும். இதிலிருந்து என்னால் தப்பமுடியாது. இந்தத் தோல்வி புரட்சியின் முடிவு அல்ல; அது தொடர்ந்த எங்கும் எதிரொலித்துக்கொண்டே இருக்கும் என்று பிடலிடம் சொல்லுங்கள். மறுமணம் செய்துகொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்து பிள்ளைகளின் படிப்பை கவனிக்குமாறு அலெஸ்டாவிடம் (சேகுவேரா வின் மனைவி) கூறுங்கள்"

★ 1928 ஜூன் 14 ஆம் திகதி ஆர்ஜென்ரினாவில்லுள்ள றொசாரியோ நகரில் சேகுவேரா பிறந்தார் அவரது இயற்பெயர் ஏர்னெஸ்ரோ குவேரா. ஆனால், சிறு வயதில் அவரை எல்லோரும் அன்பாக "சே" என்று அழைத்தார்கள். அன்பாக அழைக்கப்பட்ட "சே" என்ற பெயர் பிற்காலத்தில் உலகசரித்திரத்தில் இடம் பெற்றவிட்டது.

★ 1946-1953 ஆம் ஆண்டு காலகட்டத்தில் புவனர்ஸ் அயர்ஸ் தேசியப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ மாணவனாக கல்வி கற்ற சேகுவேரா, 1953 ஆம் ஆண்டு ஒரு சத்திரசிகிச்சை நிபுணனாகவும், தொழுநோய் சிகிச்சை நிபுணனாகவும் மருத்துவ கல்லூரியில் இருந்து வெளியேறினார்.

★ கௌதமாலாவின் ஜனாதிபதி அபென்சின் ஆட்சியைக் காப்பாற்றுவதற்காக நடந்த கிளர்ச்சியில் சேகுவேரா பங்கு கொண்டார். தோல்வியில் முடிந்த அந்தக் கிளர்ச்சிக்குப் பின் மெக்சிக்கோ திரும்பிய அவர், அங்குள்ள இருதய மருத்துவ மனை ஒன்றில் பணியாற்றினார். அங்குதான் கெரில்லாத் தலைவருமான பிடல் கஸ்ரோவை முதன் முறையாக "சே" சந்தித்தார். இந்தச் சந்திப்பே லத்தீன் அமெரிக்க நாடுகளில் உருவான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போராட்டங்களுக்கு வித்தாக அமைந்தது.

★ 1956 ஆம் ஆண்டு மெக்சிக்கோவின் டுக்ஸ்வான் துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட பிடல் கஸ்ரோ தலைமையிலான 81 பேர் கொண்ட கெரில்லாக் குழுவில் ஒருவராக சேகுவேராவும் இடம் பெற்றார். அந்தப் புரட்சிக் குழுவின் தலைவர் பிடல் கஸ்ரோவுக்கு அடுத்த நிலையில் அவரது சகோதரர் ராவுல் கஸ்ரோவும் மூன்றாவது நிலையில் சேகுவேராவும் இருந்தனர்.

★ கியூபாவில் இருந்து புரட்சிகர கெரில்லா யுத்தத்தை லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு விரிவுபடுத்திய சேகுவேரா, 1966 ஆம் ஆண்டில் தமது அணியினருடன் பொலீவியாவின் தென் கிழக்குப் பகுதியூடாக அந்நாட்டினுள் நுழைந்து, பொலீவிய இராணுவத்திற்கு எதிராக துணிகர தாக்குதல்களை நடாத்தி வந்தார்.

★ 1967 ஒக்ரோபர் 07 ஆம் திகதி உருளைக்கிழங்கு பயிரிடும் விவசாயி ஒருவனால் காட்டிக் கொடுக்கப்பட்டு, சேகுவேராவும் அவரது சகாக்கள் 17 பேரும் சுரங்கப்பகுதி ஒன்றினுள் வைத்து பொலீவியப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு கடும் சமரின்பின் கைது செய்யப்பட்டனர்.

★ சி.ஐ.ஏ. யின் நா்ப்பந்தத்தின் பேரில் விடுக்கப்பட்ட உத்தரவின்படி சேகுவேராவைக் கொல்வதற்கு சிப்பாய் ஒருவன் லொத்தர் மூலம் தெரிவு செய்யப்பட்டான்.

★ "சே" கொல்லப்பட்ட கிராமமான லாகியூறா மக்கள், அவரை ஒரு புனிதராகப் போற்றுகின்றனர். வறட்சி நிலை தீவிரமடையும்போது "சே" யின் படங்களை தூக்கியவாறு, மழை வேண்டி நடனமாடுகின்றனர். யேசுநாதரைப் போல மயிரடர்ந்த முகத்தைக் கொண்ட இந்தப் புனிதர் ("சே") தமக்காக மழையை அனுப்புவார் என்று அக்கிராம மக்கள் இன்றும் நம்புகின்றனர்.

**முக்கிய அறிவித்தல்**

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின்
நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு
அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள்
அறிவித்தல்களையும்,
மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.
தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.
எமது மின்னஞ்சல் முகவரிக்கு
தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு
வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com


**விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு**
**தொடர்புகளுக்கு**
**437.345.4203**







HAND CAR WASH






புதிய இடத்தில் புதிய பொலிவுடன்
GRAND AUTOMOTIVE INC.
www.grandautomotive.ca

ALL REPAIRS & MANINTENACE ALL KIND OF CARS
உங்கள் வாகனங்களின் சகலவிதமான
திருத்த வேலைகளையும் தரமான முறையில்
திருத்திக்கொள்ள நாங்குகள்

Free Estimates, All Mechanical & Electrical Repairs
Muffler Work, Body Work & Painting
Friendly Services, Quality Workmanship & Guaranteed

We also install car Audio Systems,
Alarm Systems, Auto Glass & Seat Covers
If You are looking for a used Car, let us know
We can find you the best car in Town
Rust Proofing & Undercoating (Save you Body)
GOOD NEWS
Touch-up & Body Work on lease return cars
All kind of Mechanical Work, Call Us



Call: Louis
Tel: 416.757.7891 Dir: 647.831.2709
Email: itouchcarwash43@gmail.com
435A Midwest Road, Unit 5A, Scarborough ON M1P 3A6

HEADED LIGHT RESTORATION
We use only natural quality high-end
products on all our vehicles



BEST QUALITY WORK FOR REASONABLE PRICES!
OUR AIM IS TO SATISFY THE CUSTOMERS


GTA CHIROPRACTIC CENTRE
We are specialized in
• Motor Vehicle Accidents
• Slip & Fall
• WSIB
• Extended Health Care
• Sports Injuries
• Physiotherapy
• Chiropractic
• Orthotics Shoes
• Massage Therapy
• Acupuncture
Health is Wealth
Pathmaraj (Pat) Pathman
Tel: 416-321-0482 Cell: 416-528-5318
Fax: 416-321-0486
GTA Square Mall 5215 Finch Ave, E#206
Scarborough, ON, M1S 0C2
www.gtachiro.ca | Email: gtaphysio@gmail.com


RS
R.S தங்கப் பட்டறை
நவீன டிசைன்களில் நகைகள் செய்துகொள்ளவும்
உங்கள் பழைய நகைகளை மெருகூட்டவும்
எல்லவிதமான திருத்த வேலைகளையும் லேசர்
மூலம் செய்து கொள்ளவும்
குறித்த திகதியில் ஓடர்களை பெற்றுக்கொள்ளவும்
பிறந்த திகதி எண் ராசிக்கேற்ப பொருத்தமான
மாணிக்க கற்களை அவற்றின் இயற்கைத்
தன்மைக்கான சான்றிதழுடன் பெற்றுக்கொள்ளவும்
திருமணத்திற்கு பொன் உருக்குதல் காது குத்துதல்
பல விதமான டிசைன்களில் தாலி செய்து கொள்ளவும்
பழைய நகைகளை மாற்றி
இன்றய காலத்துக்கேற்ப
புதிய வடிவங்களில்
செய்துகொள்ளவும்
தொடர்புகளுக்கு: 416.292.9816 / 416.822.7171
S.மூர்த்தி
Majestic City (Markham & McNicoll)
2900 Markham Rd, Unit A16, Scarborough


FRONTLINE
FCC
COMMUNITY CENTRE
குடிவரவாளர்களுக்கான சேவைகள்
பெண்கள் மற்றும் முதியோர்
நலதிட்டங்கள் கனடிய மனநல அமைப்பு
வருமான வரி பத்திரம் நிரப்புதல்
கனடிய வருமான வரித்துறை
பொதுவான திட்டங்கள்
மாற்றுத்திறனாளிகளுக்கான திட்டங்கள்
வேலைவாய்ப்பு சம்பந்தமான சேவைகள்
முதியவர்கள் சமூக நீரோட்டத்தில்
பங்குபெறுவதற்கான திட்டங்கள்
தன்னார்வத் தொண்டாற்றல்
(416) 840-4425
3031 Markham Rd, Unit 26 & 27
Scarborough ON M1X 1L9
Frontline Community Centre
frontlinecommunitycentre
http://fcccanada.org/


Nickon
Photo & Video
Digital Album
நிக்கொன்
போட்டோ & வீடியோ
டிஜிட்டல் அல்பம்
உங்கள் குடும்ப மற்றும்
சமூக நிகழ்வுகளை நினைவில்
நிறுத்தி, நிழற்படமாக்கிட...
Call: Vijay
416.554.8899
Facebook ID:
Nickon Studio



பேராசிரியர் சி. பத்மநாதன்

# தமிழர்களின் பூர்வீகம் என்பது பெருங்கற்கால பண்பாட்டுடன் தொடர்புடைது

**"இலங்கையில் தமிழர்களின் பூர்வீகம் என்பது பெருங்கற்கால பண்பாட்டுடன் தொடர் புடையது"**
**(நேர்காணல்) – பேராசிரியர் சி.பத்மநாதன்**
**June 28, 2020**

யாழ்ப்பாணம் அராலியை பிறப்பிடமாக கொண்ட பேராசிரியர் சி.பத்மநாதன் இலங்கையின் வரலாற்றுப் பேராசிரியரும் கல்விமானும் ஆவார். இலண்டன் பல்கலைக் கழக வரலாற்றுத்துறை முனைவரான (Ph.D. in South Asian History, University of London) இவர், இலங்கையில் பல்வேறு பல்கலைக்கழகங்களில் பணியாற்றியவர். வரலாறு, சமயம் தொடர்பிலான பல நூல்களை எழுதியவர். இவற்றில் "இலங்கை தமிழ் சாசனங்கள்", "இலங்கைத் தமிழர் வரலாறு", "கிழக்கிலங்கையில் நாகரும் தமிழும்" (கி.மு 250- கி.பி 300), 'The Kingdom of Jaffna', "வன்னியர் யாழ்ப் பாணம்" போன்ற வரலாற்று நூல்கள் குறிப் பிடத்தக்கவை.

அண்மைக் காலமாக இலங்கையில் தமிழர் களின் தொன்மையான இருப்பை, மேம்பட்ட வாழ்வியலை தொல்லியல் சான்றுகளின் ஊடாக வெளிச்சத்துக்கு கொண்டு வரும் வகையில் அரும் பணியாற்றி வரும் பேராசிரியர் அவர்களை "இலக்கு" நேர்காண் கின்றது .

**கேள்வி** – புறச்சான்றுகளின் அடிப்படையில் இலங்கையில் தமிழர்களின் இருப்பு எவ் வளவு காலத்திற்கு முற்பட்டது என உறுதியாக நிறுவ முடியும்? அவ்வாறு கருதக்கூடிய முக்கிய சான்றுகளாக நீங்கள் எவற்றை எடுத்தாள்கின்றீர்கள்?

தமிழர்களின் இருப்பு என்று சொல்வதிலும் பார்க்க தமிழ் மொழி பேசு வோரின் இருப்பு என்று சொல்வது பொருத்தமானது. ஏனென் றால், தமிழ் மொழி பேசுவோரிடையே புராதன காலத்தில் இனக்கலப்பு ஏற்பட்டிருக்கின்றது. மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் இயக்கருக்கும், நாகருக்கும் இடையில் அமைந்த கலப்பினைப் பற்றிப் பேசுகின்றது. "இயக்கரோடு கூடி வலிய ராகி நாகர் நகரெல்லாம் ஆட்சி செய்தனர்" என்று அந்நூல் குறிப்பிடுகின்றது. கால வரையறை பற்றி பேசுமிடத்து தமிழ் மொழி யானது இலங்கையைப் பொறுத்தவரையில் பெருங்கற்கால பண்பாட்டோடு தொடர் புடையது.

அந்தப் பண்பாடு கி.மு 8ஆம் நூற்றாண்டிலே இங்கு பரவத் தொடங்கி விட்டது. அண்மைக் காலத்தில் எமக்குக் கிடைத்த ஆதார பூர் வமான சான்றுகளின் அடிப்படையில் நாகர் களே பெருங்கற்கால பண்பாட்டை இலங்கை யிலே பரப்பினார்கள். நாகர் மூலமாகவே தமிழ் மொழி பரவியது என்றும் கூறலாம்.

தமிழ் மொழியில் எழுதப்பட்ட அரும் பொருட் கள், பண்பாட்டுச் சின்னங்கள் பலவகைப்பட் டவை. அவை அன்றாட வாழ்வில் பயன்படுத் திய அம்மி, குளவி, உரல், ஆட்டுக் கல், எண் ணெய் வடிக்கும் செக்கு முதலானவற்றிலும், வழிபாட்டு சின்னங்களாகிய நாக வடிவங்கள், நாக சிற்பங்கள், சிவலிங்க வடிவம், சைவ சின்னங்களான நந்தி, வாகனங்களான எலி, நாய் ஆகியவற்றிலும் சில விநாயகர், வைர வர், அம்மன் போன்ற சைவ சமய வடிவங் களிலும் காணப்படுகின்றது. இது மட்டுமன்றி வழிபாட்டுத் தலங்களில் அடிமட்ட அத்திவாரங் களிலும்கூட தமிழ் மொழியில் எழுத்துப் பொறித்த நாகரைக் குறிப்பிடும் வசனங்கள் காணப்படுகின்றன.

அதேபோல பௌத்த சமய வழிபாட்டு சின்னங் களாகிய புத்தர் பெருமானுடைய சிற்பங்கள், போதிசத்துவர் வடிவங்கள், புத்தர் பாதம் முதலானவற்றிலும் தமிழ் மொழியில் நாக ரைக் குறிப்பிடும் வசனங்கள் காணப்படுகின் றன.

**கேள்வி** – இலங்கையில் தமிழரின் தொன் மையான இருப்பை எடுத்துக் காட்டும் முக்கிய தொல்லியல் சான்றுகளாக நீங்கள் எவற்றைப் பார்க்கின்றீர்கள்?

தொல்லியல் அடிப்படையிலே தமிழர் பண்பாடு தொடர்பான மிக காலத்தால் முற்பட்ட தொல் பொருள் சின்னங்கள் பெருங்கற்கால பண்பாட் டை சேர்ந்தவை. அண்மைக் காலத்தில் பெருந்தொகையான இடங்களில் நாட்டின் பலபாகங்களிலும் இந்தச் சின்னங்கள் அகழ் வாய்வுகளின் மூலமாக அறியப்பட்டுள்ளன. இவற்றின் ஆய்வுகளைப் பற்றிய விபரங்கள் தொடர்பாக மிக அரிதாகவே அறிக்கைகள் வெளிவந்தன.

பொன்பரிப்பு, மாந்தை, திஸ்ஸமகாரகம, அநுராதபுரம் ஆகிய இடங்களிலேயே தொல் பொருள் திணைக்களத்தின் அனுசரணை யுடன் வெளிநாட்டு ஆய்வாளர்கள் பலர் அகழ்வாய்வுகளை கொண்டு அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

பெருந்தொகையான பெருங்கற்கால பண் பாட்டு சின்னங்கள் இலங்கைத் தமிழர்கள் வாழும் பகுதியில் கிடைக்கின்ற போதிலும். அவை கந்தரோடையைத் தவிர ஏனைய இடங்களில் அகழ்வாய்வு செய்யப்படவில்லை. கந்தரோடையிலும் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் இற்றைக்கு நூறு வருடங் களுக்கு முன்பு Poul E Peirs நடத்திய மேலோட்டமான ஆய்வுகளைப் பற்றி அவர் கட்டுரைகளை எழுதியுள்ளார். 1966இல் தொல்பொருள் திணைக்கள அதிபராக இருந்த கொடக்கும்புர தலைமையில் கந்தரோடையில் மீண்டும் ஒரு அகழாய்வு தொட்டம் தொட் டமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவரும் தனது அறிவுக்கு எட்டியவாறு அங்கு கிடைத்த தொல்பொருட்கள் சிலவற்றைப் பற்றி ஒரு அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

இதில் முக்கியமான விடயம் என்னவெனில், அங்கு அந்நாட்களில் கந்தரோடையில் கண் டெடுக்கப்பட்ட பல பொருட்கள் யாழ்ப்பாணத்து அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அதில் பலவகையான பொருட்கள் உள்ளன. எழுத்துப் பொறித்த கலவோடுகள், மட்பாண்ட துண்டங்கள், வழிபாட்டுச் சின்னங்களாக பயன்படுத்திய சதுர வடிவ கற்கள் ஒன்று அல்லது இரண்டு பயன்பாட்டிலிருந்த கல்லில் குடையப்பட்ட நீர்த்தொட்டி ஒன்று, குளக்கட்டில் பாவனையில் இருந்த கல்லில் குடையப்பட்ட சிறிய கலன்கள் – அவை மருந்துகள் செய்ய பயன்பட்டிருக்கலாம். இவற்றோடு மிகப் பெரு மளவிலான மணிகள் பலவகைப்பட்டவை, அறுத்த சங்குகளின் துண்டங்கள் கண்டறியப் பட்டன. சங்குகள் காணப்படவில்லை. மணி கள் பெருமளவில் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமன்றி பாவனைப் பொருட்களான களி மண்ணில் செய்யப்பட்ட 4 அலகுகளைக் கொண்ட ஒரு அழகான விளக்கு, சில படிமங் களும் அங்கு காணப்படுகின்றன. ஆனால் இவை நெடுங்காலமாக ஒழுங்குபடுத்தப்பட்டு விபரக் குறிப்புக்களோடு வைக்கப்பட்டிருக்க வில்லை.

இப்பொழுது தான் இவற்றை மரப்பெட்டி களிலோ, அலுமாரிகளிலோ வைத்துப் பேணுகிறார்கள். ஆனால் அவற்றைப் பற்றிய விபரக் குறிப்பு ஏடுகள் எதுவும் அங்கில்லை. அங்கு இருக்கின்றவர்களுக்கும் அவற்றிலே இருக்கின்ற எழுத்துக்களை தெரிந்து கொள் கின்ற தகமை காணப்படவில்லை.

தொல்பொருள் திணைக்கள அனுமதி பெற்றே அந்நாட்களில் இவற்றை எம்மால் பார்க்க முடிந்தது. பார்த்து படமெடுப்பதற்கு அந்நிறு வனத்தில் உள்ளவர்கள் தமக்கு அனுமதி வழங்க அதிகாரம் இல்லை என்றே சொல் கிறார்கள்.

அதுமட்டுமல்ல இந்தக் கட்டுப்பாட்டுகளின் காரணமாகவும், அக்கறையின்மையாலும் புலமையாளர்கள், வரலாற்றாசிரியர்கள் இந்த அருங்காட்சியகத்தில் இருக்கின்ற தொல் பொருட்களை ஆராய முற்படவில்லை.

இதற்கிடையில 2011ஆம் ஆண்டு முதலாக யாழ். பல்கலைக் கழகமும், அவர்களுடன் தொல்பொருள் திணைக்களத்தினரும் சில அகழ்வுகளை நடத்தியிருக்கின்றார்கள். இது தொடர்பான எழுத்து வடிவமான அறிக்கைகள் எதுவும் இதுவரை வெளிவரவில்லை. சில பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டிகளில் இங்கு காணப்படும் பொருட்கள் பற்றி மிகச் சுருக்கமான விளக்கத்தை திரான் தெரணி யகல வழங்கியுள்ளார்.

மாந்தையைப் பொறுத்தவரையில் அங்கு கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள் சின்னங் கள் எல்லாம் அநுராதபுரத்திலுள்ள அருங்காட் சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை பார்ப்பது மிகவும் சிரமமானது.

நாங்கள் பேசுகின்ற நாகர் பற்றிய தமிழ் மொழி வளர்ச்சி பற்றிய பண்பாட்டுச் சின்னங் கள் பெரும்பாலும் அகழ்வாய்வுகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்படாதவை. மேலாய்வின் மூலமாக அறியப்படுபவை.

இவற்றிலே தமிழ் பிராமி வடிவங்களில் எழுத் துக்கள் இருப்பதால், அவற்றின் கால எல்லை யை கி.மு மூன்றாம் நூற்றாண்டிற்கும், கி.பி ஐந்தாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட் டவையாக வரையறை செய்து கொள்ள முடி கின்றது. சில எழுத்துக்களைப் பொறுத்த வரையில் வரிவடிவ வளர்ச்சியை எம்மால் வரையறை செய்ய முடிகின்றது.


கிழக்கிலங்கையின் பண்டைத்தமிழர் வழிபாட்டுச் சின்னங்கள்

மட்டக்களப்பிலுள்ள நாவற்குடா, நெடியமடு, பாலாமடு, திருகோணமலையிலுள்ள செம்பி மலை, வவுனியாவிலுள்ள நெடுங்கேணி ஆகியவற்றிலே காலத்தால் மிகவும் பிற்பட்ட ஓரளவு உருமாறிய தமிழ்ப் பிராமி வடிவங்கள் காணப்படுகின்றன. அவை நான்காம், ஐந் தாம் நூற்றாண்டிற்குரியவை.

ஏனையவை அவற்றிற்கு முற்பட்ட காலத்திற் குரியவை. மட்டக்களப்பு வெல்லாவெளி, வந்தாறுமூலை, இலாவாணை, வேரம், வாகரை ஆகிய பகுதிகளிலும் திருகோண மலையில் அகஸ்தியர் ஸ்தாபனம், கோணேசர் கோவில் பகுதியில் காணப்படும் சின்னங்கள் கி.மு. 2ஆம், 3ஆம் நூற்றாண் டிற்கு உரியவை என்பதை எழுத்துகளின் உருவ அடிப்படையில் உறுதி செய்து கொள்ள



மன்னார் கட்டுக்கரை சார்ந்த பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல் சான்றுகளில் சில

முடிகின்றது.

**கேள்வி** -அகழாய்வுகள் மேற்கொள்ளப்படாத நிலையிலும்கூட இலங்கையில் வேறு எந்தப் பகுதியையும்விட கிழக்கில் அதிக பிராமி வடிவங்கள் வெளிப்பட்டு நிற்கின்றன. அதற் கான காரணங்கள் என்ன?

இதுவரை காலமும் தமிழ்ப் பிராமி வடிவங் களை அங்குள்ள எவரும் அறிந்திருக்க வில்லை. தாம் வாழும் சுற்றாடலிலும், காட்டுப் பகுதிகளிலும், வயல் நிலங்களிலும் இருக்கக் கூடிய பண்பாட்டுச் சின்னங்களை அவர்கள் அவதானித்திருந்தும் அவற்றினுடைய பெறு மதியை உணர்ந்து கொள்ள முடியவில்லை. ஏறக்குறைய 10 – 12 ஆண்டுகளுக்கு இடை யில் தான் இதுபற்றிய உணர்வு ஏற்படலா யிற்று.

அங்கு தொழில் புரிகின்ற சில கலாசார உத்தி யோகத்தர்களும், சில நவீன மருத்துவம் கற்ற வைத்தியர்களும், கல்லூரி ஆசிரியர் சிலரும் விநோதமான பொருட்களைக் கண்டு படங் களை எடுத்து அவற்றிலே ஏதோ அதிசயமான விபரங்கள் இருப்பதை உணர்ந்தார்கள். ஆனால் எழுத்துக்களை அவர்களால் புரிய முடியவில்லை.

நாவற்குடாவில் கலாசார உத்தியோத்தகராக இருக்கின்ற எழில்வாணி பத்மகுமார் தான் முதன் முதலாக எம்மைத் தொடர்பு கொண்டு இவற்றைப் பற்றி எமக்கு அறிமுகம் செய்தார். அதன் விளைவாகவே இவற்றின் புகைப்படங் களை பெற்று ஆராய்ந்ததோடு அவை காணப் படும் இடங்களுக்கும் நாங்கள் பிரயாணம் செய்து நேரிலே அவதானித்து அந்தச் சமயங்களில் படங்களை எடுத்தோம்.

அதிக உயர்வான மலைகளிலும், காட்டுப் பகுதிகளிலும் உள்ளவற்றை என்னால் பார்க்க முடியவில்லை. மற்ற எல்லாவற்றையும் நேரி லே சென்று பார்க்க முடிந்தது. அம்பாறை யிலுள்ள சங்கமன்கண்டி போய் அங்குள் ளவற்றை பார்க்க முடிந்தது. இது தற்செய லாகத் தான் கிடைத்தது.

நாங்கள் முதன் முதலாக வெல்லாவெளி, விவேகானந்தபுரம், படலைக்கல் என்னும் இடங்களுக்குச் சென்றோம். எம்முடன் இந்து கலாசார திணைக்களம் மட்டக்களப்பில் நடத்திய சாசனவியல் பயிலரங்கில் பங்கு கொள்வதற்காக இந்தியாவிலிருந்து வருகை தந்த தமிழ்நாடு தொல்லியல் துறை திணைக் கள சிரேஸ்ட சாசனவியலாளர்களான ராஜகோபால், வேதாசலம், சாந்தலிங்கம் முதலானவர்களும் வந்திருந்தார்கள்.

இந்த இடங்களில் காணப்பட்ட கல்வெட்டுக் களே முதலாவதாக எம்மால் கண்டறியப்பட் டது. பானை ஓடுகளிலும், காசுகளிலும் தமிழ் வாசகங்கள், தமிழ் பிராமியில் பொறிக்கப்பட் டிருப்பதை முன்பு சிலர் கண்டு அவற்றைப் பற்றி கட்டுரைகளை எழுதியிருந்தார்கள். ஆனால் கல்லிலே வெட்டப்பட்ட தமிழ்ப் பிராமி வடிவங்களிலான ஒரு கல்வெட்டு என்ற வகையில் இதுதான் முதலாவதாக கண்டுபிடிக் கப்பட்டது. அதிலே இஸ்காவு காலத்து ஆந்திர நாட்டு எழுத்துக்களின் செல்வாக்கு இருப் பதனால், இந்தக் கல்வெட்டு 4ஆம், 5ஆம் நூற்றாண்டிற்கு உரியது என்று நாம் அதை அடையாளப்படுத்தினோம்.

இவை பற்றிய செய்திகள் ஊடகங்கள் வாயி லாக மாத்திரம் சர்வதேச மட்டத்திலும் மிக வேகமாகப் பரவியது. அதன் எதிரொலியாக கிழக்கிலங்கையிலே பெரும்பாலும் மட்டக் களப்பு மாவட்டத்திலே பல்வேறு தரப்பினரிடை யேயும் ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டது. பல் கலைக்கழகம் தான் இதற்கு புறநடையாக இருந்தது.

அதற்கு வெளியில் இருந்தவர்கள் தான் அதிகமாக இவற்றிலே கவனம் கொண்டு தம்முடைய இருப்பிடங்களில், சென்று வழி படுகின்ற ஆலயங்களில், வேறு இடங்களில் காணப்படுகின்ற எழுத்துப் பொறித்த கற்கள், வேறு பொருட்களை எல்லாம் படமெடுத்துக் காட்டத் தொடங்கினர். இதனால் தான் சடுதி யாகவும், மிக வேகமாகவும் விரைவிலே தமிழ் பெயர்கள் பொறித்த மிகப் புராதனமான சின்னங்களை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளிலும், திருகோண மலையிலும் இனங்காண முடிந்தது.

இதிலே சிறப்பம்சம் என்னவென்றால், எழுத் துப் பொறித்த சில தொல்பொருள் சின்னங்கள், பெருங்கற்கால பண்பாட்டிற்குரியனவாகும். கதிரவெளியில் ஒரு கல்மேசை இருப்பதாக முன்பு கூறினார்கள். ஆனால் அதை இப்போது காணவில்லை. குருநாகல் மாவட்டத்தில் பதிய கம்பளை என்னுமிடத்தில் ஒரு பிரமாண் டமான அளவுடைய பெருங்கற்கால பண்பாட் டுக் காலத்திற்குரிய கல்லறை காணப்படுகின் றது.

நான்கு மாதங்களுக்கு முன்பு அதை நான் சென்று பார்த்த போது அதிலே தமிழ்ப் பிராமி வரி வடிவங்களும், ஐந்து தலை நாகம், நாக தந்த உருவங்கள், ஒருதலை நாக வடிவங்கள் எனப் பலவற்றை அவதானிக்க முடிந்தது.

அடுத்து வெல்லாவெளியிலும், வாகரையிலும் ஈமக் கல்லறைகளை சுற்றிய இடங்களில் அடுக்கி வைக்கப்பட்ட கற்களிலும் எழுத்துக் களை, வாசகங்களை கண்டோம். ஒரு இடத்திலே பாம்பு வடிவமும் பொறிக்கப்பட் டிருந்தது.

இவற்றிற்கு அப்பால் இபன்கட்டுவ என்னுமிடத் தில் பெருந்தொகையான கல்லறைகளை அகழ்வு செய்துள்ளார்கள். கிறிஸ்துவுக்கு முற் பட்ட நூற்றாண்டுகளில் அங்கு ஒரு விசால மான பெருங்கற்கால பண்பாட்டு மக்களின் ஈமக்காடு அமைந்துள்ளது. அங்குள்ள கல்லறைகளின் சுவர்கள் அல்லது கற்பலை களில் தமிழ் வாசகங்கள் பொறிக்கப்பட் டிருப்பதை காண முடிந்தது.

**கேள்வி**-தமிழ் மொழியின் தொன்மை தொடர் பான தமிழ் நாட்டின் தொல்லியல் சான்று களுக்கும் இலங்கையில் காணப்படும் தொல்லியல் சான்றுகளுக் குமிடையேயான பொதுமைத் தன்மைகள்,வேறுபாடுகள் பற்றிக் கூறமுடியுமா?

தமிழர் தொடர்பான பெருங்கற்கால பண்பாடு தமிழகத்திலிருந்து தான் இலங்கையில் பர வியது. மொழி, உற்பத்திமுறை, பயன்படுத் தும் உபகரணங்கள் ஆகியவற்றில் வேறுபாடு இல்லை. எழுத்து முறை தமிழ்நாட்டைப் போல இங்கும் தமிழ் பிராமி எழுத்துக்கள் பொறித்த கலவோடுகள் பெருங்கற்கால பண் பாட்டு சின்னங்களோடு தான் காணப்படுகின் றன.

பிரதானமான வேறுபாடு வழிபாட்டுச் சின்னங் கள், கட்டுமானங்கள் என்பனவற்றைப் பற்றியதாகும். கீழடியில் அகழாய்வு செய்தவர் கள் அங்கு வழிபாட்டுச் சின்னங்கள் இல்லை என்று சொல்கிறார்கள். இலங்கையில், கிழக் கிலங்கையிலும் ஏனைய இடங்களிலும் கண்டெடுக்கப்பட்ட சின்னங்கள் பெரும்பாலும் வழிபாடுகளோடு தொடர்புடையவை. நாக சிற்பங்கள் நாகருடைய வழிபாட்டுடன் தொடர் புடையவை. அதுபோல பெருங்கற்காலத்து கல்லறைகளில் நாகத் தலைகள், திரிசூலம் என்பனவும் இடையிடையே காணப்படுகின் றன.

பௌத்த பள்ளிகளிலும்கூட நாக வடிவங்கள் காணப்படுகின்றன. ஐந்து தலை நாகம் காணப்படுகின்றது. அதேவேளை தூண் நிரைகள் சிலவற்றிலும் சிறிய அளவிலான நாக வடிவங்கள் காணப்படுகின்றன. இங்கு நான்கு வழிபாட்டு முறைகள் பற்றிய தமிழ்ப் பிராமியில் பொறிக்கப்பட்ட பண்பாட்டுச் சின் னங்கள் உள்ளன. நாக வழிபாடு, சைவ சமய வழிபாடு சார்ந்த லிங்கம், நந்தி போன்ற உருவங்கள், பௌத்த சமய வழிபாடு தொடர் பான புத்தர் வடிவங்கள், திருப்பாத வடிவங்கள் போன்றவற்றிலும் அவை காணப்படுகின்றன. அதுபோல முன்பு கூறியது போல சமண சமயம் சம்பந்தமான ஒரு கல்வெட்டு காணப் படுகின்றது.

இரண்டாவது வேறுபாடு கட்டுமானங்களைப் பற்றியதாகும். இலங்கையில் நாகர்கள் தூண் தாங்கு கற்கள் என்று சொல்லக்கூடிய வடிவங் களை பரவலாக பயன்படுத்தியுள்ளார்கள். இவை கற்பிட்டி முதல் பருத்தித்துறை வரை யிலும், கந்தரோடை முதல் சங்கமன்கண்டி வரையிலும் காணப்படுகின்றது ஒரு விசேட அம்சமாகும். தூண் தாங்கு கற்கள் தமிழகத் தில் இருந்தமைக்கான சான்றுகள் வெளிவர வில்லை.

அதுமட்டுமன்றி, பல்லவர்களுடைய கட்டு மானங்கள் கற்களில் உருவாவதற்கு முன்னரே இலங்கையில் நாகர்கள் சிற்பக் கலையிலும், கட்டிடக் கலையிலும் பெரும் சாதனைகளை ஈட்டியுள்ளார்கள். கற் தூண் கள் அமைந்த கட்டிடங்கள் பல இலங்கையின் வடக்கு கிழக்கு பாகங்களில் அமைக்கப்பட் டிருந்தன.



பொலநறுவை சிவனாலயம்

இலங்கையின் மத்திய பகுதியில் அநுராதபுரம் போன்ற பகுதியில் காணப்படுகின்ற ஆதியான கட்டுமானங்கள் நாகருடைய கலைப்பாணி யில் அமைந்தவை. அதேபோல பிற்காலத் திலே அலங்கார வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்ட சந்திர வட்டக் கற்கள் என்னும் அமைப்புக்கள் நாகர்கள் தங்கள் கட்டிடங் களிலே வாயிற் கதவுகளாக வைத்த அரை வட்டக் கற்களை மூலமாகக் கொண்டவை.

மேலும் யாழ்ப்பாணத்தில் நவாலி, மாவிட் டபுரம்,வல்வெட்டித்துறை போன்ற இடங் களிலும் கல்முனை சேனைக்குடியிருப்பு தாந்தாமலை ஆகிய இடங்களிலும் தூண் களோடு கல்லினால் அமைந்த கட்டிடங்களை அமைப்பதற்கும் அவர்கள் பழகியிருந்தார்கள் என்று கொள்ள முடியும். அதுபோல இலங்கை யிலே அதி உன்னதமான பழைய சிற்பம் என்று கருதப்படும் இசுறுமுனியாவில் உள்ள குதிரைத் தலையுடன் கூடிய ஐயநார் வடிவமும். நடனமாதர் சிற்பங்களும் சேரு விலவில் காணப்படும் அதி உன்னதமான அளவிலே பெரிய புத்தர் பெருமானின் கற்சிற் பங்களும் நாகர்களுடைய வேலைப்பாடு என்பது இப்போது தான் தெரியவந்துள்ளது.

**கேள்வி** -யுனெஸ்கோவின் பாரம்பரிய கலாச் சார மற்றும் இயற்கை நினைவுச் சின்னங்கள் தொடர்பான வரையறைவுகள் எவை? இலங்கையில் அவ்வாறு ஏதாவது சின்னங் கள் அங்கீகரிக்கப் பட்டுள்ளனவா? இலங்கை யில் அவ்வாறான வரையறைக்குள் அடங்கக் கூடிய தமிழர் பாரம்பரிய, கலாச்சார மற்றும் இயற்கை நினைவுச் சின்னங்கள் எவையாக அமையலாம் என நீங்கள் கருதுகின்றீர்கள்? அவ்வாறான அங்கீகாரத்திற்காக ஏதாவது முயற்சிகள் செய்யப்பட்டுள்ளனவா?

யுனெஸ்கோவினால் பாதுகாக்கப்பட வேண் டியதென தீர்மானிப்பதற்கான சில பரிமாணங் கள் உண்டு. அவை பொதுவானவை. எல்லா நாடுகளுக்கும் பொருந்தும். யுனெஸ்கோ நிறுவனம் அரசாங்கங்களோடு தான் தொடர்பு கொள்வதுண்டு. தனியார் நிறுவனங்க ளோடோ, அல்லது நாட்டிலுள்ள பிராந்திய சபை, பிரதேச சபை ஆகியவற்றோடு தொடர்பு கொள்ளும் அதிகாரமும் வழக்கமும் இல்லை. அரசாங்கத்தினாலே சிபார்சு செய்யப்படுகின்ற தலங்களைத் தான் அவர்கள் பரிசீலனை செய்வர். இலங்கை அரசாங்கத்தைப் பொறுத் தவரையில், அதனுடைய கலாசார திணைக் களமும், தொல்பொருள் திணைக்களமும் இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் முதலாக எத்தகைய அணுகுமுறையை கையாள்கின்றன, பின்பற்றுகின்றன என் பதை நான் சொல்லித் தான் தெரிய வேண்டிய தில்லை.

ஆரம்பத்திலே அவர்கள் பழைய இராசதானி களான அநுராதபுரம், பொலநறுவை, கண்டி, தம்புள்ள போன்றவற்றை தான் பெருமளவில் சிபார்சு செய்தார்கள். இவை அனைத்தும் பௌத்த சமயம் தொடர்பானவை. பொல நறுவையிலும், கண்டியிலும் இந்துக் கோயில் களும் காணப்படுகின்றன. ஆனால் அவற் றைப்பற்றி எவரும் பேசுவதில்லை.

பொலநறுவையில் உள்ளவை சிவாலயங் களின் அழிபாடுகள் பல இப்பொழுது காணப் படுவதில்லை. முதலாம் சிவாலயம், இரண் டாம் சிவாலயம், ஐந்தாம் சிவாலயம் என் பனவே பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக கொள் ளப் படுகின்ற போதிலும் தேடுவாரற்ற நிலை யிலே காணப்படுகின்றன. தமிழர்களின் அல்லது இந்துக்களுடைய நிறுவனங்கள் என கொள்ளுவோமாயின் கொள்ளுவோ மாயின், அநுராதபுரம், பொலநறுவை போன்ற இடங் களைப் போல புராதன கட்டிடங்களின் இடிபாடு கள் குவிந்து காணப்படும் இடங்களில்லை.

அவை போர்த்துக்கேயரால் முற்றாக அழிக் கப்பட்டதனால், அவற்றின் அழிபாடுகளின் எச்சங்களும் காணப்படுவதில்லை. முன் னேஸ்வரம், திருகோணமலை அகஸ்தியர் ஸ்தாபனம் போன்ற இடங்களில் யுனெஸ் கோவின் ஆதரவில் பாதுகாப்பை தேடலாம். ஆனால் இவற்றை ஒருவரும் முன்வைக்க வில்லை.

முன்வைப்பதானால் தொல்லியல் திணைக்களத்தின் அனுசரணை வேண்டும். இலங்கை அரசாங்கத்தின் கலாசார நிறுவனத்தின் அனுசரணை வேண்டும்.இவற்றை இலகுவில் பெற்றுக் கொள்ள முடியாது. ஒருமுறை திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், மாவிட்டபுரம், திருக்கோணேஸ்வரம் முதலிய ஆலயங்களின் புராதன சின்னங்களை யுனெஸ்கோ பாதுகாப்பு சின்னங்களான பிரகடனப்படுத்த வேண்டுமென முன்னொரு காலத்திலே இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த ஒரு தமிழர் விரும்பினார்.

அதற்காக ஒரு கூட்டம் கைலாசபிள்ளையின் வீட்டிலே கூட்டப்பட்டது. தொடக்கத்தில் அவர்கள் என்னை அழைக்கவில்லை. தமிழர் தரப்பில் கூடியவர்கள் என்னை அழைக்கவில்லை. ஆனால் சிங்களவர் தரப்பிலுள்ளவர்கள், பழைய தொல்பொருள் திணைக்களத்தினரும்,வேறு சிலரும் வற்புறுத்தியதனால் தான் கூப்பிட்டார்கள். இது ஒரு முக்கியமான விடயம் அங்கு கூடிய தமிழர் எவருக்கும் தொல்லியல் வரலாறு பற்றி அறிவு இல்லை.

காலம் போக இந்தக் கூட்டத்தைக் கூட்டியவர்கள் தொல்லியல் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள், கலாசார அமைச்சைச் சேர்ந்தவர்கள் அவர்களுடைய உள்நோக்கமும் வேறாக இருந்தது. அப்படி இவற்றை தொல்லியல் சின்னங்களாக்க வேண்டுமானால், இவற்றுடன் கோட்டைகள், துறைமுகங்கள் ஆகியவற்றையும் சேர்க்க வேண்டுமென்று மறைந்த தொல்லியல் திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளரான றோலன் டி சில்வா சொன்னார்.

இது ஒரு ஆபத்தான திட்டம். ஏனெனில், கோட்டைகள் என்று சொல்லும் போது இராணுவமயமாகும். இதுபோலவே துறைமுகங்களும் அவர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும். எங்கள் ஆலயங்களும் அவர்களின் கட்டுப்பாட்டிற்குள் போகும். யுனெஸ்கோ என்று சொன்னாலும் நிர்வாகம் செய்பவர்கள் இங்குள்ளவர்களே. அப்போது தான் எனக்கு புரிந்தது யுனெஸ்கோவின் ஆதரவை நாடுவது ஆபத்தானது.

**கேள்வி** -இலங்கையில் தமிழர்களின் பூர்வீக இருப்புத் தொடர்பில் அகழாய்விற்கு உட்படுத்தப்பட வேண்டிய முக்கிய இடங்களாக நீங்கள் எவற்றைப் பார்க்கின்றீர்கள்? இந்த அகழ்வாய்வுகளை வட கிழக்கிலுள்ள பல்கலைக்கழகங்கள் மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளனவா?

ஏற்கனவே மாந்தையிலும், கந்தரோடையிலும் அகழாய்வுகளை செய்துள்ளோம். மாந்தையிலே பல தடவைகளாக தொல்பொருளியல் திணைக்களத்தினுடைய அனுசரணையோடு, வெளிநாடுகளைச் சேர்ந்த புலமை மிக்க தொல்லியலாளர்கள் அகழ்வுகளை செய்துள்ளனர். புலமை மிக்கவர்கள் என்று சொல்லுகின்ற போது அவர்கள் பல நாடுகளிலும், பல தலங்களிலே அகழாய்வுகளை செய்திருக்கிறார்கள். ஒப்பியல் நோக்கில் சர்வதேச தொடர்புகள், அக்காலங்களில் நடைபெற்ற சர்வதேச வாணிபம், பொருட் பரிவர்த்தனை முதலியவற்றிலே தான் அவர்களுக்கு கூடுதலான அக்கறையும்,அனுபவமும் உண்டு.

அகழ்வு நடைபெறும் பிராந்தியத்தின் வரலாறு, பண்பாடு தொடர்பான ஆழமான புலமை அவர்களிடம் காணப்படவில்லை. அதுமட்டுமன்றி இவர்கள் யுனெஸ்கோ மூலமாக வருவதனாலும் இலங்கை அரசாங்கத்தின் நிறுவனமான தொல்லியல் திணைக்களத்தின் அனுசரணையோடு அகழ்வுகளை செய்வதாலும், எந்தளவிற்கு வெளிப்படைத் தன்மையை இவற்றிலே காண முடியும் என்பது கேள்விக்குறியானது.

ஏனெனில், ஒரு துறை அரசியல் மயமாக்கப் பட்டிக்கின்ற போது, வெளிநாடுகளிலிருந்து பங்கு கொள்பவர்களும் ஏதோவொரு காரணமாக கட்டுப்பாடுகளுள் அடங்க வேண்டிய தேவைகள் இருக்கும் போது வெளிப்படையான கருத்துக்களை நாம் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

உதாரணமாக அநுராதபுரத்திலும் திஸமகாராம விலும் அகழாய்வுகளை நடத்திய வெளிநாட்டவர்கள் அங்கு பானையோடுகளில் உள்ள எழுத்துக்களை பற்றி அறிக்கை வெளியிட்டனர். ஆனால் மாந்தையில் அகழாய்வு நடத்தியவர்கள் அதை செய்யத் தவறி விட்டார்கள். அதுவும் சற்று பிந்திய காலத்தில் தான் அது துறைமுகம் சிறப்புப் பெற்றது என்ற காரணத்தினால் பானைகளில், மட்பாண்டங்களில் எழுத்துக்கள் பொறிக்கப் பட்டிருக்க வேண்டும். ஆனால் அவர்களின் அறிக்கையில் அது பற்றி ஒரு கதையும் கதைக்கவில்லை.

இரண்டாவதாக பல ஆண்டுகளுக்கு முன்பு பல்கலைக்கழக மாணவர்களோடு திருக்கேதீஸ்வரம் சென்ற போது அகழாய்வு நடந்த ஒரு இடத்தை நாங்கள் பார்க்கப் போனோம். அங்கே சில மாணவர்கள் பொறுக்கியெடுத்த தரை மேல் காணப்பட்ட கலவோடுகள் சிலவற்றில் தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன. இவற்றை நாங்கள் ஒரு நூலிலும் வெளியிட்டுள்ளோம். அவற்றை வாசிக்கத் தெரிந்தவர்கள் அவற்றை அடையாளம் கண்டு கொள்ள முடியும்.



வெல்லாவெளி கற்குகை சாசனம்

இதுபோல கந்தரோடையில் Poul E Peris அகழாய்வு செய்த போது அவரிடம் பிராமி எழுத்துக்களை வாசிக்கும் தன்மையை நாங்கள் எதிர்பார்த்திருக்க முடியாது. பின்பு சென்ற நூற்றாண்டிலே 66ஆம் ஆண்டில் அகழாய்வுகளை நடத்திய போது அவர்கள் எழுத்துக் பொறித்த மட்பாண்டங்கள் குறித்த எதுவித கதையும் இல்லை. ஆனால் அவற்றில் கிடைத்த கலவோடுகள் யாழ்ப்பாண அருங்காட்சியகத்தில் காணப்படுகின்றன. கல்வோடுகளிலும், சுடுமண் கட்டிகளிலும், களிமண் கட்டிகளிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

அவை அனைத்தும் தமிழ் மொழியில் உள்ளன. தமிழ்ப் பிராமியில் உள்ளன. இதை ஒப்புக் கொள்ளுவதற்கு அங்குள்ளவர்களே தயங்குகின்றனர். அப்பொழுது மற்ற இடங்களில் ஆய்வுகளை செய்தால் என்ன நடக்கும். இன்றைய நிலையில் ஆய்வுகளை செய் தால், இப்படியான சில குறைகள், தவறுகள், மௌனங்கள் காணப்படும்.

மற்றது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையினர் கந்தரோடையிலும்,வன்னி மாவட்டங்களிலுள்ள நாக படுவான், கட்டுக்கரைக் குளப்பகுதியிலும் அகழாய்வுகளை மேற்கொண்டிருக்கிறார்கள். பின்னைய இரண்டிலும்காணப்பட்ட பொருட்கள் மிக முக்கியமானவை.

நான் முன்பு சொன்ன கருத்துக்களுக்கு அழுத்தம் அளிக்கின்ற வகையில் அவர்களுடைய கண்டுபிடிப்புக்கள் அமைந்தன. பெருங்கற்கால பண்பாட்டுச் சின்னங்கள் அந்த அகழ்வுகளில் கிடைத்துள்ளன. கரும் செம் மட்பாண்டத் துண்டங்கள், சில வழிபாட்டு சின்னங்கள், கரும் செம் மட்பாண்டத் துண்டங்களோடு குளக்கட்டிலுள்ள சிவப்பு மட்பாண்டங்கள், Wyy; (Rulel Pottery) மட்பாண்டங்கள், ரோமர் காலத்து நாணயங்கள், நாகர் வழங்கிய காசுகள் போன்றவை அங்கு கிடைத்துள்ளன. இவற்றை பற்றிய அறிக்கைகள் வெளிவரவில்லை. பத்திரிகைகளில் வெளியிட்ட சில கட்டுரைகளைக் கொண்டே இவற்றை நாம் அறிய முடிந்தது.

இருந்தும் வன்னியில் நடைபெற்ற அகழ்வுகளை இவர்களால் தொடர முடியவில்லை. மேலிடத்திலிருந்து அனுசரணை கிடைக்கவில்லை. இவற்றை பற்றிய அறிக்கைகளும் வெளிவரவில்லை.

கிழக்குப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரை அங்கு அகழாய்வுகளை மேற்கொள்ளக் கூடிய தகைமையை எவரும் இன்னும் பெறவில்லை. தொல்பொருள் சின்னங்களை தேடுவதற்கு கூட அவர்கள் முயற்சி மேற்கொள்ளவில்லை. அந்த நிலையில் அந்த நிறுவனத்தைப் பற்றி பேசுவது இப்பொழுது பொருத்தமாகாது.

முறையான அகழ்வுகளை செய்து வெளிப்படையாக விபரங்களை பெற வேண்டுமானால், இலங்கை அரசியலமைப்பில் மாற்றம் ஏற்பட வேண்டும். அதிகமான அதிகாரப் பரவல் இந்திய மாநிலங்களுக்குரிய வகையில் ஏற்பட்டால் தான் இவற்றை உரிய முறையில் கொண்டு செல்ல முடியும். இப்பொழுது மாகாண சபையின் அதிகாரங்களில் பொதுப் பட்டியலில் தொல்லியலும் அருங்காட்சியகங்களும் இடம்பெறுகின்ற பொழுதிலும் மாகாண சபைகளினாலே இவை தொடர்பாக எதையும் மேற்கொள்ளவில்லை. நிறைவேற்று அதிகாரம் ஆளுநரின் வசம் இருப்பதே இதற்கான காரணம்.

தமிழ்நாட்டில் கீழடி பற்றிய அகழாய்வுகள் சர்வதேச பரிணாமத்தைப் பெற்றுள்ளன. அங்கு மத்திய அரசின் தொல்லியல் திணைக்களம் நாட்டின் பல பாகங்களில் அகழ்வுகளை வெளிப்படைத் தன்மைகளோடு செய்கின்றது. அதுமட்டுமன்றி தமிழ்நாட்டு தொல்லியல் துறை தான் கீழடியில் பெரும்பாலான அகழ்வுகளை செய்கிறார்கள். அப்படியான ஒரு நிலை இந்த நாட்டில் இல்லை. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் எங்கே அகழ்வு செய்வது அதனால் என்ன பலன் என்று சிந்திப்பதில் எந்த ஒரு பலனும் இருக்காது.

**கேள்வி** -உரிய விழிப்புணர்வு இன்மை, சுயநலம் போன்றவற்றாலும் எமது வரலாற்று முதுசங்கள் அழிந்து போகின்றன என கவலைகள் வெளிப்படுத்தப்படுகின்றன. பல்வேறு இடங்களிலும்,நேரடிக் கள ஆய்வில் ஈடுபட்ட ஒரு தொல்லியலாளர் என்ற வகையில் இதற்கான எடுத்துக் காட்டுக்கள் சிலவற்றை கூறமுடியுமா?

நான் ஒரு பயிற்சி பெற்ற தொல்லியலாளர் அல்ல. வரலாற்றாசிரியர் என்ற முறையில் தொல்லியலில் ஈடுபாடு உண்டு. அத்தோடு தமிழ்ப் பிராமி எழுத்துக்களை வாசிக்கும் திறன் பெற்றிருப்பதனாலும் இவற்றைப் பற்றி பேச முடியும்.

விழிப்புணர்வு என்பது தமிழ் பேசும் மக்களிடையே அடிமட்டத்தில் தான் இருந்து வருகின்றது. எங்களின் ஆலயங்களில் அந்தணர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அட்சகர்களாக கடமை செய்து முடிந்ததும் போய் விடுவார்கள். ஆனால் ஒரு சிலரைத் தவிர மாவிட்டபுரம், கீரிமலை, அகஸ்தியர் ஸ்தாபனம் ஆகியவற்றில் உள்ளவர்களைத் தவிர மற்றைய ஆலயங்களுக்கு பொறுப்பானவர்களும் அங்கே வழிபாடு நிகழ்த்தும் பூசகர்களும் எதுவிதமான அக்கறையும் கொள்வதில்லை.

**கிரிமலை**

தொல்பொருள் சின்னங்களை பார்க்கப் போனால் அதைக் காட்டுவதற்கு தயக்கம் உள்ளவர்கள் பலர் இருக்கிறார்கள். கிழக்கிலங்கையில் இவ்வாறானவர்கள் கூடுதலாக இருக்கிறார்கள். உதாரணமாக பிரபலமான ஆலயமான தான்தோன்றீஸ்வரத்தைக் கூறலாம்.

ஒப்பீட்டளவில் பௌத்த சமயம் தொடர்பான சின்னங்களை பொறுத்தவரையில் பௌத்த சங்கத்தார் மிகுந்த ஈடுபாடு உடையவர்களாய் இருக்கிறார்கள். மலை நாட்டுப் பகுதிகளுக்குப் போனால் அங்கு அவர்கள் விகாரையிலே பல ஏடுகளை, பட்டயங்களை தொல்பொருள் சின்னங்களை வைத்திருப்பதைக் காணலாம். அது மட்டுமன்றி தென்னிலங்கையிலே அங்குள்ள ஊடகங்கள் சிலவற்றிலும் காலாகாலமாக தொல்பொருள் சின்னங்கள், பண்பாட்டுச் சின்னங்கள் பற்றி விபரமாக எழுதுகிறார்கள். அந்த முறை தமிழ் ஊடகங்களில் காணப்படவில்லை.

அவற்றிலே ஆசிரியர்களாக கடமை புரிபவர்களும்,அதிகமாக எங்கள் பல்கலைக்கழகங்களில் பயிற்சி பெற்றவர்கள் தான். அவர்களின் கவனம் வேறு விடயங்களில் தான் செல்கிறது. அன்றாட அரசியலுக்கு முக்கியம் அளிக்கப்படுகின்றது.

தலைநகரில் உள்ள விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. ஆனால் அந்த செய்தித் தாள்களை படிக்கின்றவர்கள் எங்கு வாழ்கிறார்கள். அவர்களின் பிரச்சினைகள் என்ன என்று அக்கறை செலுத்துவதில்லை. பிராந்தியப் பத்திரிகைகளின் விரித்தாந்தங்கள் மிக மோசமானது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் காணப்படும் பத்திரிகைகள் எதுவும் அண்மையில் தொல்பொருள் சின்னங்களைப் பற்றி எதுவும் சொல்வதில்லை. விழிப்புணர்வு என்பது ஒரு ஒப்பீட்டளவிலான விடயம். இப்பொழுது பெருமளவிலான விழிப்புணர்வு 2 மாகாணங்களில் ஏற்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் எங்களின் நூலைப் பற்றி அறிந்தவர்களிடையே இவ்வளவு பொருட்கள் இங்கு இருக்கின்றனவா? இவ்வளவு பெரிய நாகரீகம் எங்களுக்கு மூலமானதா என்ற சிந்தனை வெளிநாடுகளில் வாழுகின்ற படித்தவர்கள் மத்தியில் தோன்றி விட்டது.

## கந்தரோடையில் பெருங்கற்கால மட்பாண்டங்களில் காணப்படும் குறியீடுகள் சில








அதேபோல் வடமாகாணத்தில் 4 மாதங்களுக்கு முன்பு ஆறு திருமுருகன் ஒரு பாரிய கட்டடத்தை நாவற்குழியில் ஒரு அருங்காட்சியகத்திற்கான நிலையமாக அமைத்துள்ளார். அதற்கு இங்குள்ள செல்வந்தர்களும், வெளி நாட்டிலுள்ளவர்களும் பெருந்தொகையான பணம் கொடுத்து அதை அமைப்பதற்கான செலவுகளைக் கொடுத்துள்ளார்கள். கட்டிடம் மிகவும் பிரமாண்டமானது. பரந்தளவில் அந்தப் பொருட்களை வைக்க முடியும். எந்தளவிற்கு தேடியிருக்கிறார்கள் என்பதை நான் இப்பொழுது சொல்ல முடியாது.

முக்கிய விடயம் என்னவென்றால், முதல் நாள் திறப்புவிழா தொடர்பான கூட்டத்திலே 5000 இற்கும் குறைவில்லாத மக்கள் கலந்து கொண்டனர். அதிகமாக குடா நாட்டிலும், தீவகத்திலும் வழிபாடு நடத்துகின்ற அந்தணர்கள், கல்லூரி,கச்சேரி,கல்வித் திணைக்களத்தில் உயர் பதவிகளைப் பெற்றிருக்கிற அதிகாரிகள், முதலான எல்லோரும் ஆண்களும் பெண்களுமாக வந்து கூடியிருந்தார்கள். தமிழாராய்ச்சி மாநாடு 1974இல் நடைபெற்ற போது தான் மிகக் கூடிய சனம் கலந்து கொண்டது.

**சிவபூமி அருங்காட்சியகம்**

அதற்குப் பிறகு இந்த திறப்பு விழாவிலே தான் காணமுடிந்தது ஏனென்றால், அங்கு அதிகார வர்க்கத்தினுடைய கட்டுமானங்கள், அதிகாரங்கள், செல்வாக்குகள் இல்லை. சமுதாயத் தினுடைய அபிமானத்தையும், பெருமதிப் பையும் பெற்ற ஒருவர் அனைவரின் நம்பிக் கையைப் பெற்ற ஒருவர் தொடக்கியிருக்கின் றார். அதனாலே அவருக்கு ஆதரவு உண்டு. அதன் மூலமாக ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட் டிருக்கின்றது.

இலங்கையின் ஏனைய பாகங்களில், வட கிழக்கு மாகாணங்களில் ஏனைய பாகங்களைப் பொறுத்தவரையில் இந்தவிதமான முயற்சிகளை மேற்கொள்ள முடியும் என்றால் அங்கு பெருந்தொகையான தொல்பொருள் சின்னங்கள் இருக்கின்ற பொழுதிலும் முன் வருவார் எவரும் இல்லை.

அங்கும் செல்வந்தர்கள் இருக்கிறார்கள். குறிப் பாக கிழக்கு மாகாணத்தில் வெளிநாடுகளில் உள்ளவர்கள் இந்த முயற்சிகளை மேற் கொண்டால் பிராந்திய வேறுபாடு இன்றி உதவி செய்யக்கூடியவர்களும் இருக்கின்றார் கள். ஆனால் பூனைக்கு மணி கட்டுவது யார் என்ற நிலை இருக்கின்றது. ஒரு தொல்லியல் தொடர்பான அருங்காட்சியகத்தை அமைப்பதே வலு சிரமமாக இருக்கின்றது. ஹிஸ்புல்லாஹ் காத்தான்குடியில் ஒரு இஸ்லாமிய அருங்காட்சியகத்தை ஏற்படுத்தியிருக்கிறார். இதை முன்னுதாரணமாகக் கொண்டு மற்றவர்கள் ஏன் இதை செய்ய முடியாது?

**கேள்வி**-தமிழினத்தின் தொன்மைச் சான்றுகளை அழிவிலிருந்து காப்பாற்ற தற்போதைய சூழலில் நாம் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென நீங்கள் கருதுகின்றீர்கள்?

பலவிதமான வழிகளில் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். ஒன்று குறிப்பாக தொல்லியல்துறை திணைக்களமே இதற்கு பொறுப்பாக இருப்பதால், அவர்களை இந்தச் சின்னங்களை உரிய முறைப்படி பேணிக் கொள்வதற்கும், ஈடுபாடு உள்ளவர்கள் பார்த்து ஆராய்வு செய்வதற்கு அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்க வேண்டும்.

அத்தோடு தொல்பொருள் சின்னங்கள் இருக்கும் இடங்களில் வேறு நாடுகளைப் போல




உரிய கட்டிடங்களை அமைப்பதற்கோ அவற்றை அடிப்படையாகக் கொண்டு குடிகளை நிறுவுவதையோ தவிர்க்க வேண்டும். வழிபாட்டு சின்னங்கள் அவை எந்தச் சமயத்தைச் சேர்ந்தாலும் ஒரு பொதுவான கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும். மற்றது பொது மக்கள் தம்மால் இயன்ற வரை இவற்றை அடையாளப்படுத்தி பாதுகாப்பதற்கான ஒரு வழிமுறையை உருவாக்க வேண்டும்.

இவர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பிரதேச சபை மட்டத்திலும், மாகாண சபை மட்டத்திலும், பாராளுமன்றத்திலும் அங்கத்தவர்களாக இருக்கிறவர்களுக்கு அதிகபட்ச வலியுறுத்தல்களை வழங்க வேண்டும். ஏனெனில் இவர்களுக்கு இயலுமான வகையில் இவை தொடர்பான முயற்சிகள் மேற்கொள்ளக்கூடிய சாத்தியங்கள் உண்டு. அதிகாரம் இல்லை என்பது வேறு விடயம்.

ஆனால் இவற்றைப் பற்றி பேசக்கூடிய சாத்தியங்கள் உண்டு. அதேபோல பிரதேச சபை, மாகாண சபைகள் ஊடாக இப்பொழுது அடையாளம் காணப்பட்ட சின்னங்களை எல்லாம் எடுத்து பாதுகாப்பாக வைப்பதற்கு வழிவகை தேட வேண்டும். ஆலயங்கள் குறிப்பாக முன்னேஸ்வரம், மாவிட்டபுரம், வன்னியிலுள்ள கோயில்கள் அகஸ்தியர் ஸ்தாபனம், போன்றவை கொக்கட்டிச்சோலை தான் தோன்றி ஈஸ்வரம் போன்றவை தங்களின் வசமுள்ள எஞ்சியுள்ள பொருட்களையாவது பாதுகாப்பதற்கு கோவில்களில் அருங்காட்சியகங்களை உருவாக்கி பாதுகாப்பாக வைத்துக் கொள்ளலாம்.

**வெல்லாவெளி**

கொக்கட்டிச்சோலையிலுள்ள தேர்களே அருங் காட்சியகத்திற் குரியதாகி விட்டன. இவற்றை அழிவிலிருந்து பாதுக்க வேண்டுமானால், அவற்றிற்கு நிரந்தரமாக ஒரு கொட்டகை களை அமைத்து ஒரு ஆலய அருங்காட்சியகத் துடன் இணைத்து வைத்திருப்பது தான் ஒரே யொரு வழி. அல்லாவிட்டால் அதிலிருக்கும் சிற்பங்கள் அழிந்து சிதைந்து பலரும் எடுத்துக் கொண்டு போய் பயன்படுத்துவர். இதேபோல் செங்கட்டிகள், கருங்கல், உலோகப் பொருட்கள் என பல உண்டு. இவற்றை பாதுகாக்க வேண்டும். இவற்றை விற்கக் கூடாது.

இதுவரை காலமும் தொல்பொருள் சின்னங்களை அதாவது உலோகப் பொருட்களை வெறும் தகட்டின் பெறுமானங்ளுக்கு வியாபாரிகளுக்கு விற்பதுண்டு. ஆலய நிர்வாகத்தினரும் இந்த குற்றகாரியத்தை செய்துள்ளனர். இனியாவது இதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். மற்றது மலைகள், மலைப்பாறை களிலுள்ள தொல்பொருள் சின்னங்கள் மிக வேகமாக தகர்க்கப்படுகின்றன.

இதை தடை செய்வதற்கான வழிவகைகளை பல மட்டங்களிலும் தேடிக்கொள்ள வேண் டும். இங்கே வாகரை, கதிரவெளியில் சில மலைகளிலே வாசகங்கள் எழுதப்பட்ட கற் பாறைகள் உண்டு. இருந்தும் அவை முற் காலத்தில் நாகர்களுடைய வாழ்விடங்களாக, கோட்டைகளாக இருந்துள்ளன.

இவற்றைப் பற்றி எவரும் அறிந்திருக்க வில்லை. தொல்லியல் திணைக்களமும் அக்கறை கொள்வதாக இல்லை. அவர்களுக்கு இங்கு கல்வெட்டு இருப்பது தெரியாது. இவர்களெல்லாம் மாற்றான் பால் மனப்பான்மையோடு இருப்பதால், இலங்கையில் அரச திணைக்களங்களுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் கற்களை வழங்குபவர்கள் பெரிய இயந்திரக் கருவிகளைக் கொண்டு கணப்பொழுதில் உடைத்து விடக் கூடிய நிலை காணப்படுகின்றது.

அவர்களுக்கு பொருள் தான் தேவை. தொல்பொருள் சின்னங்கள், வரலாறுகள் பற்றி எந்ததேவையும் இல்லை. அக்கறையும் இல்லை. குரங்கு கொடி போட்ட மலை என்று வாகரைப் பிரதேச எல்லையில் காணப்பட்டது. அதிலே எழுத்துப் பொறித்த பல கற்கள் இருந்தன. மேலே இருந்த பௌத்த பள்ளி இடிபாடுகளாகி விட்டது. ஆனால் அதில் ஒரு பாகத்திலிருந்த நாகக் கல் அளவிலே பெரியது. பிரமாண்டமானது. தூரத்திலிருந்து காணக் கூடியதாக இருந்தது. 2 வருடங்களின் பின் போனால் மலையும் இல்லை. மலை அடிவாரமும் இல்லை.

கீழே நீர் தேங்கி நிற்கும் ஒரு பள்ளம் தான் தெரிகின்றது. மற்ற மலைப் பாறைகளை மிக விரைவிலே அழித்து விடுவார்கள்.

வெல்லாவெளி வெள்ளி மலையிலே நாகர்கள் அமைத்த நீர்த் தடாகம் ஒன்று இருந்தது. அதிலே வருடத்தின் எல்லா மாதங்களிலும் நீர் தேங்கி நிற்கும். விளிம்புகளில் தமிழ் வசனங் கள் எழுதப்பட்டிருந்தன. என்ன விபரீதம் என்றால் இந்து சமய கலாசார திணைக்களத் திடம் கோவில் கட்டுவதற்கு 10 இலட்சம் ரூபாவை பெற்ற அங்கிருந்த கோயில் நிர்வாகிகள் தேர் ஓடும் வீதியை அமைப்பதற்கு இந்தச் சின்னங்கள் தடையாய் இருப்பதாகக் கூறி இந்த சின்னங்களை அழித்து விட்டார்கள். இது ஒரு அலட்சியப்போக்கு.

அறிவின்மை எங்கள் சமூகத்தினுடைய அடிப் படையான சின்னங்களையே தொலைத்து விடுகின்றமை பெருமளவில் தண்டனைக்கும் கண்டனத்திற்கும் உரியது. அவற்றிற்கு வழி வகைகள் இல்லாததாலேயே இவர்கள் இவற்றை செய்வதற்கு துணிகின்றார்கள்.

நன்றி: "இலக்கு"

2022ஆம் ஆண்டின்

# உலக வணிகம்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அலலது
செலவோ அல்ல,அது ஓர் முதலீடு.

விளம்பரத்திற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம்
வீண் விரயமன்று அது உங்கள்
வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு.

உங்கள் வணிகம் பெருகவும்
முன்னேற்றமடையவும் இன்றியமையாதது.

விளம்பரம் இன்றேல்
வியாபாரம் இல்லை



விளம்பரத் தொடர்புகளுக்கு

437 345 4203

www.ulagavanikam.com
thamilarvanikam@gmail.com

# இந்தியாவும் ஈழத்தமிழர் பிரச்சனையும்

## (சில உண்மை விளக்கங்கள்)

- தமிழீழ அரசியல் துறை -

**இந்தியாவும் ஈழத்தமிழர் பிரச்சனையும்**

**காணிக்கை**

எமது இயக்கத்தில் தொடக்க காலத்திலிருந்து இயக்கத்திற்கு ஏற்பட்ட இடர் இழப்புகளில் பங்கு கொண்டவரும், இயக்கத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவரும் குறிப்பாக திருகோணமலையில் தமிழீழ விடுதமலப் புலிகள் அமைப்பை உருவாக்கி வளர்த்தவரும், திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள இராணுவத்திற்கு எதிராக வெற்றிகரமாக நடவடிக்கைகள் பல எடுத்தவருமான லெப்டினணட் கேர்ணல் சந்தோசம் (உமைகநசன்) அவர்கள் இந்திய அரசு தமிழ் மக்களுக்குச் செய்த துரோகத்தை எதிர்த்துப் போராடிய வேளையில் வீரச்சாவு அடைந்தார். அந்த வீரமறவனுக்கு இந்நூலைக் காணிக்கையாக்குகிறோம்.




**லெப்.கர்ணல் சந்தோசம். (க. உமைநேசன்)**

**இந்தியாவும் ஈழத்தமிழர் பிரச்சனையும்**
**சில உண்மை விளக்கங்கள்**

எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே!

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக நாம் இரத்தம் சிந்தி. எத்தனையோ மகத்தான தியாகங்களைப் புரிந்து, எத்தனையோ இன்னல்களை அனுபவித்து, சிங்களத் தீவிரவாதத்தின் பிடியிலிருந்து மீட்டெடுத்த யாழ்ப்பாணப் பிரதேசம் இன்று இந்திய இராணுவத்தின் வல்லாதிக்கத்தின் கீழ் வீழ்ச்சி அடைந்துள்ளது. நாம் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த எமது சொந்த மண்ணில், நாம் சுதந்திரமாக உலாவிக்களித்த எமது தாய்ப் பூமியில் இன்று இந்திய இராணுவம் ஆக்கிரமிப்புச் செய்து எம்மை அடிமைப்படுத்தி வருகின்றது. முதலில் போர்த்துக்கேயர், அடுத்ததாக ஒல்லாந்தர் (ஹாலந்து), பின்பு ஆங்கிலேயர், அடுத்து சிங்களவர், இன்று இந்தியர் என கிட்டத் தட்ட 500 ஆண்டுகள் வரை ஈழத் தமிழினம் தொடர்ச்சியாக அந்நிய காலனிய ஆதிக்கத்தின் கீழ் நசுக்கப்பட்டு வருகின்றது. இதில் இந்திய ஆக்கிரமிப்பு, தமிழினத்திற்குச் செய்யும் அப்பட்டமான வரலாற்றுத் துரோகமாகும்.

தமிழீழத்தில் அமைதியைப் பேணி, தமிழீழ மக்களுக்குப் பாதுகாப்பு அளித்து. சுயாட்சி மாநிலம் பெற்றுத் தருவதாக இங்கு வந்த இந்திய இராணுவம், எமது தாய்ப் பூமியை நிலப்பறிப்பு செய்து. எமது மக்கள் மீது அதர்மமான அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டிருப்பது மிகவும் நயவஞ்சகமான நம்பிக்கைத் துரோகமாகும்.

இன்று தமிழீழத்தில் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் கொடும் ஆட்சி நடைபெறுகின்றது. என்றுமில்லாதபடி எமது மக்கள் இம்சைப்படுத்தப்பட்டு வருகின்றனர். இந்திய இராணுவ வெறியாட்டம் சிங்கள அரச பயங்கரவாதத்தையும் மிஞ்சி நிற்கின்றது.

இந்தியாவின் நேசசக்தியாக விளங்கி வந்த எமது மக்கள் சமுதாயத்தின் மீது பாரதம் ஏன் இந்த பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது?

இந்திய அரசு ஏன் எம்மீது இந்த அதர்மமான யுத்தத்தைத் தொடுத்திருக்கின்றது?

இந்திய அரசு விடுதலைப்புலி இயக்கத்தை ஒழித்துக் கட்ட கங்கணம் கட்டி நிற்பது ஏன்?

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தையும், அதன் முக்கியமான மாகாணசபைத் திட்டத்தையும் எமது மக்கள் மீது திணித்துவிட இந்தியா ஏன் பகீரத முயற்சி செய்கின்றது?

மாகாணசபைத் திட்டத்தின் அடிப்படையான குறைபாடுகள் என்ன?

இந்திய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மத்தியில் எழுந்த முரண்பாடுகளும், அதன் மூலகாரணங்களும் என்ன?

இந்திய இராணுவத்தை எதிர்த்துப் போராட நாம் ஏன் நிர்ப்பந்திக்கப்பட்டோம்?

***இந்தக் கேள்விகளுக்குத் தெளிவான பதில் அளித்து எமது நிலைப்பாட்டை மக்களுக்கு எடுத்து விளக்குவதுதான் இந்தப் பிரசுரத்தின் நோக்கம்.***

இந்திய அரசானது தனது பிரச்சார சாதனங்களைப் பயன் படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக ஒரு திட்டமிட்ட விசைப் பிரச்சாரத்தை கேற்கொண்டு வருவது யாவரும் அறிந்ததே. தமிழ் மக்களின் உரிமைக்குரலாக விளங்கி வந்த பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டைப் போட்டு விட்டு உலகப் பத்திரிகையாளர்களின் வருகையைத் தடை செய்துவிட்டு, உண்மையை உலகிற்கு இருட்டடிப்பு செய்து கொண்டு, இந்திய அரசு தனது பொய்ப்பிரச்சார யுத்தத்தையும் எம்மீது தொடுத்துள்ளது. எமது விடுதலை இயக்கத்திற்கு எதிரான இராணுவ நடவடிக்கையை நியாயப் படுத்துவதோடு, எமது மக்கள் மீது சுமத்தப்பட்ட துன்பங்களுக்கு எல்லாம் எம்மையே காரண கர்த்தாக்களாகக் காட்டி, மக்களிடம் இருந்து எம்மை, அந்நியப்படுத்தி மக்கள் நலனில் அக்கறை அற்ற ஒரு மக்கள் விரோத சக்தியாக
எம்மை சித்தரித்துக் காட்டுவதே இந்தியப் பிரச்சாரத்தின் நோக்கம். இந்தத் திட்டமிட்ட பொய்ப் பிரச்சாரத்திற்குச் சவாலான ஒரு உண்மை விளக்கமாக, இந்த அறிக்கையை நாம் மக்கள் முன்னிலையில் வைக்கின்றோம்.

முதலில் இந்திய அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் மத்தியிலான உறவு பற்றியும். இந்த உறவில் காலத்துக்குக் காலம் ஏற்பட்டு வந்த முரண்பாடு பற்றியும், இந்த முரண்பாடுகள் கூர்மையடைந்து இறுதியில் மோதலாக வெடித்ததின் காரணங்கள் பற்றியும் இங்கு எடுத்து விளக்க விரும்புகிறோம்.

1977 ஆம் ஆண்டு ஆட்சிபீடம் ஏறிய ஜெயவர்த்தனா அரசு தமிழீழ மக்களுக்கு எதிரான இன ஒடுக்குமுறையைக் கூர்மைப் படுத்தியதுடன் தமது வெளிவிவகாரக் கொள்கையையும் மேற்கத்தைய முதலாளித்துவத்தின் நலன்களுக்குச் சார்பாக நெறிப்படுத்தியது. இந்தியப் பிராந்திய வல்லாட்சியின் பிடியில் இருந்து விடுபட்டு மேற்கத்தைய ஏகாதிபத்தியக் கூட்டணியின் அடிவருடி நாடாகத் தன்னை ஆக்கிக் கொள்வதால் தனது பொருளாதாரத்தையும், முதலாளித்துவப் பாதையில் வளப்படுத்துவதோடு, தமிழரை இனரீதியாக ஒழித்துக்கட்டவும் வாய்ப்பாக அமையுமென ஜெயவர்த்தனா அரசு கருதியது. இதன் அடிப்படையில் உருவான இலங்கை அரசின் இந்தப் புதிய வெளிவிவகாரக் கொள்கை இந்தியப் பிராந்திய வல்லாதிக்கத்திற்கும், பூகோள அரசியல் நலன்களுக்கும் அச்சுறுத்தலாக அமைந்தது. 1983 ஜுலையில் இனப் பூகம்பமும், அதனையடுத்து ஜெயவர்த்தனா மேற்கத்தைய ஏகாதிபத்திய நாசகார சக்திகளின் உதவியை நாடியதும் இந்தியாவிற்கு மேலும் அச்சத்தை ஊட்டியது. இந்தச் சூழ்நிலையிற் தான் இந்திய அரசு ஈழத்தமிழினத் தேசிய இனப் பிரச்சனையில் தலையிட்டது. வெளிப்படையாக இராஜதந்திர ரீதியாகவும், மறைமுகமாக இராணுவ ரீதியாகவும் இந்தத் தலையீடு அமைந்தது. மத்தியத்தம் என்ற போர்வையில் கொழும்பில் பேச்சுக்களை ஆரம்பித்த அதே வேளை, மறைமுகைமாக தமிழீழப் போராளிகள் அமைப்புக்களுக்கு இராணுவப் பயிற்சியும், ஆயுதங்களும் வழங்கி ஆயதப் போராட்டத்தை விரிவுபடுத்தவும் இந்தியா திட்டம் தீட்டியது. இந்தியாவின் இந்தத் தலையீடு ஆனது தமிழீழ மக்களின் நலன்களைப் பேணி அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் நோக்குடன் மேற்கொள்ளப் படவில்லை. ஆயுதப்போராட்டத்தை விஸ்தரித்து, இன நெருக்கடியை மேலும் கூர்மையடையச் செய்து, போராளி அமைப்புக்கள் மூலம் இராணுவ அழுத்தத்தைப் பிரயோகித்து, இராஜதந்திர ரீதியாக ஜெயவர்த்தனா அரசை வென்றெடுத்து, இலங்கையைத் தனது ஆதிக்க வியூகத்துக்குள் கொண்டு வருவதே இந்தியாவின் நோக்கமாக இருந்தது. அதாவது, ஈழத்தமிழர் பிரச்சனையைத் தனது வல்லாதிக்கத்தின் நலன்களுக்குப் பயன் படுத்த இந்திய அரசு முயன்றது.

தமிழீழப் போராளிகளுக்கான இந்திய இராணுவப் பயிற்சித் திட்டத்தையும், முன்னாள் பாரதப் பிரமரான இந்திரா காந்தி அம்மையார் இந்திய உளவுத்தாபனமாகிய "ரா"விடம் கையளித்தார். இந்த உளவுத்தாபன அதிகாரிகள் தன்னிச்சையாகச் செய்த சில செயல்கள், போராளி அமைப்புக்களை பிரிவு படுத்தி, மோதவிட்டு ஒரே கட்டுக்கோப்பான தேசிய விடுதலை இயக்கம் உருவாகாமல் தடுத்ததுடன், போராளி அமைப்புக்களை இந்திய அரசின் முழுக் கட்டுப்பாட்டின் கீழுள்ள கூலிப்படைகளாகச் செயல்படச் செய்வதாகவும் அமைந்தன.

இவர்கள் கையாண்ட இந்த யுக்திகள் எமது இயக்கத்திற்கும் "ரா"விற்கும் மத்தியில் விரிசல்களை உண்டுபண்ணியது. இந்தச் சதி வேலைகளுக்கு "ரா" விற்கு உறுதுணையாக நின்று செயற்பட்டவர் சந்திரகாசன் என் பதையும் நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இந்திய இராணுவப் பயிற்சித் திட்டத்தை நடைமுறைப் படுத்துவது சம்பந்தமாக "ரா" அதிகாரிகள் சந்திரகாசனுடன் தொடர்பு கொண்டனர். அப்போது சென்னையில் சாமி. ரவிமேனன் எனப்படும் "ரா" அதிகாரிகள் இயங்கி வந்தனர். இவர்கள் சந்திரகாசனின் நண்பர்கள். 1983 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இந்தியப் பயிற்சித்திட்டம் பற்றி சந்திரகாசனுக்கு அறிவிக்கப்பட்டது. விடுதலை அமைப்புக்களைச் சிபாரிசு செய்யும் பொறுப்பும் அவரிடம் கொடுக்கப்பட்டது.

அந்தக் காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே மக்கள் மத்தியில் ஆதரவு பெற்ற ஒரு கட்டுக்கோப்பான விடுதலை அமைப்பாகச் செயற்பட்டு வந்தது. அவ்வேளை எமது இயக்கத்தலைவர் பிரபாகரனும் ஏனைய தளபதிகளும் தமிழீழக் களத்தில் நின்று போராடி மகத்தான இராணுவச் சாதனைகளைப் புரிந்து வந்தனர். இராணுவ, அரசியல் பிரிவுகள் விஸ்தரிக்கப்பட்டு உள்ளூர் பயிற்சிக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு, சர்வதேசரீதியாகக் கிளைகள் திறக்கப்பட்டு, எமது இயக்கம் சுயமான முறையில் இயல்பான வளர்ச்சி கண்டுவந்த காலகட்டத்தில் ஏனைய அமைப்புக்கள் எல்லாம் சிதறுண்டு, செயலிழந்து கிடந்தன. இயக்கத் தலைமைகள் தமிழீழத்தில் இருந்து இடம் பெயர்ந்து தமிழ்நாட்டில் ஒதுங்கி இருந்தன. இந்தச் சூழ் நிலையில்தான் சந்திரகாசனின் சூழ்ச்சிப்படலம் ஆரம்பமாகியது.

தமிழீழ அரசியல் அரங்கில் ஒதுக்கப்பட்ட சந்திரகாசன் இந்தியப் பயிற்சித் திட்டத்தையும் "ரா" வின் நட்புறவையும் பயன்படுத்தி அரசியல் தலைமைப்பீடத்தைக் கைப்பற்றக் கனவு கண்டார். தனக்குக் கீழ்ப்படியவும், விசுவாசமும் மட்டுமன்றி, தன்னைத் தலைவராக ஏற்றுக்கொள்ளும் அமைப்புக்களை வளர்த்துவிட அவர் திட்டம் தீட்டினார். இந்த வகையில் தமிழீழ விடுதலை இயக்கத்தையும் (டெலோ) அதன் தலைவர் ஸ்ரீசபாரத்தினத்தையும் வளர்த்து விட சந்திரகாசன் முடிவு செய்தார். அந்தக் காலகட்டத்தில் டெலோ இயக்கம் அமைப்பு வடிவம் எதுவுமற்ற 6 பேரை மட்டும் கொண்ட சிறு குழுவாக, சென்னையில் செயலற்றுக் கிடந்தது... சந்திரகாசனின் தலையீடு செத்துப்போய்க்கிடந்த டெலோவிற்கு மறுவாழ்வை அளித்தது.

ஒரு தெளிவான சித்தாந்தமும் உறுதியான கொள்கைத் திட்டமும் இல்லாத காரணத்தினால் டெலோ இயக்கத்தை முதன்மைப் படுத்தி வளர்த்துவிட "ரா" வும் விரும்பியது. தனித்துவமான கொள்கையும், இலட்சியப் பற்றும் இல்லாத குழு ஒன்றை இராணுவ ரீதியாக வளர்த்துவிட்டு, இந்தியாவின் கூலிப் படையாக அதை இயங்கச் செய்வதே "ரா" வின் நோக்கமாக இருந்தது.

டெலோ இயக்கத்திற்குப் பயிற்சித் திட்டம் ஆரம்பமானது. அந்தக் காலகட்டத்தில் ஜுலை இனக்கலவரமும் சிங்களப் பேரினவாதத்தின் வெறியாட்டமும் தமிழீழத்தில் விடுதலை எழுச்சியைத் தூண்டிவிட்டிருந்தது. சிங்கள அரசின் மீது வெறுப்பும், ஆத்திரமும் கொண்ட தமிழ் இளைஞர் சமுதாயம் ஆயுதப்போராட்டத்தில் குதிக்க ஆயத்தமாக இருந்தது. இந்தப் புரட்சிகரச் சூழ்நிலையைப் பயன்படுத்தி டெலோ இயக்கம் தனது ஆள் திரட்டும் வேலையை ஆரம்பித்தது. எந்தவொரு தேர்வு ஒழுங்கு முறையுமின்றி, கண்டபடி ஆள் சேகரிப்பு நடந்தது. இதனால் சமூகவிரோத சக்திகளும் இவ் இயக்கத்தில் பெருமளவு ஊடுருவின. ஸ்ரீசபாரத்தினத்தின் இராணுவத் தலைமையின் கீழ் சந்திரகாசன் ஒரு கூலிப்பட்டாளத்தை உருவாக்கினார். இதற்கிடையில் ஈழப்புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்), ஈழப் புரட்சி அமைப்பு (ஈரோஸ்) அணியினரும் சந்திரகாசனிடம் சரணடைந்து பயிற்சித்திட்டத்தில் சேர்ந்து கொண்டனர்.

இந்தியாவின் இந்தத் தலையீடு தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் அதன் இயல்பான பரிணாம வளர்ச்சியையும். அதன் புரட்சிகரத் தன்மையையும் வெகுவாகப் பாதித்தது. விடுதலை அமைப்புக்கள் மத்தியிலான உறுப்பினர் தொகையும், இராணுவ பலமும் தலைகீழாக மாற்றப்பட்டது. செயற்கையான திடீர் வீக்கத்தால் ஈழத்தமிழரின் சுதந்திர இயக்கம் களங்கமுற்றது. ஒழுக்கம், கட்டுப்பாடு அற்ற ஆயுதக்கும்பல்கள் அதிகரித்ததால் அதிகாரம் தலைதூக்கியது. இந்தியாவின் இத் தலையீட்டினால் மிகவும் பாதிக்கப்பட்டது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே.

தமிழீழ ஆயுதப் போராட்டக் களத்தில் இருந்து எம்மை முற்றாக ஒதுக்கிவிட்டு, டெலோவின் இராணுவத் தலைமையில் புதிய கூட்டணி ஒன்றை அமைத்து, தனது அரசியல் அதிகாரத்தை நிலைநிறுத்த முயற்சித்தார் சந்திரகாசன். பிரபாகரனோ, விடுதலைப்புலி இயக்

கத்தினரோ தன்னை ஒருபோதும் தமிழீழ மக்களின் தலைவராக வரித்துக் (ஒப்புக்) கொள்ள மாட்டார்கள் என்பது சந்திரகாசனுக்கு நன்கு தெரியும். விடுதலைப் புலிகளின் சுயமான போக்கும், நேர்மையும், கொள்கை உறுதியும், வளைந்து கொடாத தன்மையும், தனது நாசகார அரசியல் சூழ்ச்சிக்கு உகந்த பண்புகளல்ல என உணர்ந்து கொண்ட சந்திரகாசன், விடுதலைப்புலிகளை இந்தியப் பயிற்சித் திட்டத்தில் இருந்து ஒதுக்கிவிட முயற்சித்ததோடு டெலோ இயக்கம் மூலம் புலிகளை அழித்து விடலாம் எனவும் திட்டம் தீட்டினார். சந்திரகாசனின் சூத்திரதாரப் பொறிக்கிடங்குக்குள் சிக்கிவிட நாம் விரும்பவில்லை. அதேவேளை இந்தியாவின் கூலிப்படையாகவும் இயங்க நாம் தயாராக இல்லை. ஆயினும் இந்தியாவின் உதவியை நாம் பெறாது போனால் ஏனைய அமைப்புக்களின் இராணுவப் பலத்துக்கு ஈடுகொடுக்க முடியாது நாம் அழிந்து போக நேரிடும். எமது அழிவு. தமிழீழ மக்களின் சுதந்திரப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதாகமுடியும். எனவே, இந்திய அரசு மிகவும் காலம் தாழ்த்தி எம்மை அணுகி, எமக்கு வரையறுக்கப்பட்ட அளவில் உதவி தர முன் வந்ததை நாம் ஏற்றுக் கொண்டோம். எமக்கு வரையறுக்கப்பட்ட அளவில் உதவி கிடைத்தது. ஆயினும், நாம் எமது சொந்த முயற்சியினால் பயிற்சி முகாம்களை அமைத்து, இயக்க வீரர்களுக்குப் பயிற்சிகளை வழங்கி, இராணுவ அமைப்பை விஸ்தரித்தோம். இந்தியாவை எதிர்பாராது எமது சுயமுயற்சியான திட்டங்களின் மூலம் எமது ஆயுத பலத்தையும் பெருக்கிக் கொண்டோம். இதனால் இராணுவ சமபலத்தை மாற்றி அமைத்து விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தும் "ரா" வின் சதித்திட்டத்தை நாம் முறியடிக்க முடிந்தது.

இதற்கிடையில் டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ் அணியினர் சந்திரகாசனின் தூண்டுதலின் பேரில் ஒரு கூட்டணியை அமைத்துக்கொண்டனர். ஈழ தேசிய விடுதலை முன்னணி (ஈ.என்.எல்.எப்) என இதற்குப் பெயர் சூட்டப்பட்டது. தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தனிமையாக ஒதுக்கிவிட்டு, தமிழர் விடுதலைக் கூட்டணி (டி.யு.எல்.எப்), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (பிளாட்) மற்றும் சகல விடுதலை அமைப்புக்களையும் இந்த முக்கூட்டு முன்னணியுடன் சேர்த்து, ஈழத்தமிழர் தேசியக் கவுன்சில் ஒன்றை உருவாக்கி அதன் தலைமைப் பீடத்தைக் கைப்பற்றவும் சந்திரகாசன் முனைந்து வந்தார். இதற்கான பேச்சுக்களும் சென்னையில் நடைபெற்றன. இந்தத் தேசியக் கவுன்சில்களுக்கான (விதிமுறை) யாப்பு ஒன்றும் தயாரிக்கப்பட்டது. இதன் பின்னணியில் "ரா" வும் செயற் பட்டது. அமெரிக்காவில் இருந்த சில தமிழ்ப் பிரமுகர்களும் இந்தத் தேசிய சபையை உருவாக்கி சந்திரகாசனுக்கு கிரீடம் சூட்ட அயராது முயன்றனர்.

தமிழ்ப் போராளி அமைப்புக்களைப் பகடைக் காய்களாக வைத்து நடைபெற்ற இந்த அரசியல் சதுரங்க ஆட்டத்தை முறியடித்து, அமெரிக்க ஏகாதிபத்திய தாசர்களின் ஊடுருவல்களைத் தடுத்து நிறுத்தி, விடுதலை அமைப்புக்களிடையே விரிசலையும் மோதலையும் தவிர்த்து, இந்தியாவை எதிர்பார்க்கும் நிலையில் இருந்து விடுபட்டு போராட்டத்தை முன்னெடுக்க நாம் முடிவு செய்தோம். இந்த உன்னத நோக்குடன் நாம் ஈழத் தேசிய விடுதலை முன்னணி அமைப்புடன் கூட்டுறவாகச் செயற்பட்டு, ஐக்கியத்தையும் புரிந்துணர்வையும் வளர்க்க முயன்றோம். ஈழத் தேசிய விடுதலை முன்னணித் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தி, சந்திரகாசனுக்கும் அமெரிக்க ஏகாதிபத்திய தாசர்களுக்கும் மத்தியில் உள்ள தொடர்புகளைச் சுட்டிக்காட்டி. சந்திரகாசனின் ஆதிக்கத்தில் இருந்து முற்றாக விடுபட்டு, சோசலிசப் புரட்சிப் பாதையில் போராட்டத்தை முன்னெடுக்க வரும்படி வலியுறுத்தி வந்தோம். ஆனால் டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற அமைப்புக்கள் அரசியல் ஆலொசனை, நிதியுதவி போன்ற விஷயங்களில் சந்திரகாசனிடம் தங்கி இருந்ததால் எமக்கு மத்தியில் முரண்பாடுகள் தலைதூக்கின. விடுதலைப் புலிகளுக்கும் ஏனைய அமைப்புக்களுக்கும் மத்தியில் ஒற்றுமை ஏற்படாமல் பார்த்துக்கொள்வதில் சந்திரகாசன் ஒருபுறமும், "ரா" மறுபுறமுமாக பகீரத முயற்சிகள் செய்து வந்தனர். இதற்கிடையில் தமிழீழத்தில் டெலோ இயக்கத்தினரின் அட்டகாசங்களும் அடாவடித்தனங்களும் பெருகத் தொடங்கின. எமது இயக்க உறுப்பினர்களும், பொதுமக்களும் மிக மோசமாகத் துன்புறுத்தப்பட்டனர். டெலோ தலைமைப்பீடத்திடம் நாம் தொடர்ந்து முறையிட்டும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ஒரு சகோதரத்துவ யுத்தத்திற்கு "ரா" வும் தூபமிட்டு வந்தது.

எமது உடன்பிறப்புக்கள் "ரா" வின் நாசகாரத் திட்டத்தை உணர்ந்து கொள்ளாது எம்மோடு மோதத் துணிந்தனர். இந்திய அரசு தமக்குப் பக்கபலமாக நிற்பதாகக் கருதிக்கொண்டு எம்மை ஒழித்துக்கட்ட முற்பட்டனர். மோதல் வெடித்தது. எமது வீரர்களின் போர்த்திறமையாலும், மக்களின் ஆதரவு காரணமாகவும் டெலோ இயக்கத்தினரை நாம் நிராயுத பாணிகளாக்க முடிந்தது. "ரா" எதிர்பாராத எமது வெற்றியும், டெலோவின் வீழ்ச்சியும் இந்திய உளவுத்தாபனத்திற்கும் எமக்கும் மத்தியில் முரண்பாட்டைக் கூர்மைப்படுத்தியது.

"ரா" எனப்படும் உளவு ஸ்தாபனம் இந்திய அரச அமைப்பில் ஒரு முக்கிய அம்சம். இந்திய வெளிவிவகாரக் கொள்கையையே இந்த உளவு ஸ்தாபனம் பிரதிபலிக்கின்றது. பாரதப் பிரதமரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இது இயங்குவதால் இந்திய அரச கருவியாகவே இந்த ஸ்தாபனம் செயல்படுகின்றது. எனவே "ரா" வின் செயல்பாடுகளை இந்திய வெளிவிவகாரக் கொள்கையின் பிரதிபலிப்பாகவே நாம் கருதவேண்டும். எனினும் இந்த உளவு ஸ்தாபனத்தின் உயர் அதிகாரிகள் சிலர் தன்னிச்சையாக தமது விருப்பு வெறுப்பின்படி நடந்து கொண்டனர். சிலர் சி.ஐ.ஏ. யுடன் தொடர்பு கொண்டு தேசத்துரோகமும் புரிந்தனர். டி.ஐ.ஜி. உன்னிகிருஷ்ணன் இதற்கு நல்லகதார் எடுத்துக்காட்டு. கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்நாட்டில் செயல்பட்டு வந்த இவர், தமிழீழப் போராளி அமைப்புகளுடனான தொடர்புகளுக்குப் பொறுப்பாக இருந்தார். போராளிகளுக்கு வழங்கப்படும் பயிற்சி, கொடுக்கப்படும் ஆயுதங்கள், இயக்கங்களின் ஆட்பலம், போர்முறைத் திட்டங்கள், யுக்திகள் இப்படியாக சகல தகவல்களையும் இவர் இலங்கை அரசுக்குக் கொடுத்து வந்தார். இந்தத் தகவல்களின் அடிப்படையில்தான் சிங்கள ஆயுதப்படைகள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தமது படையெடுப்புத் திட்டங்களை உருவாக்கின. சில மாதங்களுக்கு முன்புதான்.

உன்னிகிருஷ்ணன் சி.ஐ.ஏ. ஏஜன்ட் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு இப்போது டெல்லியில் சிறை வைக்கப்பட்டிருக்கின்றார். இந்திய அரசுடன் நட்புறவைப் பலப்படுத்தி இந்தியாவின் ஒரு நேச சக்தியாகச் செயல்படவே நாம் விரும்புகின்றோம். பாரதம் தென்னாசியாவில் ஒரு பெரிய வல்லரசு. இந்துமா சமுத்திரத்திலும், அதில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கைத் தீவிலும் இந்தியாவின் பூககாள அக்கறையும் தேசிய நலன்களும் உள்ளன என்பது எமக்குத் தெரியாதது அல்ல. நாம் இந்தியாவின் தேசிய நலன்களையோ, பூகோள அரசியல் அபிலாசைகளையோ கௌரவிக்கத் தவறவில்லை. அப்படி இருந்தும் இந்திய அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தனது தேசிய நலனுக்கு முரணான சக்தியாகக் கணித்து எம்மை ஒழித்துக் கட்ட முயற்சிப்பது ஏன் என்ற கேள்வி இங்கு எழுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழீழ மக்களின் தேசிய நலனைப் பிரதிபலிக்கும் ஒரு விடுதலை அமைப்பான வடிவத்தைப் பெற்றுள்ளது: இந்த நலன்களைப் பேணுவதிலும் உறுதியாக இருக்கின்றது. தமிழீழ மக்களின் தாயகம், இறைமை, சுயநிர்ணய உரிமை போன்ற அடிப்படையான கோரிக்கைகளில் எமது இயக்கம் இறுக்கமான நிலையைக் கடைப்பிடித்து வருகின்றது. ஆனால் இந்திய அரசோ தமிழீழ மக்களின் தேசிய நலனில், தேசிய ஒருமைப்பாட்டில், தேசியத் தாயகத்தில் அக்கறை எதுவும் கொண்டிருக்கவில்லை. மாறாக இந்த அடிப்படைக் கோரிக்கைகளை எதிர்க்கின்றது. தமிழீழம், தாயகம், சுயநிர்ணய உரிமைக் கோட்பாடுகளை மறுக்கின்றது: சமஷ்டி அமைப்பைக்கூட முன்னெடுக்கத் தயங்குகின்றது. ஒற்றையாட்சியின் கீழ் பெரும்பான்மையினரின் ஆட்சி அதிகாரத்தின் கீழ் குறைந்தபட்ச சலுகைகளுடன் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண இந்தியா முயல்கிறது. அதாவது. நீங்கள் இனவாத ஆளும் வர்க்கத்தின் நலன்களைப் பேணி, இலங்கை அரசைத் தனது ஆதிக்கத்தின் கீழ் வைத்துக் கொள்வதையே விரும்புகின்றது. இதனால் தனது தேசிய, பூகோள நலன்களைப் பேணலாம் என இந்தியா கருதுகின்றது. இந்தக் கொள்கை அடிப்படையில்தான் இந்திய அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் மத்தியில் முரண்பாடு எழுந்தது.

தமிழீழ மக்களின் இனப்பிரச்சினை ஒரு தேசிய விடுதலைப் போராட்டமாக வளர்ந்து அரசியல் வடிவம் பெறுவதையும். இப்போராட்டத்தை முன்னெடுக்க ஒரு தேசிய விடுதலை இயக்கம் வளர்வதையும் இந்தியா விரும்பவில்லை. விடுதலைப் புலிகள் இயக்கம் இப்பாதையில் வீறுநடை போட்டு வளருவதைக் கண்டு இந்தியா அஞ்சியது. இந்த வளர்ச்சியைத் தடுக்கவும், எமது இயக்கத்தைப் பவவீனப்படுத்தவுமே ஏனைய அமைப்புக்கள் ஆயுதரீதியில் வளர்க்கப்பட்டு எமக்கு எதிரான சக்திகளாக உருவாக்கப்பட்டன. இந்த தந்திரோபாயங்களை உணராத எமது உடன்பிறப்புக்கள் இந்தியாவின் ஏவல் நாய்களாகச் செயல்பட்டு, எமது இயக்கத்தை அழித்துவிடவும் துணிந்தனர். இந்தச் சூழ்நிலையில் டெலோ இயக்கம் எம்மால் நிராயுத பாணியாக்கப்பட்டது. இந்தியாவிற்கு அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் கொடுத்தது. எமது உடன் பிறப்புக்களைக் கொண்டே எம்மை ஒழித்துக்கட்ட வேண்டும் என உறுதி பூண்ட இந்திய அரசு ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்திற்குப் பெருமளவு நவீன ஆயுதங்களை வழங்கியது. சகோதரத்துவ யுத்தங்ளை, முடுக்கி விடுவதற்கு இந்தியா முயன்றதில் வேறு காரணங்களும் உண்டு. விடுதலைப் போராளிகள் ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்கின்றார்கள் என்ற பிரச்சாரத்தை முடுக்கி விட்டு, விடுதலை அமைப்புக்கள் மீது மக்களுக்கு வெறுப்பையும். விரக்தியையும் உண்டு பண்ணவும் இந்தியா திட்டமிட்டது. அதன்படியே இயக்க மோதல்கள் வெடிக்கும் பொழுது இந்தப் பிரச்சார யுக்தியையும் கையாண்டது. "ரா" விடம் இருந்து ஏராமான ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும் பெற்றுக்கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தினர் விடுதலைப்புலிகளை இராணுவரீதியாக ஒழித்துக்கட்டத் திட்டம் வகுத்தனர். இந்தச் சதித்திட்டம் பற்றி எமக்குச் சான்றுகள் கிடைத்ததால் நாம் உடனடியாக இந்த இயக்கம் மீது இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு அவர்களையும் நிராயுதபாணியாக்கினோம். இதனையடுத்து விடுதலைப்புலிகள் இயக்கம் பலம் வாய்ந்த தனி அமைப்பாகத் தமிழீழத்தில் மக்களின் ஆதரவோடு வளர்ந்தது. எம்மைப் பலவீனப்படுத்தி, ஒழித்துக் கட்ட "ரா" வகுத்த சூழ்ச்சித்திட்டங்களை முறியடித்து வரும் அதேவேளை, தமிழீழ யுத்தக்களத்திலும் நாம் எதிரியுடன் போராடி எமது மக்களைப் பாதுகாக்கும் பணியிலும் தீவிரமாக ஈடுபட்டிருந்தோம். எமது வீரத்தையும், தியாகத்தையும், விடுதலைப் பற்றையும் கண்டு வியந்த எமது மக்கள் எமது இயக்கத்திற்குப் பேராதரவு வழங்கினர். ஒரு தேசிய இயக்மாகப் பரந்துபட்ட, வெகுஜனத்தின் ஆதரவுடன் நாம் வளர்ந்து வருவது இந்திய அரசுக்கு எம்மீது எரிச்சலைத் தூண்டியது. எம்மை ஒழித்துக்கட்டத் தகுந்த தருணத்தையும், சூழ்நிலைகளையும் இந்தியா எதிர்பார்த்துக் காத்திருந்தது.

இவ்வாண்டு ஜனவரியில் சிங்கள இனவாத அரசு யாழ் குடாநாட்டில் பொருளாதார முற்றுகையை ஏற்படுத்தியதுடன் வடக்கிலும் கிழக்கிலும் பெரியளவிலான இராணுவப்படையெடுப்பையும் மேற்கொண்டது. வடக்கில் மட்டும் 20,000 துருப்புக்கள் வரை யுத்தத்தில் குதித்தன. எமது கெரில்லா அணிகள் பல்வேறு அரங்குகளில் சிங்கள ஆயுதப்படையினரை எதிர்கொண்டு வீரவேசத்துடன் போர் புரிந்து வந்தன. ஆயுதங்கள், வெடி மருந்துகள் பற்றாக்குறையுடன் நாம் எதிரியைச் சமாளித்துக் கொண்டிருந்தோம். எதிரியின் ஆகாயக் குண்டுவீச்சுக்கள், "பீரங்கி மோட்டார்" செல் தாக்குதல்களிலும் இராணுவ வெறியாட்டத்திலும் பல நூற்றுக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் மடிந்தவண்ணம் இருந்தனர். இந்த இக்கட்டான யுத்தச் சூழ்நிலையில் நாம் இந்திய அரசிடம் ஆயுத உதவியை நாடினோம். எமது மக்கள் இனப்படு கொலைக்கு இலக்காகி வருகின்றார்கள் என்பதைச் சுட்டிக் காட்டி, எமது மக்களைப் பாதுகாப்பதற்கு உதவி செய்யுமாறு நாம் பாரதத்திடம் பல தடவைகள் கோரிக்கைகளை விடுத்தோம். எமது கோரிக்கைகளைப் பரிசீலனை செய்வதாகக் கூறிக் கொண்ட பாரதம் மௌனைமாக இருந்தது. நாம் கோரிய ஆயுதப்பட்டியலின் விவரங்கள், எமது வெடிமருந்துப் பற்றாக்குறைகள் போன்ற முக்கிய இராணுவத் தகவல்களைச் சேகரித்து "ரா" அதிகாரி திரு உன்னிகிருஷ்ணன் இலங்கை அரசிற்குச் சமர்ப்பித்தார். இந்தத் தகவல்களின் அடிப்படையில் சிங்கள இராணுவம் தனது போர் உபாயங்கமள வகுத்து, ஆக்கிரமிப்பு யுத்தத்தைத் தீவிரப்படுத்தியது.

இந்த இக்கட்டான யுத்தச் சூழ் நிலையில், களத்தில் நின்று போராடிய எமது இயக்கத்திற்கு ஆயுத உதவியளித்து, எமது மக்களைப் பாதுகாக்கத் தயங்கிய இந்தியா, தமிழ்நாட்டில் செயல் இழந்து சிதறிக்கிடந்த சமூக விரோதக் கும்பல்களுக்கு பயிற்சியும் ஆயுதங்களும் வழங்க முன்வந்தது. இந்த நடவடிக்கையானது எமக்கு இந்தியா மீதிருந்த நம்பிக்கையைத் தகர்த்தது. இதிலிருந்து இந்திய அரசின் நோக்கம் எமக்குத் தெளிவாகியது.

விடுதமலப்புலிகள் இயக்கம் ஒரு பலம் வாய்ந்த இராணுவ சக்தியாக உருவெடுத்து சிங்கள ஆயுதப்படையினரைத் தோற்கடிப்பதை இந்தியா விரும்பவில்லை. சிங்கள ஆயுதப்படைகள் புலிகளை அழித்து இராணுவரீதியாகப் பலவீனப்படுத்தவேண்டும்:

புலிகளால் மக்களைப் பாதுகாக்க முடியாத சூழ்நிலை உருவாக வேண்டும் மக்கள் மத்தியில் புலிகள் மீதிருந்த நம்பிக்கை தளர வேண்டும் அந்தச் சூழ்நிலையில் தமிழீழ இரட்சகர் என்ற போர்வையில் நேரடியாக இராணுவரீதியாகத் தான் தலையிட வேண்டும் இப்படித்தான் இந்திய அரசு திட்டமிட்டது. அதே சமயம், இந்தியா ஜெயவர்த்தனா அரசை மிரட்டிப் பயமுறுத்தியது. ஏவுகணைகள் உட்பட நவீன ஆயுதங்கள் புலிகளுக்கு வழங்கி சிங்கள ஆயுதப்படைகளை முறியடிப்போம் பெரிய அழிவுகளை உண்டு பண்ணுவோம்; எந்த ஒரு ஏகாதிபத்திய சக்திகளிடமிருந்து எந்தவித உதவியைப் பெற்றாலும் யுத்தத்தில் வெல்ல முடியாது செய்வோம் என்ற ரீதியில் ஜெயவர்த்தனாவும் இந்திய அரசால் மிரட்டப்பட்டார். இந்தியாவுடன் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டால் தமிழீழப் போராட்டத்திற்கு முடிவு கட்டி, இலங்கையின் ஆளும்வர்க்க நலன்கள் பாதிக்கப்படாதவாறு பிரச்சனையை இந்தியா தீர்த்து வைக்கும் எனவும், ஜெயவர்த்தனாவுக்குத் தெரிவிக்கப்பட்டது. வட மாராட்சி "ஆபரேஷன் லிபரேஷன்" வெற்றியளித்ததாக மகிழ்ச்சியும் உற்சாகமும் பெற்றிருந்த ஜெயவர்த்தனா, புலிகளின் நெல்லியடி தாக்குதலினால் மனமுடைந்து போனார். (தற் கொலைப் படையைச் சார்ந்த கரும்புலி காப்டன் மில்லர், தன்னை அர்ப்பணித்து நடத்திய தாக்குதலில், நெல்லியடி இராணுவ முகாமின் மூன்று மாடிக் கட்டிடம் முற்றாகத் தகர்க்கப்பட்டதுடன், எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட சிங்கள இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.) அதைத் தொடர்ந்து இந்தியாவும் விமானம் மூலம் உணவுப்பொட்டலங்களைப் போட்டு இலங்கை அரசை மிரட்டியது. இந்தச் சூழ்நிலையில் தான் இந்தியாவுடன் ஒப்பந்தத்தைச் செய்து கொள்ள ஜெயவர்த்தனா இணங்கினார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் பற்றி விமர்சிப்பதற்கு முன்னர் இலங்கையில் இராணுவப் படை யெடுப்பையும், அதுபற்றிய இந்தியாவின் நிலைபாட்டையும் இங்கு கவனிப்பது முக்கியம். சிங்கள இனவாத அரசு தனது முழு இராணுவப் பலத்தையும் பிரயோகித்து தமிழினப் படுகொலையைத் தீவிரப்படுத்தியபோது இந்திய அரசு எந்த விதமான உருப்படியான நட வடிக்கையையும் எடுக்காது. வெறும் கண்டன அறிக்கைகளை மட்டும் வெளியிட்டுவிட்டு மௌனம் சாதித்தது. தமிழரின் பேரழிவையும் பொருட்படுத்தாது ஜெயவர்த்தனாவின் அன்பைப் பேணுவதில் இந்தியா சிரத்தை காட்டியது. தமிழரின் நலனில் இந்தியா அக்கறை கொண்டிருந்தால் விடுதலைப் புலிகளுக்கு ஆயுத உதவி வழங்கித் தமிழ் மக்களின் அழிவைத் தடுத்திருக்க முடியும். ஆனால் இந்தியா அதை விரும்பவில்லை. விடுதலைப் புலிகளின் இராணுவ வெற்றிக்கு வழி வகுத்துக் கொடுத்தால் தனது இராணுவத் தலையீட்டுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என இந்தியா கருதியது. ஒரு அப்பட்டமான இனப்படுகொலையைத் தடுக்க வேண்டுமென்ற மனிதாபிமான நிலைபாட்டைக் கைவிட்டு, தனது பூகோள நலன்களில் மட்டுமே இந்திய அரசு அக்கறை காட்டியது என்பதை எமது மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

இந்த ஒப்பந்தமானது இந்தியாவினதும் இலங்கையினதும் ஆளும் வர்க்க நலன்களை மட்டுமே பேணுவதால் ராஜீவ் காந்தியும், ஜெயவர்த்தனாவும் ஒருவரை ஒருவர் புகழ்ந்துரைத்துக் கொள்வதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. ஜெவர்த்தனாவைப் பொறுத்தவரை இது அவருக்குக் கிட்டிய ஒரு பெரிய இராஜதந்திர வெற்றியாகும். தமிழீழக் கோரிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து, விடுதலைப் புலிகளை முழுமையாக நிராயுத பாணிகளாக்க இந்தியா முன் வந்தமை சிங்கள இனவாத ஆளும் வர்க்கத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது.

**(மிகுதி அடுத்த இதழில 01.11.2021)**

# நவம்பர் - 27

# மாவீரர் நாள்



" உங்கள் சுவடுகளில் – தொடரும்
எங்கள் பாதங்கள்... "